மிழ் புதுவருஷ வெளியீடு

104/2.54

2613

திரையுலகிற்கு
திகைப்பூட்டும்
தீர முயற்சி!

சிவாஜி கணேசன்
பண்டரி பாய்

...நடிக்கும்...

அந்த நாள்

ஒரு புதுமைச் சித்திரம்

AVM
புரொடக்ஷன்ஸ்

"Murphy Radio"

மர்பி ரேடியோ - மற்றெதையும்விடச் சிறந்தது



ரொக்கம் அல்லது தவணைகளில் பணம் செலுத்தலாம். ஏ.஍ி. அல்லது ஏ. ஍ி. / டி. ஍ி. அல்லது பாட்டரி மூலம் இயங்கக் கூடியது. ரூ. 215 முதல் எல்லா மாடல்களும் கிடைக்கும். பழைய செட்டுகளையும் மாற்றிக் கொள்ளலாம்.

JAY-O-PHONE CO.,

No. 13, Mint Street (Near Central Station), Madras-3.

ஸ்ரீ அம்பாள்...
ஆபீஸர்ஸ் பொடி

LRS.

ஸ்ரீ
அம்பாள் அன் கோ

P.B.No. 3 ... ...மதருஸ்.

Office : 201, Mint Street, Madras-1.

படம் 12

காட்சி 8

பேசும் படம்

★ ஏப்ரல் 1954

1.	ஸ்டூடியோ விஜயம் ...	4
2.	செய்திச் சுருள் ..	11
3.	சிவாஜி கணேசன்–கிரிஜா மூவர்ணப்படம் ...	18
4.	கே. ஆர். ராமசாமி–பத்மினி மூவர்ணப்படம்...	19
5.	மனோகரா – திரைக்கதை, வசனம் ...	21
6.	டி. கே. பாலசந்திரன்–வாழ்க்கைச் சித்திரம்...	29
7.	சொர்க்கவாசல் – இருவர்ணப் பட அநுபந்தம்	37
8.	கற்கோட்டை–திரைக்கதை, வசனம் ...	45
9.	கேள்வி—பதில் ...	61
10.	நான் ரஸித்த காட்சி ...	67
11.	தபால் பெட்டி ...	75
12.	கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி– படக்காட்சிகள்	77
13.	கட்டாயம் வெற்றி – வித்யாவதி ..	113

PESUM PADAM, Tamil Monthly Magazine: Printed and Published by T. V. Ramanath, at RAMANATH PRESS, 188, Royapettah High Road, Madras - 14. (Phone: 86001) Proprietors: RAMANATH PUBLICATIONS. Managing Editor: T. V. Ramanath. Sole Agents for Ceylon: Mohan & Co., Ltd., 66, First Cross Street, Colombo. Sole Agent for Malaya: P. Sivaguru, 27, Scott Road, Kuala Lumpur and 8, China Street, Penang.

Editorial & Publication Offices:

188, Royapettah High Road, Madras - 14

MEMBER: AUDIT BUREAU OF CIRCULATIONS LTD.

ஸ்டூடியோ விஜயம்

ஏ. வி. எம். ''பெண்'' நடனக்காட்சி ஜோடனை

''பட உலகம் படுத்து விட்டது; தொழில் மந்தமாகி விட்டது. இனி பட உலகின் கதி அதோ கதிதான்'' என்றே பலரும் தீர்மானித்து விட்டார்கள். ஆனால் அந்த நிலையை மாற்றி தலையெடுக்கச் செய்தது ஜெமினியின் 'தெய்வீக' சித்திரமான ''ஔவையார்.'' பிறகு தூக்கி நிறுத்தி வைத்த குச்சியைப்போல் திரும்பவும் விழுந்தது படக்கலை.

மனோகரா வந்தது. கனல் தெறிக்கும் வசனமும், அற்புதமான காட்சி ஜோடனைகளும், மிகச் சிறந்த நடிப்பும் அப்படத்திற்கு மக்களிடையே அமோக ஆதரவை ஏற்படுத்தி விட்டன. கனல் தெறிக்கும் வசனங்கள் தகுந்த இடங்களில் பிரயோகிக்கப் பட்டால் படம் சோபிக்கும் என்பதை மனோகரா நிரூபித்து விட்டது. அத்துடன் பட உலகிற்குப் புது



''கட்டாயக்கல்யாணம்''—ரஞ்சன், நம்பியார்



"அந்த நாள்"—
ஜாவர், மைனா,
பண்டரி

மவுசையும் உண்டாக்கித் தூக்கி நிறுத்தி விட்டது. அமத விரைவில் வேரூன்றச் செய்யாமல் இப்படி இரண்டுங் கெட்டானாக வைத்திருக்கலாமா?

கூடாது என்றுதான் யாவரும சொல்வார்கள் எல்லோர் ஆசையும் அதுதான். இதெல்லாம் எதற்காகச் சொல்லுகிறேனென்றால், நிற்கும் பட உலகை வேரூன்றும்படிச் செய்ய ஒரு படம் காத்திருக்கிறது. ஆமாம், பரிமளம் பிக்சர்ஸாரின் 'சொர்க்க வாசலைத்தான் குறிப்பிடுகிறேன். இந்தப்படம் வருகிற ஏப்ரல் மாதத்தில் வருகிறது. அன்றுமுதல் பட உலகுக்கும சரியான சுக்கிரதசை ஆரம்பமாகிறதென்றே சொல்ல வேண்டும். ஸி. என். அண்ணாதுரை இடைவேளைக்குப் பின் இதற்கு அற்புதமாக வசனமெழுதியிருக்கிறார். அருமையான வசனங்களை அளவோடு அவசியமறிந்து அமைத்திருக்கிறார் அவர். எதுகை மோனையெல்லாம் எவ்வளவு பிரமாதமாக இருக்கின்றன தெரியுமா? அறிவின் தூண்டுகோலான அந்த அனல் கக்கும் அடுக்கு வசனங்கள்; நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமியின் மிடுக்கு நிறைந்த எடுப்பான நடிப்பு; அஞ்சலியின் கொஞ்சு

'வைரமாலை' தொடுக்கப்படுகிறது



'பரிவர்த்தனை' கதாபாத்திரங்களுக்கிடையே சௌதரி.

மொழி; பதுமைப் பாவை பத்மினியின் அற்புதமான நடிப்பு—எல்லாமாகச் சேர்ந்து 'சொர்க்க வாசலை' ஒரு மகோன்னத சிருஷ்டியாக்கி விடும்.

சென்ற மாத மத்தியில் ரேவதி ஸ்டுடியோவுக்குள் நான் புகுந்தபோது நான் கண்ட காட்சி என்னை ஆச்சர்யத்திலாழ்த்தி விட்டது. இருபுறமும் வரிசையாக தென்னை மரங்களுடன் கூடிய பாதையின் எதிர்க்கோடியிலே கே. ஆர். ராமசாமி 'மேக்-அப்'போடு உட்கார்ந்திருந்தார். அவரருகே பரிமளம் பிக்சர்ஸ் புரொடக்ஷன் எக்ஸிக்யூடிவ் வேலுமணியும் ரேவதி ஸ்ரீநிவாசராகவனும் இருந்தனர். ரேவதி ஸ்டுடியோ நிர்வாகி கிருஷ்ணசாமி முதலியார் சிரித்தபடி, "சொர்க்க வாசலுக்குள்ளே நுழையலாம்னு வந்திங்களா?" என்று கேட்டபோதுதான் ராமசாமி அங்கே வந்ததன் காரணம் புரிந்தது. படத்தை விரைவில் முடித்துவிட வேண்டுமென்பதற்காகச் சில காட்சிகளை ரேவதியில் தயாரித்தார்கள் அவர்கள்.

ஒரு பெரிய ஹால்; பெரிய அரண்மனையின் பிரத்தியேக விடுதியைப் போல் அது காணப்பட்டது. லஸ்தர் விளக்குகளும் கமான் போல் வளைந்திருந்த வாயில்களும் தனி அழகோடு விளங்கின. பஞ்சணை பொன்றின்மேல் தாடியுடன் சாய்ந்து படுத்துக் கொண்டிருந்தான் மதியிழந்த மன்னன் வெற்றிவீரன்! என்ன விநோதமான பெயர் பாருங்கள் இந்த மன்னனுக்கு! வீரத்தின் விவரமறியாத கோழை!

மன்னன் வெற்றிவீரன் மஞ்சத்திலே மனநிம்மதியற்று மல்லாந்து கிடந்தான். அவன் உடல் துடிதுடித்தது. கண்கள் கலங்கின. துயரத்தால் துடித்துப் போனான் அவன். ஏன்? அப்படி என்ன நடந்து விட்டது? சுற்று முற்றும் பார்த்தேன். பிறகு

"மாங்கல்யம்" வெளிப்புறக் காட்சியின் போது

நந்தியும் ஜம்பனாவும் 'குடும்ப'த்தைக் கவனிக்கிறார்கள்.

தான் மன்னனின் மனத்துடிப்புக்குக் காரணம் விளங்கியது.

எதிரே புலியெனப் பாய்ந்து சிம்மமெனக் கர்ஜித்தான் மன்னனை மண்ணோடு மண்ணாக்க வந்திருந்த கவிஞன் மதிவாணன். கவிஞனைக் கண்ட காவலன் வெற்றிவீரன் (!) கதியற்ற நிலையில் தவித்துப் போனான். இந்தக் கவிஞன் ஏன் இவ்வளவு கோபத்தோடு வந்திருக்கிறான்? ஆம. உயிருக்குயிராக நேசித்த அவன் ஆசைச் சகோதரி திலகாவின் கற்பைக் களவாடி விட்டான் காவலன் என்ற பெயரோடு உலாவும் காதகன் வெற்றிவீரன்.

வெற்றிவீரனை வெட்டி வீழ்த்த வெறிபிடித்து ஓடி வருகிறான் கவிஞன மதிவாணன. தோல்வியே கண்டறியாத வீரன் தொடை நடுங்குகிறான.

கவிஞன் ஏளனமாகச் சிரிக்கிறான. ''கவிஞனென்ன, கனல் கக்கும கண்களுடன் கரத்தில கட்கத்துடன வந்திருக்கிறானே என்றெண்ணுகிறாயா, காவலனே!' என்று ஆரம்பித்து வார்த்தைகளால இடி போல இடித்துக் கூறுகிறான் கவிஞன்.

அப்பா...! அந்த வசனமும் நடிப்பும். மன்னனை மட்டுமல்ல, நம்மையும் துடிதுடிக்கச் செய்தது. கே. ஆர். ராமசாமி தவிர வேறு யாராவது இப்படிச் சிறப்பாக நடிக்க முடியுமா என்ன? மேதை அவர். கவிஞனாக, அண்ணாதுரையின் அர்த்தம் நிறைந்த அற்புதமான அடுக்கு வசனத்தை அவரைப் போல அடித்துப் பேச அருகதையுள்ளவர்கள் அவனியிலேயே யாருமில்லை. இந்தக் காட்சியில் மக்கள் மெய்சிலிர்த்துப்

'சொர்க்கவாசல்' டைரக்டரின் குரலுக்காகக் காத்திருக்கிறார் கே. ஆர். ராமசாமி



ரஞ்சனின் ரேகையை பார்க்கிறார் நம்பியார்.

களுடன் கோவில் பிராகாரத்தின் தூணைப் பிடித்தபடிக் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தாள் ஒரு யுவதி காமிராமேன் அவளை அளந்து பார்க்க வந்தபோது காமிராவை மூடித் திறந்தேன். டைரக்டரும் அவருக்கு நடிக்க வேண்டிய முறையைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார். அம்மாச்சி என்ற அந்த யுவதி அன்னதாதாவில்

போவார்கள். கே. ஆர். ராமசாமி கவிஞன் மதிவாணனாகவும், வீரப்பா மன்னன் வெற்றிவீரனாகவும் அஞ்சலி தேவி திலகாவாகவும் நடிக்கும் சொர்க்க வாசலை மேலும் அழகு படுத்த அழகி பத்மினியும் இருக்கிறார். காசிலிங்கம் ஆர்வத்தோடும் திறமையோடும் டைரக்ட் செய்து வரும் இப்படம் தமிழ்த் திரைகளில விரைவில் மின்னவிருக்கிறது.

* * *

ரேவதியில் சொர்க்க வாசலைப் பார்த்துவிட்டு வாஹினியின் தலைவாயிலில் நுழையும் போதே அங்கு 'அன்னதாதா' படப்பிடிப்பு நடைபெறுவதாக அறிந்து உள்ளே சென்றேன். ஒரு வயதான ஸ்திரீ செட்டுக்கு வெளியே உட்கார்ந்திருந்தார். அவரைத் தாண்டி நான் உள்ளே போக முயற்சித்தபோது, "நமஸ்காரம் ஸார்! எக்கட போதாவு?" என்ற குரல் கேட்டுத் திரும்பினேன். குரல் பழக்கமானது போலிருந்தது. உற்றுப் பார்த்தேன். அஞ்சலி தேவி சிரித்தபடி நின்று கொண்டிருந்தார். "அன்னதாதாவில் நான் ஒரு முதியவளின் பாத்திரத்தில் நடிக்கிறேன்" என்றார் கொஞ்சுமொழி பேசும் அஞ்சலி! அவருடன் சிறிது நேரம் பேசி விட்டு உள்ளே சென்றேன். வேதாந்தம் ராகவய்யா ஒரு கோயிலுக்கு எதிரே உட்கார்ந்திருந்தார். கலங்கும் கண்

நன்கு நடித்திருக்கிறார்.

* * *

"சக்ரபாணி இன்றைக்கு ரேவதி ஸ்டுடியோவில ஒரு விருந்தளிக்கிறார். போய் ஜமாய்த்து விடலாம் வாருங்கள்" என்றார் நண்பர். சக்ரபாணி வீட்டில் ஏதாவது விசேஷமாயிருந்தால் நமக்கு செய்தி தெரியாமலிருக்குமா? அப்படியிருந்தாலும்கூட ரேவதி ஸ்டுடியோவில் போய் அவர் விருந்து வைப்பானேன்? என்று என்



'அந்த நாளில் நடராஜன்—அளப்பவர் மாருதிராவ்.



ராகினியின் மேக்—அப்பைச் சரி செய்கிறார் ராமண்ணா

மனம் எண்ணமிட்டது. எப்படியும் அழையாத போது போகக்கூடாது என்று தீர்மானித்து நண்பரிடம் மறுத்தக் கூறினேன். "சும்மா வாங்க சார்! இதெல்லாம் சக்ரபாணி கூப்பிடக்கூடிய விஷயமல்ல. அவர் இன்னொருவர் செலவில் நடத்தி வைக்கிறார். நேரமாகிறது" என்று நண்பர் வற்புறுத்தி, வலுவில் இழுத்துச் சென்று விட்டார்.

நான் ரேவதிக்குள் நுழைந்த போது அங்கே அதற்கு முன் காணாத ஒரு சிறு பூங்கா இருப்பதைக் கண்டேன். அந்தப் படத்திற்காகவே அமைக்கப்பட்ட பூங்கா செட்டில் விருந்து நடந்தது.

சக்ரபாணியுடன், டி. பாலசுப்ரமணியம், ரஞ்சன், நம்பியார், எஸ். வரலக்ஷ்மி முதலியோர் இருந்தனர். விசேஷ விருந்துதான் என்று நினைத்து ஒரு மேஜையருகே ஆவலோடு சென்ற போது திடீரென்று தடுத்து நிறுத்தினார் மற்றொரு நண்பர். "ஸார் ஸார்! இது அசோகாவின் 'கட்டாயக் கலயாணம்' படத்திற்காகப் போடப்பட்ட செட். அதன் நடிகர்களுக்கென வைத்திருப்பதைப் படம் பிடிக்கு முன் தீர்த்துவிடப் பார்த்தீர்களே!" என்றார் சிரித்தபடி.

ஜமீன்தார் ஒருவரின் பாத்திரமேற்று நடிக்கிறார் டி. பாலசுப்ரமணியம். அவர் மகன் பாலுவாக நடிக்கிறார் எம். என். நம்பியார். பாலுவின் சகோதரி வசந்தா—கதாநாயகியாக எஸ். வரலக்ஷ்மி வருகிறார். மிராசுதாராக சக்ரபாணியும் அவர் மகன் ரகுபதியாக—கதாநாயகனாக ரஞ்சனும் நடிக்கிறார்கள்.

டீ பார்ட்டி நடக்கும் போது ரகுபதி திடீரென்று எதையோ கண்டவன் போல நந்தவனத்தின் ஒரு திசையை நோக்கிச் சென்றுவிடுகிறான். அங்கே பாலுவின் காதலி மல்லிகா (மைனாவதி) இருக்கிறாள். பாலு இதைக் கண்டு வருந்துகிறான். தன் காதலியை அயோக்கியனான ரகுபதி விரும்புவதைக் கண்டு அவன் மனம் துணுக்குறுகிறது. அப்படியிருக்கும் போது ரகுபதிக்குத் தன் சகோதரி

'பணம் படுத்தும் பாட்'டில் அம்புஜமாக நடிக்கும் அம்புஜவல்லி

'மாங்கல்யம்'' – ராஜ சுலோசன.

வசந்தாவை மணமுடித்து வைப்பதில் அவனுக்கு விருப்பமில்லாமற் போனதில் ஆச்சரியமென்ன இருக்கிறது!

ஜமீன்தாரும் மகனைப் பற்றி அறிந்தவர் தான். மிராசுதாரிடம் அவர் குறைப்பட்டுக் கொள்ளுகிருர். ''ரகுபதியினுல் நான் அனுபவிக்கிற கஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல. அவனுக்கு ஒரு புத்திசாலியான பெணணைகப் பார்த்துக் கல்யாணம் பண்ணணும்'' என்கிருர் அவர்.

குறிப்பிட்ட தினம் இந்தக் காட்சி தான் படமாக்கப் பட்டது. அசோகா பிக்சர்ஸார் சிரத்தையோடு தயாரித்து வரும் இப்படத்தை எம். கே. ஆர். நம்பியாரும் கே. வி. ஆர். ஆச்சாராயாவும் டைரக்ட் செய்து வருகின்றனர்.

* * *

திடீரென்று ஒரு கோவை விஜயம் வாய்த்தது. போனது தான் போனேனே, சென்டிரலில் தலையை நீட்டிப் பார்க்கலாம் என்று நினைத்துப் போனேன். ஏ. பி. நாகராஜன் பிரமாதமாக வரவேற்ருர். ஸ்டுடியோவிலே எம். ஏ. வி. பிக்சர்ஸாரின் ''மாங்கல்யம்'' படம் ஜருராகத் தயாராகி வருகிறது. ஏ. பி. நாகராஜன் இதற்கான கதை வசனம் எல்லாம் எழுதியிருக்கிருர். அவர் மகா சூரர். 'நால்வ'ரில் ஒரு கட்டபொம்மன் நாடகத்தைப் புகுத்தியது போல மாங்கல்யத்திலும் ''ராணி மங்கம்மாள்'' என்ற நாடகத்தைப் புகுத்தியிருக்கிருர். நான சென்றபோது அங்கே மேக்–அப்போடு நின்றிருந்த ஒருவரைக் கண்டு ஆச்சர்யத்தில் மூழ்கினேன்! ஆமாம், பிரபலபின்னணிப்பாடகரான திருச்சி லோகநாதன் அங்கே ஜம்மென்று நின்று கொண்டிருந்தார். ''நமஸ்காரம் சார்'' என்று வரவேற்ருர் அவர். ராணி மங்கம்மாள் நாடகத்திலே பி. எஸ். சரோஜா கற்பலங்காரியாக நடிக்கிருர். அவர் கணவராக லோகநாதன் சிரத்தையோடு நடித்து வருகிருர்.

* * *

வாஹினியிலே ஒரு நடனக்காட்சி படமாக்கப்படவிருந்தது. பிரபல நடன மணியான உமா அங்கிருந்தார். 'கமலாவும் ரீடாவும் நடனமாடுவர். உமாதான் இந்த நடனக் காட்சியை அமைத்துக் கொடுத்தவர்' என்று சொன்ஞர்கள். ஸிலோன் ஸ்ரீமுருகன் நவகலா பிலிம்ஸாரின் ''அகங்கார ஸ்திரீ'' படத்திற்காக இந்த நடனக் காட்சி தயாரிக்கப்படுகிறது.

செய்திச் சுருள்

சொர்க்கவாசல்

ஏப்ரல் மாதம் 30–ம் தேதி யன்று வெளிவரும் 'சொர்க்க வாசல்' ஒரு மகத்தான படமாகும். அண்ணுத்துரை கதை வசனமெழுதி யிருக்கும் சொர்க்க வாசல் புரட்சிக் கவிஞன் ஒருவனது வரலாற்றைச் சித்தரிக்கிறது. மனேகராவுக்குப் பின் இந்த ஆண்டின் மற்ருெரு மாபெரும் வெற்றிப் படமாக சொர்க்கவாசல் இருக்கும் என்று நிச்சயம் நம்பலாம். கே. ஆர். ராமசாமியின் திறமையான நடிப்பும் இனிய கானமும் சொர்க்க வாசலின் பிரத்தியேக அம்சங்களாகத் திகழுகின்றன. அஞ்சலீதேவி, பத்மினி, வீரப்பா முதலியோரும் இப் படத்தில் நடித்திருக்கிருர்கள். நெப்டியூனில் தயாரான இப்படத்தை காசிலிங்கம் டைரக்ட் செய்திருக்கிருர். 'பிரஜா ராஜ்யம்' என்ற பெயரில் தெலுங்கிலும் இப்படம் தயாராகி இருக்கிறது.

கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி

பத்மினி பிக்சர்ஸ் தயாரித்து வரும் 'கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி' இம்மாதம் 13–ம் தேதி திரையிடப்பட விருக்கிறது. ப. நீலகண்டன் டைரக்ட் செய்யும் இப்படக்கதையை டி. கே. கோவிந்தன் எழுதியிருக்கிருர். ஒரே ஹாஸ்ய நிகழ்ச்சிகளைக்

மெர்குரியின் 'புனர் ஜென்மம்' 19–ம் தேதி நியூடோனில் ஆரம்பமாகி விட்டது.



'அந்த நா'ளும் வந்திடாதோ என்று கணேசனும், சூர்யகலாவும் யோசிக்கிறார்களா ?

கொண்ட இப்படத்தில் பத்மினி, ராகினி, சிவாஜி கணேசன், டி. ஆர். ராமச்சந்திரன், பி. ஆர். பந்துலு முதலி யோர் நடித்திருக்கிருர்கள். ரேவதி யில் தயாராகிறது இப்படம்.

அந்த நாள்

'ஒரு நாள்' என்ற பெயரில் தயா ராகி வந்த தங்கள் படத்திற்கு, ஏவி. எம். புரொடக்‌ஷன்ஸார் 'அந்த நாள்' என்று பெயரிட்டிருக்கின்றனர். எஸ். பாலசந்தர், ஏவி. எம். முக்காக இதைத் தயாரித்திருக்கிருர். டைரக்‌ஷன் பொறுப்பையும் அவரே ஏற்றுக் கொண்டிருக்கிருர். ஏவி. எம். மின் ஏப்ரல் மாத வெளியீடான இப்படத் தில் சிவாஜி கணேசன், பண்டரிபாய், சூர்யகலா, எஸ். மேனகா, டி. கே. பாலசந்திரன், பி. டி. சம்பந்தம் முதலியோர் நடித்திருக்கிருர்கள். தமிழ்த் திரை இதுவரை கண்டிராத புது மாதிரியான சித்திரம் 'அந்த நாள்' என்று சொல்லுகிருர்கள்.

இல்லற ஜோதி

இம்மாதம் திரைக்கு வெளிவர விருக்கும் படங்களில மாடர்ன் தியேட்டர்ஸின் 'இல்லற ஜோதி'யும் ஒன்ருகும். டி. ஆர். சுந்தரம் டைரக்‌ஷனில் வளர்ந்திருக்கும் இப்படக் கதை பல நீதிகளைப் போதிக்கும்படி அமைந் திருக்கிறது. சிவாஜி கணேசன், பத்மினி, ஸ்ரீரஞ்சனி, தங்கவேலு முதலியோர் 'இல்லற ஜோதி'யில் பிரகாசிக்கிருர்கள்.

தேசிங்குராஜன்

சரித்திர நிகழ்ச்சிகளைப் பின்னணி யாகக் கொண்ட படங்களுக்கு ரஸி

'மாங்கல்யம்' லபிக்குமா என்ற சிந்தனை நம்பியாருக்கு.

'பத்மினி'யில் பி. எஸ். கோவிந்தன் நடன மாடுவார் போலிருக்கிறது!

கர்களிடையே தற்போது நல்ல ஆதரவு கிடைத்து வருகிறது. ஔவையாரும், மனோகராவும் இதற்குச் சான்றாகத் திகழுகின்றன. ஆகவே மாடர்ன் தியேட்டர்ஸார் 'தேசிங்கு ராஜன்' சரித்திரத்தைப் படமாக்க முனைந்திருப்பது ஆச்சர்யப் படத்தக்க விஷயமல்ல; பாராட்ட வேண்டிய அம்சம். இப்படத்திற்கான வசனங்களை மு. கருணாநிதி எழுதுவார் என்று தெரிகிறது. சிவாஜி கணேசன் படத்தின் பிரதான பாகத்தில் நடிக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

புனர்ஜென்மம்

மெர்குரி பில்ம்ஸார் 'புனர் ஜன்மம்' என்ற படத்தைத் தயாரிக்கப்போகிறார்கள் என்று சென்ற இதழில் வெளியிட்டிருந்தோம். நியூடோன் ஸ்டுடியோவில் சென்ற மாதம் 19-ம் தேதியன்று இப்படத்தின் ஆரம்ப விழா நடைபெற்றது. மனோகர் பிக்சர்ஸ் உரிமையாளரான எம். சோமசுந்தரம் காமிராவை முடுக்கி வைத்தார். 'புனர் ஜென்மம்' 'துமிலன்' அவர்களால் கல்கியில் தொடர்ந்து எழுதப்பட்ட ஹாஸ்ய நவீனமாகும். படத்தில் குசலகுமாரி, கே. லக்ஷ்மீ காந்தம், அங்கமுத்து, தங்கவேலு, கே. ராமசாமி முதலியோர் நடிக்கிறார்கள். ஸி சீனிவாசராவ் புனர்ஜென்மத்தின் டைரக்டராக அமர்ந்திருக்கிறார். ஹாஸ்யப் படங்களுக்கு இப்போது பிரமாதமான வரவேற்பிருக்கிறது. 'துமிலன்' ஹாஸ்யச் சித்திரங்கள் புனைவதில் சிறந்தவர். 'புனர் ஜென்மம்' அவருக்குப் புகழ் தரும் என்பதில் சந்தேகமில்லை.

மனோஹர். பி. கே. சரஸ்வதி. வி. என். சம்பந்தம் ஆகியோரின் (நேஷனல் தியேட்டர்ஸ்) முதல் நாடகமான ''இரு மனம்'' ஆர். ஆர். சபாவில் அமோகமாக அரங்கேறி விட்டது.



மாடர்ன் தியேட்டர்ஸாரின் 'இல்லற ஜோதி'யில் ஸ்ரீரஞ்சனி...

சொர்க்கவாசல்

கே. ஆர். ராமசாமி – பத்மினி



கோப்பை நழுவி விடப் போகிறது!

—'நம் குழந்தை'யில் எஸ். வரலக்ஷ்மி

காட்சி 1

தன் உள்ளத்தில் தீராத வேதனையையும், தணிக்கமுடியாத கோபத்தையும் உண்டாக்கிவிட்ட வசந்தசேனையின் சிலையைச் செதுக்கிக் கொண்டிருக்கிறான் கேசரி வர்மன். வெற்றிப் புன்னகை தவழ அவனைப் பார்த்துச் சொல்கிறார் பெரியவர்.

பெரியவர்: வெற்றி...வேதனையைப் பொருட்படுத்தாதவனுக்குக் கிடைத்த வெகுமானம்!...அநேக வருஷங்களாகப்பட்டபாட்டிற்கு சரியான அறுவடை! இனி நினைத்ததையெல்லாம் செய்து முடிப்பேன்... கேசரி வர்மா! கவலைகள் படிந்த உன் கண்களிலே களிப்பு பொங்கட்டும். துயர மேகங்கள் உன்னை விட்டுத் தூர ஓடட்டும். தொல்லைகள், இனி நமக்குத் தூசுகள். ஹ.. ஹ . ஹ...வெற்றி! வெற்றி!

கேசரி வர்மன் குரல் மட்டும் கேட்கிறது. சிற்றுளியும் சுத்தியும் தங்கள் வேலையை நடத்திக் கொண்டேயிருக்கின்றன.

கேசரி: குருதேவா! உண்மைதானா? என்னைத் தெரியவில்லையா உங்கள் கண்களுக்கு?

பெரி: ஆமாம் கேசரி வர்மா! அருபமாகிவிட்டாய், கண்டுபிடித்த மருந்து வேலை செய்யத் துவங்கி விட்டது. என் ஆராய்ச்சிக்கு அமோக வெற்றி! எல்லோரையும் நீ பார்க்கலாம். ஆனால் உன்னை யாரும் பார்க்க முடியாது.

கேச: குருதேவா! பதின்மூன்று வருடங்கள் பதறிக்கிடந்தேன் அந்தப் பாவியைப் பழிவாங்க வேண்டுமென்று! பாதை வகுத்துக் கொடுத்து விட்டீர்களிப்போது! சுவாமி! அருபம் அதிக நாழி இருக்காதா?...

பெரி: இருக்காது. ஆனால் இன்னும் முயன்று பார்க்கலாம். நான் தேடும் மூலிகைகள் கிடைத்து விட்டால் அருபமாக மட்டுமல்ல, அழியாமலே கூட இருக்கலாம். ஆனால் கேசரிவர்மா நல்லவர் வாழ இதைப் பயன்படுத்து!

கேச: நல்லவர் வாழப் பயன்படுத்துவேன்! அதே சமயத்தில் இந்த நாசக்காரியின் நரி வேலைகளை அம்பலமாக்குவேன். பாவி! பழிகாரி! ...கணவனுக்கு விஷங் கொடுத்த பத்திரகாளி! உன் விஷத்தால் செத்துவிடவில்லையடி கேசரிவர்மன், இருக்கிறான் உயிரோடு! சாகவில்லை – சாகமாட்டான். வஞ்சகி! ...வாய் ஜாலக்காரி!

பெரி: ஹ ஹ ஹ ....

கேச: குருஜி!

பெரி: சிலையப்பா அது!

கேச: சிலைதான்! ஏன் செதுக்கினேன் இவளை? சித்திரவதை செய்

பாத்திரங்கள்

மனோகரன்	சிவாஜி கணேசன்
புருஷோத்தமன்	சதாசிவராவ்
சத்யசிலர்	ஜாவர் சீதாராமன்
ராஜப்ரியன்	ராஜேந்திரன்
பத்மாவதி	கண்ணாம்பா
வசந்தசேனை	ராஜகுமாரி
விஜயா	கிரிஜா

கதை:

நாடகப் பேராசிரியர்
ப. சம்பந்த முதலியார்

திரைக்கதை, வசனம்:

மு. கருணாநிதி

டைரக்ஷன்:

பிரஸாத்

வதற்கு ஒத்திகை பார்க்க. வசந்த சேனை! உன் விழியில் வேல் செருகுவேன். கூந்தலுக்கு தீ மூட்டுவேன். கொவ்வை உதடுகள்! அவைகளில் கூறிய ஊசிகளைக் குத்துவேன்.. கண்ணாடிக் கன்னம்! ஹ ஹ ஹ...கட்டாரியால் கிழிப்பேன்! காண்பவர் வெறி கொள்ளும் மேனி! கண்டம் கண்டமாக வெட்டி எறிவேன்! ஆரம்பமாகி விட்டதடி அருபத்தின் அற்புத வேலைகள்! மாயக்காரி! தொடங்கி விட்டதடி உன்மாஜி கணவனின் பழிவாங்கும் படலம். நடமாடும் பாம்பே! நாசத்தின் நர்த்தனமே! நயவஞ்சச பிசாசே! சிரிக்கும் சிலந்தியே!

* * *

விழிகளில் விஷம் சொட்ட, தன் தோழியுடன் அரண்மனை

யில் உரையாடுகிறாள் வசந்தசேனை.

வ. சே: பைத்யக்காரி! இப்போது நினைத்தாலும் நான் பட்ட மகிஷி ஆக முடியுமடி!...

தோழி: அதுதாம்மா எனக்கும் ஆசை. ஆனால் மகாராணியும், இளவரசரும் உயிரோடு இருக்கும்போது?...

வ. சே: மகாராணி—இளவரசர்.... இரண்டும் உயிர்ப் பிணங்கள்! நான் சிரித்தால் போதும், சிம்மாசனமே கிடைக்கும். மயக்குகின்ற ஒரு பார்வை—இந்த மண்டலமே என் காலடியில்! மகாராஜாவின் பிரேமை ராணியடி நான்! நினைத்தால் போதும்

—வசந்தசேனை ராணி! அவள் மகன் வசந்தன் இளவரசன்!

அரண்மனையின் மற்றொரு புறத்தில் பத்தினி பத்மாவதி, தன் கணவர் படத்தின் முன் மண்டியிட்டு வேண்டுகிறாள்.

பத் : சுவாமி!நாமிருவரும் இனிமேல் ஒன்று சேரும் நாளே வராதா...? என் வாழ்க்கையிலே நான் யாருக்கும் எந்த தீங்கும் செய்தது கிடையாதே! என வாழ்க்கையைக் கெடுத்த வசந்தசேனையைக்கூட மன்னித்து இருக்கிறேன்அ. வளிடம் வாஞ்சை மிகுந்த உங்களுக்கு வருத்தம் வரக்கூடாது என்பதற்காக!...அப்படியே நான் யாருக்காவது தீமை செய்திருந்தாலும் அதற்கு பல ஆண்டு காலம் தங்களைப் பிரிந்து வாடுகிறேனே! இந்த தண்டனை போதாதா? சுவாமி! கண்மணி மனோகரனின் பிறந்த நாளும் வருகிறது. எழில் பூத்த நம் செல்வத்தை இருவரும் உச்சிமோந்து அன்பு வாழ்த்து கூறுவோமே—அந்த இன்ப நாள் இனிமேல் வரவே முடியாதா சுவாமி!

* * *

மாவீரன் மனோகரனின் பிறந்த நாள் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. வசந்தசேனையின் விஷமச் செயல்களை ஒரு நாடக உருவாக்கி, அரண்மனையில் அதை நடித்துக்காட்ட வருகிறான் கேசரி வர்மன்.

பெரி : எங்கே கேசரி வர்மா அவசரமாகப் புறப்படுகிறாய்?

கேச : நாடகத்திற்கு. அதோ! அவர்களைத்தான் ஏற்பாடு செய்திருக்கிறேன்.

பெரி : மறந்து விட்டேன். இன்று மனோகரன் பிறந்த விழாவா? உம்... நாடகத்திற்கு என்ன பெயர் வைத்திருக்கிறாய்?

கேச : போர்வாள்.

பெரி : சபாஷ்! தடையொன்றும் கிடையாதே நடத்துவதற்கு?

கேச : கிடையாது. காரணம், கதை அவர்களுக்குப் புரியாது.

பெரி : வசந்தசேனைக்கு உன் நாடகத்துப் புனைப்பெயர் என்ன?

கேச : தேவசேனா!

பெரி : உன் பெயர்?

கேச : ஈஸ்வரி வர்மன். புருஷோத்தமனை உத்தம புருஷனென்று மாற்றி யிருக்கிறேன்.

பெரி : கட்டாயம் புரிந்து கொள்வார்கள் கதையை,

கேச : புரியத்தானே வேண்டும். அப்போதாவது புருஷோத்தமனுக்கு புத்திவராதா?

பெரி : உம்...முயற்சி செய்து பார்!

கேச : வருகிறேன், குருதேவா!

பெரி : ஜாக்ரதை!

* * *

அரண்மனை. வசந்தசேனை தன் முத்தாரத்திலுள்ள பதக்கத்துள் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் உக்ரசேனன் படத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

தோழி : என்னம்மா! தினம் தினம் எதை மறந்தாலும் இதை மறப்பதில்லை நீங்கள்? அப்படி யென்ன இந்தப் பதக்கத்தில் கண்ணை இழுக்கும் காந்தம் இருக்கிறது?

வ. சே : காந்தமில்லையடி! ஆபத்தில் கை கொடுக்கும் கடவுள்!

தோழி : கடவுளா?

வ. சே: பாரேன்... (படத்தைக் காட்டுகிறாள்)

தோழி : அம்மா, மகாராஜா வருகிறார்.

அரசர் : இன்னுமா முடியவில்லை, அலங்காரம்? நேரமாகிவிட்டதே நாடகத்துக்கு...

வ. சே : இதோ முடிந்துவிட்டது.

அர : மறந்து விட்டாய், இன்று மனோகரன் பிறந்தநாள்.

வ. சே : மறப்பேனா, செல்வன் பிறந்த நாளை? எனக்கு வேறு ஒரு நினைவு வந்தது.

அர : எது வசந்தி?

வ. சே : நமது காதல் விழாவின் பதின்மூன்றாவது ஆண்டு...



அர : ஆமாம் கண்ணே ! வருடங்கள் ஓடியதே தெரியவில்லை. வசந்தி, நான் போகிறேன்.. சீக்கிரம் புறப்படு...

* * *

மனோகரன் தன் மாளிகையில் மனம் புழுங்கித் தவிக்கிறான். கொலு மண்டபத்தில் தன் அன்னை இருக்குமிடத்தில் தாசி வசந்தசேனை அமர்ந்திருப்பது அவன் அடிவயிற்றில் தாளமுடியாத வேதனையையும், தாங்க முடியாத கோபத்தையும் உண்டாக்குகிறது. அதே சமயம் அரண்மனையில் நடைபெற விருக்கும் நாடகத்திற்கு அவனை வரும்படி அழைக்கிறார் மந்திரி சத்தியசீலர்.

சத்யசீலர் : வஞ்சகம் வாழ்ந்தது கிடையாது! கொடுமை நிலைத்ததில்லை. இதைக்கேள்! விழா உன் பொருட்டு நடைபெறுகிறது. விழாவுக்கு நீ வந்து தான் தீர வேண்டும...

மனோ : என்பொருட்டு விழா நடைபெறுகிறது. மனப்பூர்வமாகவா? இல்லை சம்பிரதாயத்திற்கு !

சத் : தவறு மனோகரா ! புத்திர வாஞ்சையற்றவரல்ல புருஷோத்தமர்.

மனோ : உங்களுடைய ஆசை, அந்த வாஞ்சையும் அற்றுவிடக் கூடாதென்று ! ஆனால் அப்பா அணு அணுவாக விஷமாக்கப்படுகிறார்.

சத் : எப்படியானாலும் சரி, ராஜ குடும்பத்திலே தகராறு—இப்படி பிறர் பேசக்கூடாது.

மனோ : உயர்ந்த எண்ணம் ! ஆனால் அந்த ஊர் கெடுப்பவளுக்கு உதயமாகியிருக்க வேண்டும்.

சத் : மனோகரா ! உன்னுடைய பிறந்தநாள்...அதிலே நீ இல்லையென்றால் ?

ராஜப்ரியன் : அரசர் கவலைப்பட மாட்டார், அந்த ஆனந்தவல்லி அருகிலே இருக்கும்போது !

சத் : உம் இருவருமே இளைஞர்கள். துடிக்கிறீர்கள் !

மனோ : அமைதி கற்பிப்பது விவேகிகளின் பண்புதான் ! ஆனால் ஆமை போல் அடங்கிக் கிடப்பது வீரர்களின் பண்பல்ல ! அந்த மயக்கு மொழிக்காரியும் வருவாள்; அங்கே என் மாதாவும் வரவேண்டும். முடியாது! என்றால் அதைக் காண முடியாது !

பத் : மனோகரா !

மனோ : அம்மா !

பத் : செல்வா! கேட்டுக்கொண்டு தான் வந்தேன் ! ராஜப்ரியன் கூட சீறி விழுந்தானே. ஏன்? மந்திரியாரே...மனோகரன் கட்டாயம் நாடகத்துக்கு வருவான்.

நாடகம் ஆரம்பமாவதற்கு முன் கேசரிவர்மன் நாடகத்திற்கு முன்னுரை கூறுகிறான்.

கேச : கற்பனைக் கதையல்ல நீங்கள் காணப்போவது. சிந்தனைச் சித்திரம். சிங்காரியால் சீரழியும் ஓர் சாம்ராஜ்ய சரித்திரம் !

வேந்தன் உத்தம புருஷன் ஒரு செந்தமிழ்ச் சோலை.

அவன் சிந்தை குளிப்பாட்டிய தென்றல் கமலாவதி, பட்டத்தரசி !

பட்டத்தரசியின் தந்தையை பாண்டியன் கொன்றான். சிந்தை குலுங்கும் செய்தி ஏந்தி வந்தான் ஒரு சைத்ரிகன், ஈசுவரி வர்மன் !

அவன் மனைவி தேவசேனை ஒரு சித்ராங்கி.

தென்றல் போல வந்தாள்.

புயலாக மாறினாள். அந்தப் புன்சிரிப்புப் புயல் புகுந்த கூடம்

சூறாவளி சுழன்று சுழன்று அடித்தது. அந்தப் பயங்கரமான பேய்க்காற்றிலே மன்னன் மயங்கினான். மனைவி கமலாவதி கண்ணீர் வடித்தாள்.

தேவசேனை தன் கணவன் வர்மனை விஷமிட்டுக் கொன்றாள்.

நாடகத்திலே இந்தக் காட்சிகள் சித்தரிக்கப்பட்டு வந்தபோது வசந்தசேனை பதறிப் போனாள்; பயந்தாள். தன் பத்தினி வேஷம் வெளிப்பட்டு, வெளியேறும்படி

யான நிலை ஏற்படுமோ என்று எதிர் பார்த்து அச்சப்பட்டான்.

ஆகவே நாடகத்தை நிறுத்தும் படி உத்தரவுபோட்ட அவள் அவர் களைக் கைதாக்கிக் கொண்டுவரும் படியும் கட்டளை யிட்டாள்.

வ.சே : எங்கே நாடகக் கும்பல்?

வீரன் : விரட்டிக்கொண்டே போனோம். தப்பிவிட்டார்கள்...

வ. சே: தைரியசாலிகள்! வெட்க மில்லை. சீ ஓடுங்கள்...

தோழி : ஏம்மா ... நாடகக்காரர் கள்?

வ.சே : ஆம்?... பரிசு கொடுக்க!

தோழி : கொடுக்க வேண்டியது தானம்மா . நம்மைக் காட்டி கொடுக் கிற கதையாயிருந்தாலும் நடிப்பு நல்லா இருந்தது !

வ.சே : சீ.. என்னடி விமர்சனம். போடி! உம்!

(தனக்குள்) நாடகம்... என்னை வைத்து எழுதப்பட்டது! கேசரி வர்மன் உயிரோடு...சேச்சே, பிணம் பிழைப்பதாவது. ஒரு வேளை...விஷம் சரியாக வேலை செய்யாமல்...

மன்னர் வருகிறார்.

வ. சே : பிரபூ ! வழக்கமான புன் சிரிப்புஇல்லை. .வாட்டத்தோடு இருக் கிறீர்கள்...என்ன காரணம், ஸ்வாமி!

அர : ஒன்றுமில்லை...

வ.சே : பிறகேன் கண்ணே என்ற கனிமொழி உதிரவில்லை? கண் களிலே கலக்கம்.. கண்ணாளா! பால்!...

அர : பாலா ?...

வ.சே : ஏன்? ஓகோ! நாடகம் நினைவுக்கு வந்து விட்டதோ?

அர : அதெல்லாமில்லை...

வ.சே : பெருமூச்சால் பேசுவா னேன்.. என்னையே கேளுங்கள்! என் கணவர் கேசரி வர்மன்...நம் காதலை காணச் சகிக்காமல் ஊரைவிட்டு ஓடி விட்டார் என்று தங்களிடம் சொல்லி யிருந்தேன்...

அர : ஆமாம்! இப்போது.....

வ.சே : நஞ்சு கொடுத்துத் தன் கணவனைக் கொல்லுகிறாள் நாடக தேவசேனை! தாங்களும் அதை உண்மையென்று நம்பி......

இரண்டு கோப்பைகளையும் கை யில் எடுத்துக் கொள்ளுகிறாள்.

வ. சே : இதில் எதை வேண்டு மானாலும் தாங்கள்......

அர : வேண்டாம்...நீயே கொடு.

வ.சே : இல்லை. தாங்கள் விரும்பு வதை எடுத்துக் கொள்ளுங்கள். சந்தேகம் ஒரு சங்கடமான நோய். காதல் வாழ்வை துண்டாக்கும் கட் டாரி.. அது வீரரையும் கோழையாக் கும்... உம், எடுத்துக் கொள்ளுங் கள். அதுகூடவேண்டாம். நானே இரண்டையும் சாப்பிடுகிறேன்.

இரண்டு கிண்ணங்களிலுமுள்ள பாலைக்குடித்துவிட்டு, அவற்றைக் கீழே வீசி எறிகிறாள். பின்னர் அரச னின் கால்களைத் தழுவிக் கொள் கிறாள் சேனை.

வ.சே: என்னை மன்னித்து விடுங்கள் மகாராஜா! பதின்மூன்று ஆண்டுகளாகத் தங்கள் பத்தினியாக வாழ்ந்தேன். அதை வைத்துக் கேட்கிறேன். ஆபரணம்–ஆடம்பரவாழ்வு–அரசபோகம் – போதும் ... தாருங்கள் தயவு செய்து . காஷாய உடை! கையிலே ஒரு ஓடு! மறுக்காதீர்கள். போக விடை கொடுங்கள்...

அர: போவதா...நீயா?... எங்கே கண்ணே?

வ.சே: உலகம் மிகப் பெரியது. பிரபு! அதன் ஜனக்கூட்டத்திலே நானும் ஒரு துளியாகிவிடுகிறேன். தங்கள் பெயரை ஜபித்துக்கொண்டு என் ஜன்மத்தை கழித்துவிடுகிறேன். உங்கள் காலடியில் கிடக்கும்—என் இன்ப வாழ்வுக்கு தி முட்டத் திட்டம் போட்டு விட்டார்கள்!

அர: திட்டம்! யார்?

வ. சே: மகாராணிதான்!

அர: யார் .... பத்மாவதியா?.....

கே ச. குரல்: இல்லை ... பச்சைப் புளுகு?.. பாராளும் வேந்தே! பாகு மொழிக்குப் பலியாகாதே!

வ. சே: பாருங்கள் ஸ்வாமி, பாருங்கள்! நான் கேள்விப் பட்டது உண்மைதான். மகாராணி மந்திர ஜாலம் வேறு நடத்துகிறார்களாம் உங்களிடமிருந்து என்னைப் பிரிக்க...

அர: கவனிக்கவேண்டியதுதான் (காவலாளிகளிடம்) யார் இங்கு பேசியது என்று தேடிப் பாருங்கள்.

சிப்பாய்கள் சப்தம் வந்த திசையை நோக்கி ஓடுகிறார்கள்.

காட்சி 2

மனோகரன், அரச சபையில் தன் அன்னைக்கிழைக்கப்பட்ட அவமானத்தை நினைத்து தாயிடமே மனம் குமுறுகிறான்.

மனோ: புரையோடி விட்ட புண்ணுக்கு புனுகுப்பூச்சு! பொல்லாங்குக் காரியின் போலி வேடத்தைப் பொசுக்க பொறுமை! போதுமம்மா பொறுத்ததெல்லாம். உத்திரவு கொடுங்கள். உருத்தெரியாமல் ஆக்குகிறேன் அந்த ஊர் கெடுப்பவளை!

பத்: மனோகரா! இரு...

அங்குள்ள பெட்டியிலிருந்து ஒரு வாளை எடுத்து மனோகரனிடம் கொடுக்கிறாள்.

மனோ: அம்மா ஒரே வீச்சு! வேஷக்காரி வசந்தா தொலைந்தாள்!

பத்: பொறு செல்வா! அதை விட ஒரு புனிதமான காரியத்தில் உன்னை ஈடுபடச் சொல்கிறேன்.

மனோ: என்னம்மா அது?

பத்: இந்த வாள் ஏது தெரியுமா?...

மனோ: நாடகத்தில் கூட இது மாதிரி ஒரு வாள்...ஆமாம் பார்த்தேன்...

அதே சமயம் இந்த வாளைப் பற்றி ராஜப்ரியனுக்கு விளக்குகிறார் அமைச்சர் சத்யசீலர்.

சத்: நாடகத்திலே வந்த வாள், போலி வாள்! நான் சொல்வது போர் வாள். மனோகரனின் பாட்டனார் – மகாராணியின் தந்தை–அதிவீர சேரருடையது அந்த வாள்!

ராஜ: அதிவீர சேரன்! நாடகப் பெயர்...அதி தீர சூரர்...உம் அப்புறம்?

சத்: பாண்டியன் முத்துவிஜயன் எதிர்பாராத முறையில் மனோகரனின் பாட்டனாரை ஜெயித்து ரத்ன சிம்மாசனத்தையும் கைப்பற்றினான். போர் முனையில் காயப்பட்ட பாட்டனார் சாகும்போது முத்து விஜயனைப் பழி வாங்கும் பொறுப்பை குழந்தை மனோகரனிடம் ஒப்புவித்து உயிர் நீத்தார். தாத்தாவின் விருப்பத்தை மனோகரனின் தடந்தோள்கள் நிறைவேற்றி வைக்க வேண்டும்.

பத்: ஆமாம் மனோகரா! முத்து விஜய பாண்டியன் முறியடிக்கப்பட வேண்டும். செத்துப் போன தாத்தாவின் சமாதியின்மீது வெற்றி மலர்கள் தூவ வேண்டும். நம்முடைய பரம்பரை ரத்ன சிம்மாசனம் விடுதலை பெற வேண்டும்.

மனோ: விடை கொடுங்கள்! வெற்றி மழை பொழிய வைக்கிறேன்!

(85-ம் பக்கம் பார்க்க)

டி. கே. பாலசந்திரன்

இந்த கேரள சகோதரர்கள் இருக்கிறார்களே, அவர்கள் அசகாய சூரர்கள். உலகில் அவர்கள் இல்லாத பகுதியே கிடையாது. எந்தப் பகுதியினரோடும் ஒத்து வாழக் கூடிய திறமைசாலிகள் என்பதில் யாருக்கும் அபிப்பிராய பேதமிருக்க முடியாது.

அவர்கள் இல்லாத இடமே இல்லை என்னும்போது பட உலகில் மட்டும் இல்லாது போய் விடுவார்களா என்ன? லலிதா–பத்மினி–ராகினி, பி. எஸ். சரோஜா, பி. கே. சரஸ்வதி, மாலதி, பாரதி, தங்கம், பிரண்ட் ராமசாமி, திக்குரிசி, எம். ஜி. ராம்சந்தர், சக்ரபாணி, சத்யன் போன்ற பல நக்ஷத்திரங்களும் கேரளம் தந்த கலைமணிகள்தானே! இந்தப் பட்டியலிலே புதிதாகச் சேர்ந்திருப்பவர்–இதைவிடச் சமீபமாகப் புகழ்பெற்றவர் என்றே குறிப்பிடலாம் நான் சொல்லப்போகும் டி. கே. பாலசந்திரன் ஆர். என். ஆர். பிக்சர்ஸாரின் 'ஜாதகம்' கதாநாயகரான அதே பாலசந்திரன் தான். அவர் ஒரு மலையாளி என்றால் ஆச்சரியமாக இருக்கிறதா? இருக்கும்... இருக்கும்! பட உலகில் ஆச்சரியங்களுக்குத்தான் குறைவேது?

திருவாங்கூரின் இதயமான திருவனந்தபுரத்தில் 'புஷ்கரன்'' குஞ்சன் பிள்ளை என்பவர் வசித்து வந்தார். கொல்லத்தைச் சேர்ந்த அவருக்கும் அவரது தர்மபத்தினி பாருகுட்டி அம்மாளுக்கும் ஏழு குழந்தைகள் பிறந்தனர். அவர்களில் ஐந்தாவதாகப் பிறந்தவர்தான் பாலசந்திரன். வக்கீல் குமாஸ்தாவாக பணியாற்றிய குஞ்சன்பிள்ளை ஒரு அமெச்சூர் நாடக நடிகர். அவர் நள தமயந்தி' நாடகத்திலே புஷ்கரனாகத் தோன்றி மிகவும் உயர்தர

ஜாதகம் படத்தில் சாரங்கபாணியோடு.







மாக நடித்ததால் "புஷ்கரன்" குஞ்சன்பிள்ளை என்றே அழைக்கப்படலானார்.

மிகவும் இளம் வயதிலேயே, அதாவது நான்காவது வயதிலேயே திருவனந்தபுரம் எஸ். எம். வீ. ஆங்கில பள்ளியில் சேர்ந்தார் பாலசந்திரன். அதிலிருந்து இரண்டாம் பாரம் வரை அவருக்குப் படிப்பில் அலாதி அக்கறையும் ஆர்வமும இருந்தன. பாலசந்திரன் செக்கச் செவேலென்று அழகாக – லட்டு மாதிரி – இருப்பார் —(இப்போதும் இருக்கிறார்) பள்ளி நாடகங்களில் அவர்தான கதாநாயகன், லவ-குச, கிருஷ்ணலீலா முதலிய நாடகங்களில் பாடி, நடித்திருக்கிறார். அப்போதெலலாம் அவர் சினிமாவைப் பற்றிச் சிந்தித்ததே கிடை

---

1. 'ஒருநாள்' படத்தில் மேனகாவுடன்.

2. 'ஜாதகத்'தில் சூர்யகலா. 3. சம்பந்தத்துடன் பாலசந்திரன்.

யாது. அவர் இரண்டாம் பாரத்தில்—பதினேராவது வயதில்—படித்துக் கொண்டிருக்கும்போது அவரை சினிமா ராணி காதலித்தாள்! படிப்புக்கு அப்போதே தலைவலி ஏற்பட்டதென்று சொல்லவும் வேண்டுமா?

அப்போது கே. சுப்ரமணியம் 'பிரஹலாதா' மலையாளப் படத்தைத் தயாரிக்க ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தார். என். பி. செல்லப்பன் நாயர் என்பவர் மூலம் பிரஹலாதனின் தோழர்களுள் ஒருவராக நடிக்கும் சந்தர்ப்பம் அவருக்குக் கிடைத்தது. பள்ளிப் புத்தகங்களைப் படிக்க நேரமே அவருக்கு கிடைக்கவில்லை! அவரது பதினேராவது வயதில் அவர் வாழ்க்கையில ஒரு திருப்பம் ஏற்பட்டுவிட்டது. மேலும் சிரமப்பட்டு மூன்று வருஷங்கள் படித்து ஐந்தாம் பாரம் தேறினர். அதற்குமேல் படிக்க அவரால் முடியவில்லை. உடம்புக்கு ஒத்துக் கொள்ளாத விஷயத்தை யாராவது கட்டிக் கொண்டு அழுவார்களா?

திருவனந்தபுரத்தில் நவாப் ராஜமாணிக்கத்தின் மதுரை தேவி பால விநோத சங்கீத சபா முகாமிட்டு நாடகங்களை நடத்திக்கொண்டிருந்த சமயம் அது. வீட்டில் பெற்ருேர் விரும்பாவிட்டாலும் சண்டித்தனம் செய்து நவாபின் கம்பெனியில் சேரத் தீர்மானித்தார் பாலசந்திரன். அப்பாவே ஒரு நாடக நடிகர். பிள்ளையை நாடகத்தில் நடிக்க அனுமதிக்காமலிருக்க முடியவில்லை அவரால். தன் முன்னே தைரியமாக அடித்துப் பாடிய 'லட்டு'ப்பிள்ளையைத் தன் கம்பெனியில் சேர்த்துக் கொள்ள நவாப் தயங்கவில்லை. திருவாங்கூர் ராஜ்யம் முழுவதும் கம்பெனியோடு சுற்றினர் பாலசந்திரன். கிருஷ்ணலீலா, ராஜபக்தி, சக்திலீலா, பிரபல சந்திரா முதலிய நாடகங்களில் அவர் பங்கு கொண்டார். என். என். கண்ணப்பா. நம்பியார், கல்யாணம், எம். என். கிருஷ்ணன். கோவிந்தன் முதலியோர் அப்போது கம்பெனி நடிகர்களாயிருந்தார்கள். கண்ணப்பாதான் நவாப் கம்பெனியின் பிரதான நடிகர் அப்போது. பாலசந்திரன் ஸ்திரீ பார்ட்டுகளில் நடித்து வந்தார்.

நவாபின் கம்பெனியில் இருந்து புகழ்பெறுவது கஷ்டம் என்று உணர்ந்தோ என்னவோ நடனம் கற்க ஆரம்பித்தார். சாந்திநிகேதனிலிருந்த கதகளி நடன ஆசிரியரிடம் நடனம் கற்ருர். சுமார் இரண்டு வருஷங்கள் சிக்ஷை பெற்று அவரோடு ஸிலோன், பர்மாவிலும், இந்தியாவின் பல பாகங்களிலும் நடனக் கச்சேரிகளுக்குச் சென்று வந்தார் 1946 இறுதியில் ஊருக்குத் திரும்பியபோது பிரபல மலையாள ஆசிரியர் ஸி. மாதவம்பிள்ளையின் 'யாசக மோகினி' என்ற கதையை வத்ஸலா பிக்சர்ஸார் மலையாள பாஷையில் படமாக்கப்பட விருந்ததை அறிந்து அதில் இரண்டாவது கதாநாயகன் –நடன ஆசிரியர்–பாத்திரத்தில் தோன்றினர். சென்னை ஸ்டுடியோவில் நாகூர் டைரக்ஷனில் மூவாயிரம் அடிகள் வளர்ந்த இப்படம் பிறகு தொடரப்படவில்லை. ஆகவே ஊர் திரும்பிவிட்டார் பாலசந்திரன். அதன் பிறகு சுமார் மூன்று நான்கு மாதங்கள் ஊரிலேயே தங்கியிருந்தார்.

காலை வைத்தாகி விட்டது. ஒரு கை பார்க்காமல் விடுவதில்லை என்ற உறுதி அவருக்கு ஏற்பட்டு விட்டது. எப்படியும் சென்னை சென்று பட உலகில் புகுந்து விடுவது என்ற தீர்மானத்தில் சென்னைக்குப புறப்பட்டு விட்டார் பாலசந்திரன். சென்னை வந்தவுடன் சுமார் ஒன்றரை வருஷங்கள் நடன ஆசிரியராக இருந்து தனியாகப்

'பிச்சைக்காரி'யில்
பி. எஸ். சரோஜாவுடன்

பலருக்கு நடனம் போதித்து வந்தார்.

சமீபத்தில் காலமான நடன ஆசிரியர் தேவி பிரசாத் கடக் பாலசந்திரனின் நடனம் கண்டு பாராட்டி அவரைத் தன் உதவியாளராக ஏற்றுக் கொண்டார். அவரோடு முதல் இரவு, கிதகாந்தி, வாலிசுக்ரீவா, திக்ஷா, அண்ணி முதலிய பனிரெண்டு படங்களுக்கு உதவி நடன டைரக்டராக வேலை செய்தார். இவைகளில் பெரும்பாலானவை தெலுங்குப் படங்களே.

டைரக்டர் கே. சுப்ரமணியம் ஒரு சமயம் பாலசந்திரனின் நடனத்தைக் கண்டு அவரது முகவெட்டும் திறமையும் அவரை விரைவில் முன்னணிக்குக் கொண்டு வந்துவிடும் என்ற திர்மானத்துடன் அவரை தேவி பிரசாத் கடக்கிடம் சிபாரிசு செய்தார். அதன் மேல்தான் கடக் பாலசந்திரனை உதவியாளராக நியமித்துக் கொண்டார். கடக்கிடம் பல படங்களுக்கும் வேலை செய்தபின் பிரபல நடன ஆசிரியரும் டைரக்டருமான வேதாந்தம் ராகவய்யாவிடம் சேர்ந்தார். வேதாந்தம் ராகவய்யா அப்போது டைரக்டராக ஆகியிருக்கவில்லை. படங்களின் நடன டைரக்டராகப் பணியாற்றிய அவர் பாலசந்திரனை உதவியாளராக்கிக் கொண்டார்.

விஜயகுமாரி, ஸ்வப்னசுந்தரி போன்ற சில படங்களுக்கு நடன டைரக்ஷனை ராகவய்யாவுடன் பாலசந்திரன் கவனித்தார்.

அதுவரை பாலசந்திரனுக்குப் படவுலகில் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை. நடிக்க வேண்டும் என்ற ஆசையோடு ஊரைவிட்டு வந்த அவர் ஆடிப் பிழைத்துக் கொண்டிருக்க வேண்டியதாயிற்று. இந்த நிலையில் ஒரு மாறுதல் ஏற்பட்டு அவருக்குப் படங்களில் தோன்றும் சந்தர்ப்பம் கிடைக்க ஆரம்பித்தது.

கேரள நாட்டில் தயாராகி மகோன்னத வெற்றிபெற்ற "ஜீவித நௌகா" பட உலகில் பல கலைஞர்களுக்கு ரஸிகர்களிடையே பிரமாத வரவேற்பை ஏற்படுத்திக் கொடுத்தது. கே. அண்டு கே. புரொடக்ஷன் ஸாரின் நான்கு பாஷைப் படமான அதன்மூலம் திக்குரிசியும், பி. எஸ். சரோஜாவும் நிரந்தர புகழையும் வருமானத்தையும் வரவேற்பையும் பெற்றனர். கே. வேம்பு நக்ஷத்திர டைரக்டரானார். மந்தமாயிருந்த மலையாள பட உலகின் நிலை உயர்ந்தது.

பிரபல கோபிநாத் இந்தப் படத்தின் நடன டைரக்டர். இதே படத்தின் மூலமே பாலசந்திரனும் பட

"புஷ்கரன்" குஞ்சன் பிள்ளையும் குடும்பத்தினரும்

உலகில் திரும்ப அடியெடுத்து வைத்தார். அவரும் பி. எஸ். சரோஜாவும் சேர்ந்து நடனம் ஆடியதை ரஸிகர்கள் அப்போது சரியாகக் கவனித்திருக்கமாட்டார்கள். இதோ இங்கேயாவது படத்தில் பார்த்துக் கொள்ளுங்கள்!

வேம்பு ஒரு சிறந்த டைரக்டர்—கைராசிக்காரர் என்ற அபிப்பிராயம் யாவரிடமும் உறுதிப்பட்டு விட்டது. அவரும் அதே சமயம் ஒரு உறுதி கொண்டார். இளம் வயதும் அழகும் நடனத்தில் திறமையும் கொண்ட பாலசந்திரனை எப்படியும் முன்னுக்குக் கொண்டு வருவது என்று தீர்மானித்து விட்ட அவர், சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்திருக்க வேண்டும். அந்த சந்தர்ப்பம் விரைவில் வராவிட்டாலும் ஒரு நாள் வரத்தான் செய்தது.

கஜானன. புரொடக்ஷன்ஸார் "மாமியார்" என்ற படத்தைத் தமிழ், தெலுங்கு இரு பாஷைகளிலும் தயாரிக்கத் தீர்மானித்து 1952 இறுதியில் படப் பிடிப்பைத் தொடங்கினர். கே. வேம்பு அதன் டைரக்டராக அமர்த்தப்பட்டார். மனோஹர், எஸ். வரலக்ஷ்மி, பீ. ஆர். பந்துலு, பி. எஸ். சிவபாக்கியம், கிரிஜா முதலியோர் அதில் நடித்தனர். பாலசந்திரன் இரண்டாவது கதா நாயகனாக நடித்தார். கிரிஜா படத்தில் அவரது மனைவியாக நடித்தார். பாலசந்திரனும் அவரும் கூடியவரை நன்றாகவே நடித்தனர் என்றாலும் பாலசந்திரனுக்கு அப்படம் புகழ் தரவில்லை. எப்படியானாலும் பாலசந்திரனின் புது வாழ்வுககு வழி வகுத்து விட்டவர் வேம்புதான்.

சென்ற வருஷம் பட உலகில் ஏற்பட்ட மந்த நிலையைப்பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. ஔவையார், பொன்னி, மனம் போல மாங்கல்யம் போன்ற சில படங்களே வெற்றிகரமாக ஓடின. அனேக படங்கள் அசல் தேறினால் போதும் என்ற வகையில்தான் ஓடின. மாமியார், மருமகள் இரண்டு படங்களும் ஒரே கதைதான். அதில் பெயர் மாறுதலும் ஒரு சில மாறுதல்களும் தான்

'ஜாதகம்' படத்தில் சாரங்கபாணியுடனும், சூர்யகலாவோடும்.

நாடக நடிகராக ..

இருந்தன. மாமியார் சுமாராகப் போயிற்று. அப்போது ஆர். என். ஆர். பிக்சர்ஸார் ஏவி. எம்.மின் கூட்டுறவோடு "ஜாதகம்" என்ற படத்தை தமிழ், கன்னடம் இரு பாஷைகளிலும தயாரிப்பதற்காக ஏற்பாடுகளைச் செய்து வந்தனர். பிரதம கதா பாத்திரங்களுக்கு புது முகங்களாக இருந்தால் தேவலை என்ற உத்தேசததில் நடிகர் தேர்தலை நடததி வந்தனர். கல்யாணம் என்ற ஒரு எக்ஸ்ட்ரா நடிகர் நாகேந்திர ராவிடம் பாலசந்திரனைப் பற்றிக் கூறினார். அதன் பயனாக டி. கே. பால சந்திரன் நாகேந்திரராவின் முன் நினறார்.

இளம் வயது, சிவந்த அழகிய மேனி; வலிவான தேகக்கட்டு: நாடக நடிகர்; ஏற்கெனவே பட உலகில் தலை நீட்டியவர்... நாகேந்திர ராவ் சிந்தித்தார். நாடக மூலம் புகழ் பெற்ற ராவ் நாடக நடிகரான பாலசந்திரனை ஆதரிக்கத் தயங்க வில்லை. ஏவி. எம்.மிடம் பாலசந்திரனை அழைத்துச் சென்றார் நாகேந்திரராவ். செட்டியார் பார்த்தார். இந்தச் சிறுவன் தனக்கு எப்படியும் ஏற்றவன் என்பதை தெரிந்து கொள்ள நெடு நேரமாகவில்லை அவருக்கு. மேக்–அப் டெஸ்ட் நடந்தது. உடனே ஏவி. எம். பாலசந்திரனை தன் ஸ்தாபனத்தின் நிரந்தர நடிகராக மூன்று வருஷ காலத்துக்கு ஒப்பந்தம் செய்து கொண்டு விட்டார்! அதன் பிறகுதான் பாலசந்திரன் 'ஜாதகம்' படத்தில் கதாநாயகனாக நடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜாதகம் ஒரு முழு நீள ஹாஸ்யப் படம். படவுலகில பட்டும் படாதது மாக இருந்த பாலசந்திரனும் சூர்ய கலாவும் பிரதம பாகங்களில் நடித்தனர். இருவரும் நன்றாகவே நடித்தனர். நல்ல எதிர்காலம் பாலசந்திரனுக்கு இருக்கிறது என்று பலரும் அபிப்பிராயப் பட்டார்கள். மற்றும் சாரங்கபாணி, வீகடம் கிருஷ்ண மூர்த்தி, கே. ஆர். செல்லம், கே. என். கமலம் ஆகியோரோடு நடித்ததோடு படத்தை டைரக்டும் செய்தார் நாகேந்திரராவ். படம் மக்களை மகிழச் செய்தது. முதலாளிகளையும் சந்தோஷப்படச்செய்தது. டி. எம். யூ. பதி இதன் கதை–வசனம் பொறுப்பை ஏற்றதுடன் சிறு பாத்திரத்தில் நடிக்கவும் செய்தார்.

அடுத்தபடியாக ஏவி. எம்.மின் 'அந்த நாள்' படத்தில் நடிக்க பால சந்திரனும் சூர்யகலாவும் சந்தர்ப்பம் பெற்றனர். எஸ். பாலசந்தர் எழுதி டைரக்ட் செய்த இப்படத்தில் அவரும் சிவாஜி கணேசன், பண்டரிபாய், ஜாவர் சீதாராமன், பி. டி. சம்பந்தம் முதலியோரும் நடித்தனர். அந்த நாள் படத்தில் பாலசந்திரன் இரண்டாவது கதாநாயகனாக நடித்திருக்கிறார்.

பாலசந்திரனுடன் பிறந்தவர்கள் ஆறுபேர். முத்தண்ணா சுகுமாரன் நாயர் தென்னிந்திய நேவிகேஷன் கம்பெனியில் ஜெனரல் மானேஜராக பணியாற்றுகிறா அடுத்தவர் வஞ்சியூர் மாதவன் நாயரை உங்களுக்குத் தெரிந்திருக்கும். ஆத்மசாந்தி, நவலோகம் படங்களில் கதாநாயகனாக நடித்த அவர் ஒரு சிறந்த நாடக நடிகர். தற்போது நாடகங்களில் நடிப்பதுடன் ஒரு கமர்ஷியல் இன்ஸ்டிட்யூட்டையும் நடத்தி வருகிறார் மாதவன். அவருக்கடுத்தவர்களான ரத்னம்மா, ராஜம்மா இருவரும் மணமாகி நல்லறமாகிய இல்லற வாழ்வை நடத்தி வருகின்றனர்.

ஐந்தாவதுதான் நம் கதாநாயகன் பாலசந்திரன்! அவருக்கு இளையவரான கே. கருணாகரன் நாயர் சிங்கப்பூரிலுள்ள இந்தியா ஹவுஸில் ஸ்டெனோகிராபராக இருக்கிறார். அத்துடன் அவர் ஒரு திறமைமிக்க எழுத்தாளரும்கூட. அவரது எழுத்தோவியங்கள் ஏராளமான பத்திரிகைகளில் வெளியாகியிருக்கின்றன. கடைக்குட்டியான ராதாகிருஷ்ணன் ஊரிலே படித்து வருகிறார். இந்தக் குடும்பத்தினரின் பாதுகாவலராக இருந்த புஷ்கரன் குஞ்சன்நாயர் துரதிருஷ்டவசமாக சென்ற ஜனவரி மாதம் காலமாகிவிட்டார்.

அசோக்குமாரைப்போல் நடிக்க வேண்டும் என்பதே அவரது லக்ஷியம் என்று கூறுகிறார் பாலசந்திரன். அசோக்குமார் நடித்த படங்களைப் பார்க்க அவர் தவறுவதே இல்லை. நமது தென்னிந்திய நடிக நடிகையரின் திறமையில் அவருக்கு அபார நம்பிக்கை யுண்டு. ஆந்திர நடிகையரில் ஜி. வரலக்ஷ்மி, சாவித்திரி இருவரது நடிப்பும் அவரது பாராட்டுதல்களைப் பெறுகின்றன. சாரங்கபாணியைப் போன்ற நடிகர் கிடைப்பது துர்லபம்; அவ்வளவு சிறந்தவர் என்று பெருமைப் படுகிறார் பாலசந்திரன். நாகேந்திரராவ்தான் சிறந்த வில்லன் என்கிறார் அவர். மனோஹரிடம் அவருக்கு மிகவும் கௌரவமிருக்கிறது. வீடு தலை, குமாஸ்தா படங்களில் அவர் நடிப்பு பாலசந்திரனை மிகவும் கவர்ந்து விட்டதாம். மலையாள நடிக, நடிகையரில் லலிதா, பொன்னம்மா, சத்யன், சகோதரர் வஞ்சியூர் மாதவன் ஆகியோரைப் பற்றிச் சிறப்பாகக் கூறுகிறார் அவர்.

புத்தகங்கள் படிப்பதும், கேரம் ஆடுவதும்தான் பாலசந்திரனுக்கு இரு முக்கியமான பொழுது போக்குகள். புத்தகம் படிக்காவிட்டால் தலை வெடித்துவிடும் அவருக்கு. தமிழ், மலையாளம், ஆங்கிலம் ஆகிய மூன்று பாஷைகளிலும் எழுதப் படிக்க, பேசத் தெரியும். மு. வரதராசனாரின் எல்லாப் புத்தகங்களையும் அவர் படித்திருக்கிறார். அவரிடம் பாலசந்திரனுக்கு அலாதி மரியாதையும் பக்தியும் இருக்கிறது. கன்னட படத்தில் (ஜாதகம்) நடித்தாலும் அந்தப் பாஷை அவருக்குத் தெரியாதாம். அவருக்கு ஹிந்தி எழுதப்படிக்கத் தெரியும். ஆனால் சரளமாகப் பேச வராது. மலையாள பாஷையில் வெளியான படங்களுள் கலையம்சத்தில் சிறந்து விளங்கியபடம் 'நவலோகம்' தான் என்று கூறுகிறார் பாலசந்திரன்.

பாலசந்திரனுக்குத் தற்போது இருபத்தாறு வயதாகி



'மாமியா'ரில.

'பிச்சைக்காரி'யில் நடன உடையுடன் பாலசந்திரன்.

பாலசந்திரனின் சகோதரர் வஞ்சியூர் மாதவன் நாயர் 'ஆத்மசாந்தி'யில் நடித்தார்.

இருபத்தியேழாவது வயது நடக்கிறது. 1928–ம் வருஷம் ஜனவரி மாதம் 14–ம் தேதி பிறந்தார் அவர். தன் முயற்சியில் முன்னுக்கு வந்தவர் அவர்.

ஆரம்பத்திலே நாடகங்களில் அவர் நடித்தார். எக்ஸ்ட்ராவிலிருந்து அயன் ஸ்திரீ பார்ட் வரை வேஷம் தாங்கியவர் அவர். நாடக உலகின் மூலம் செய்யக்கூடிய தொண்டைப் படவுலகின் மூலம் செய்ய முடியாது என்று, எல்லாக் கலைஞர்களையும் போல பாலசந்திரனும் அபிப்பிராயப்படுகிறார்.

படத்திலே நடிகர்களின் நிழலுருவம்தான் தெரியும். அவர்களிடமுள்ள குற்றங்குறைகளை அவர்கள் அறிந்து கொள்ளும் சந்தர்ப்பமே ஏற்படாமல் போய்விடுகிறது. ரஸிகர்களின் அபிப்பிராயத்தைக் கலைஞர்களுக்குத் தகுந்த முறையில் யாரும் எடுத்துச் சொல்லுவதில்லை. இதனால் தான் படவுலகில் ஈடுபட்டுள்ள கலைஞர்களிடமுள்ள குறைபாடுகள் நிரந்தரமானதாகி விடுகின்றன.

நாடக உலகிலே அப்படியில்லை. நாடகக் கலைஞன் மேடையில் தோன்றும்போதே ரஸிகர்களுடன் நேருக்கு நேர் நின்று அவர்கள் அபிப்பிராயத்தை அறிந்து கொள்ளுகிறான். குற்றங் குறைகளை நேருக்கு நேர் அறிந்து கொள்ளும் வாய்ப்பு அந்தக் கலைஞனுக்குக் கிடைக்கிறது.

ஒரு கட்டத்திலே நாடக நடிகன் பிரமாதமாக நடிக்கிறான்; ரஸிகர்கள் பிரமாதமாகக் கைதட்டி ஆரவாரித்து 'ஒன்ஸ் மோர்' என்று கூவுகிறார்கள். அந்தப் பாதையிலே சென்றால் உள்ள வரவேற்பு எப்படிப்பட்டது என்பதை அறிந்து அந்த அந்த வெற்றிப் பாதையிலே செல்ல ஆரம்பித்துப் பேரும் புகழும் பெறுகிறான். சில கட்டங்களிலே அவன் தோன்றி நடிக்கும் போது, ''உள்ளே போ'' என்று கூவுவார்கள் ரஸிகர்கள். நடிகன் அந்த பாகத்தில் சோபிக்க வேறு மார்க்கங்களைப் பின்பற்றித் தன் தவறைத் திருத்திக் கொள்ளுகிறான்; இதனால் தான் நாடக நடிகர்கள் கூடியவரை குறையின்றி நடிக்க முடிகிறது.

கட்சி என்று கலையுலகில் பேசப்படுவது அபத்தமானது. படஉலகிலே பல பாகத்தினரும், மொழியினரும இருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் மனப்பூர்வமாக ஒத்துழைத்தாலொழிய அக்கலை வளர முடியாது.

பட உலகில் புகழ்பெற்ற நடிகனாகாது ஊர் திரும்புவதில்லை என்ற உறுதியோடு ஊரை விட்டுச் சென்னை வந்தவர் அவர். அந்த வெற்றிப் பாதையிலே அவருக்கு ரஸிகர்கள் ஓரளவு வழிகாட்டியிருக்கிறார்கள் 'எல்லோருக்கும் நல்லவனாக யிருக்க வேண்டும். கட்சி மனோபாவங்களை விட்டுவிட வேண்டும்' என்று கூறுகிறார் பாலசந்திரன்.

இளமையும் அழகும் உடற்கட்டும் கொண்ட பாலசந்திரன் ஆதரிக்கப்பட வேண்டிய கலைஞர்களுள் ஒருவர். முதலாளிகளும் ரஸிகர்களும அவருக்கு நிறைய ஆதரவளிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

—எஸ். வி. ஸம்பத்குமார்.

பரிமளம் பிக்சர்ஸ்

சொர்க்கவாசல்

படக் காட்சிகள்



காதல் கை கூடாததால் கொதித்தெழும் காவலன்; காதலை இழந்த கன்னி; மூகமிழந்த காளை- இவர்களை உள்ளடக்கி, மக்களாட்சியின் மாண்பினை விளக்கிடும் மகத்தான சித்திரம். மக்கள் மன்றத்துக்கு மகத்தான காணிக்கை



மக்களை வாழ
வைக்கக்
கலை....என்ற
புதுப் பாடம்
தரும் பொன்
னேவியம்.

கலையால் அரச அவையில் இடம் பெற்றான்; கட்டழகியின் காதலையும் பெற்றான்; கபட நாடகத்தில் இடம் பெற்றான்; மக்கள் கவியானான்—புயல் கிளம்பியது...
வெற்றி பெற்றான்.

தன்னலமிக்க ஆதீனம்; கலை நலம் கொண்ட இளைஞன்; கட்டழகியான அரசிளங்குமரி—இவர்களுக்கிடையே நிகழ்ந்த சம்பவங்கள் சுவைப்படப் பின்னப்பட்டுள்ள அழகோவியம்....

நாடாளும்
மன்னனை எதிர்
க்கும் ஆற்றல்
பெற்ற பாடக
னுடைய வீரக்
காதை

கலையும் காதலும் கவர்ச்சிகரமாகப் பின்னிக் கொள்கின்றன. ஆனால் அந்தப் பொன்னாடையைக் கிழித்தெறிய, புரட்டனிடம் பதுமையாகிக் கிடந்த ஒரு பூபதி துணிகிறான்—புயல் கிளம்புகிறது! கலை மக்களின் காவலனாகிறது; புது வாழ்வு பிறக்கிறது நாட்டுக்கு.

அகமும் புறமும் பாடிய அருந்தமிழ்க் கவிவாணர் மரபி லுதித்த மதிவாணன்; அவனுடைய தங்கை அழகோவியம் திலகா......நெஞ்சை அள்ளும் சம்பவங்கள் நிறைந்தது; நேர்த்தி யான முறையிலே காட்சிகள்; தித்திக்கும் இசை; தென்றலும் புயலும் கலந்த உரையாடல் – அத்தனையும் கொண்ட மகத்தான திரை ஓவியம் "சொர்க்கவாசல்".

கெம்பராஜ் புரொடக்ஷன்ஸ்

கற்கோட்டை

திரைக்கதை-வசனம்

காட்சி 1

1921-ம் வருஷம்

கிருஷ்ணகுமாரி என்ற பாய் மரக் கப்பலின் காப்டனாக நியமிக்கப் பட்ட பிரதாபன் தந்தையையும் காதலி சுந்தரியையும் காண ஓடி வருகிறான். தகப்பனாரைப் பார்த்த பின் காதலியை மணக்க ஏற்பாடு செய்துவிட்டு அவள் விட்டுக்குப் போகிறான். அங்கே சுந்தரியின் முறைப் புருஷனாக வேண்டியவன்—அவள் அத்தான் ஆனந்தன்—தன்னை மணக்கும்படி சுந்தரியிடம் கெஞ்சுகிறான்.

ஆன: சுந்தரி! திரும்பிய இடமெல்லாம் உன் திருவுருவம். அல்லும் பகலும் உன் நினைவு. உன் மனம் இரங்கினால் என் மனம் குளிரும். மறுக்காதே!

சுந்: அவரைத் தவிர நான் வேறு ஒருவரை கனவிலும் கருத மாட்டேன்.

ஆன: என்ன? அந்த பிரதாபன் மயக்கத்திலே இப்படி பேசுகிறாய்! கேவலம் ஒரு கப்பலோட்டி! துறைமுகத்துக்கு ஒரு காதலி. பல ஊர்ப் பெண்கள் பழக்கம் அவனுக்கு உண்டு. நீ ஒரு அனாதை. மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்காதே!

சுந்: என் எதிரிலே அவரை ஏச வேண்டாம். அவர் மனோதிடம் எனக்கு நன்றாகத் தெரியும். ஒரு நாளும் எனக்குத் துரோகம் செய்ய மாட்டார்.

உள்ளே போய் விடுகிறாள். ஆனந்தன் பின் தொடருகிறான்.

ஆன: சுந்தரி! நீ உலகமறியாதவள். உன் தாயார் சாகும் தறுவாயில், உனக்கு எவ்விதமான குறையும் ஏற்படாமல் காப்பாற்ற வேண்டுமென்று என்னிடம் ஒப்படைத்ததை மறந்து விட்டாயா?

சுந்: நன்றாக நினைவிருக்கிறது. அந்த வாக்கை காப்பாற்ற வேண்டியது உன் கடமையல்லவா? என் மனம் கோணாமல் அவருக்கே கல்யாணம் செய்து கொடு.

ஆன: அவனுக்குக் கல்யாணம் செய்து கொடுப்பது: அதை பார்த்து நான் பல் இளித்து நிற்பது! இது உன் முடிவானால் அவனை உயிரோடு பார்க்கமாட்டாய்!

சுந்: அவரைக்

பாத்திரங்கள்

கெம்பராஜ்	பிரதாபன்
கே. சாரங்கபாணி	சண்முகம்
பி ஆர். பந்துலு	சேகர்
கிருஷ்ணகுமாரி	சுந்தரி
சந்த்யா	மங்களம்

டைரக்ஷன்:
கெம்பராஜ்

கண்டால் ஏன் இவ்வளவு பொரு மை? பயமுறுத்தாதே! அவருக்கு ஏதாவது ஏற்பட்டால் என்னையும் உயிரோடு பார்க்கமாட்டாய்.

'சுந்தரி சுந்தரி..' என்று பிர தாபன் கூப்பிடும் குரல் கேட்டு அவ னிடம் ஓடுகிருள் சுந்தரி. ஆசை யோடு அணைத்துக் கொள்ளுகிருன் அவன்.

சுந் : *பிரதாப்!*

பிர : *சுந்தரி!*

ஆனந்தன் வருவதைப் பார்க் கிருன் பிரதாப்.

பிர : *ஹலோ மிஸ்டர் ஆனந்த்! நீங்க லீவிலே வந்தீங்களா?*

ஆன : *ஆமாம், அதனுலேதான் கையிலே துப்பாக்கி இல்லே! லீவிலே வந்திருக்கேனும் லீவிலே!*

வெகு கோபமாக வெளியே போகிருன்.

சுந் : *என்னை கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமாம். பிரதாப்! எத்தனை நாளாக உன்னை எதிர் பார்த்து ஏங்கிக் கொண்டிருக்கிறது? ஏன் இவ்வளவு தாமதம்?*

பிர : *கடலில் பெரும்புயல் காற்று அடித்தது. கப்பல் தத்தளித்தது. மூழ்கிவிடுமோ என்று பயந்தேன்.*

சுந் : *அப்புறம்?*

பிர : *அப்புறம், உன்னை காணப் போகிறேனு என்று கலங்கினேன். உன் ஆழ்ந்த காதலே என்னை கரை சேர்த்தது. சுந்தரி! இப்பொழுது நான் யார் தெரியுமா?*

சுந் : *தெரியாமலென்ன?*

பிர : *அப்படி யென்ருல் யார் சொல்?*

சுந் : *என் இதயராஜா... என் பிரதாபன்தானே?*

பிர : *ஊ ஹூம்!*

சுந் : *உன் விளையாட்டு எனக்குப் புரியவில்லையே!*

பிர : *இதோபார்! நான் கிருஷ்ண குமாரியின் காப்டன்!*

சுந் : *என்ன?*

பிர : *கப்பல் கிருஷ்ணகுமாரியின் காப்டன்!*

சுந் : *ஓ! நீ ஓட்டும் கப்பலுக்குக் காப்டனு? போ, என்ன ஆனுல் எனக்கு என்ன?*

பிர : *ஏன், நான் காப்டன் ஆனது உனக்குச் சந்தோஷமில்லையா?*

சுந் : *எனக்குக் காப்டன் ஆனுல் தானே...!*

பிர : *இரண்டே நாள் பொறுத்துக் கொள். ஊரையே அழைத்து, உற வினரை உபசரித்து, நாவிற்கினிய நல்விருந்தளித்து, மண அறையை மலர்களால் அலங்கரித்து, பாங்குடன் பட்டாடை உடுத்தி, நாயனவாத்தி யம் நயமுடன் விளங்க, உன் கழுத் தில் தாலியைக்கட்டி உனக்குக் 'காப் டன்' ஆகப்போகிறேன். சரிதானே?*

வெட்கத்தோடு தோட்டத்திற்கு ஓடும் சுந்தரியைத் தொடருகிருன் பிரதாபன்.

காட்சி 2

அவர்களிடையேயுள்ள பிணைப் பைக் கண்டு ஆத்திரம் கொண்ட ஆனந்தன் டீ கடைக்குப் போகி ருன். அங்கே அவன் நண்பனும் கப்பல் கம்பெனியின் குமாஸ்தாவு மான சண்முகமும் பிரதாபனின் நண்பன் சபாபதியும் இருக்கிருர்கள்.

சண் : *நேத்திப்பயல், அதுக் குள்ளே பெரிய காப்டன். வருஷக் கணக்கா கணக்குப்பிள்ளையா அல் லாட்றேன். மொதலாளிக்குக் கண் அவிஞ்சாப் போச்சு?*

சபா : *உனக்கென்னடா வயத் தெறிச்சல். நீ ஒரு பழம் பெருச்சாளி. பிரதாபன் நல்லவன். காப்டனுக யோக்கியதை இருக்கு. கல்யாணத் துக்குன்னு ருபா வேறே குடுத்திருக் காரு.*

சண் : *அதிருஷ்டம்னு இப்படி யில்லே இருக்கணும்! இது நல்ல காலத்துக்கு இல்லே.*

ஆனந்தன் முகவாட்டத்துடன் அங்கு வருகிருன்.

சண் : என்ன ஆனந்த், சௌக்கியமா?...டேய், ஐயாவுக்கு டீ கொடுடா...மூஞ்சியை ஏன உர்ருன்னு வச்சிககிட்டிருக்கே? என்ன விஷயம்?

சபா : வேறென்ன விஷயம்? அத்தை மகள் உரிமை இவனுக்கு. காதல் உரிமை பிரதாபனுக்கு.

சண் : அப்படின்னு?

சபா : சுந்தரி இவனை அடியோடு கைவிட்டுட்டா!

சண் : அடப் போடா, நீ சுத்த கோழை! நீ என்ன

அழகுலே கொறவா?: ஆடம்பரத்துலே கொறவா? பிரதாபன் உன்னை விடப் புத்திசாலியா? அவனை வெட்டி எறிய வேண்டாமா?

சபா : அடடா, வாழை மரமா வெட்டி யெறிய?

ஆன : அதென்ன பிரமாதம்? அவன் செத்தா, அவள் உயிரோடு இருக்கமாட்டாளே!

சண் : ஆமாம் இருக்கத்தான் மாட்டாள். பொம்பளைங்க இப்படிச் சொல்லித்தான் ஆம்பிளைங்களைப் பய முறுத்துவாங்க. அவுங்க சொன்ன படி செய்திருந்தால் உலகத்துலே இன்னிக்கு மருந்துக்குக்கூட பொம்பளைங்க இருந்திருக்க முடியாது தெரியுமா? இதோ பாரு, உனக்கு சுந்தரி வேணுமா வேண்டாமா?

ஆன : வேண்டாமா? என்ன சொன்னாலும் கேட்கமாட்டாளே!

சண் : மந்திரத்தால் ஆகாததை தந்திரத்தால் சாதிக்கணும்!

சபா : ஏம்பபா! ஒரு வாழப்போற குடும்பத்தைக் கெடுக்கப் பாக்க றீங்க? அவன் அதிருஷ்டத்தை நீங்க மாத்த முடியுமா?

சண் : நெருப்புன்னா வாய் வெந்து போகுமா? சும்மாச் சொன்னா நெஜமுன்னு நம்பிட்டயே? என்னா அதுக்குள்ளே புறப்பட்டுட்டியே.

சபா : நாளன்னிக்கே பிரதாபன் கல்யாணம். பந்தல்காரனுக்குச் சொல்லணும். மேளக்காரனுக்குச் சொல்லணும். ஏகப்பட்ட வேலையிருக்கு.

சபாபதி போனதும் சண்முகம் ஆனந்தனிடம் பேசுகிறான்.

சண் : இனிமே சுந்தரி சபலம் உனக்கு எனனத்துக்கு?

ஆன : எப்படியாவது இந்தக் கலயாணத்தை நிறுத்தணும்,

சண் : அட மண்டு, அதுதான் சொலலிக்கிட்டிருக்கேனே...

ஒரு கடிதம் எழுதச் சொல்லி அதை மாஜிஸ்டிரேட்டிடம் சேர்க்கும்படிக் கூறுகிறான் சண்முகம்.

காட்சி 3

மணப்பந்தலிலே சுந்தரிக்குத் தாலி கட்டப் போகும்போது போலீஸார் வந்து ராஜத்துரோக குற்றத்திற்காக பிரதாபனை மாஜிஸ்டிரேட் சேகரிடம் கொண்டு போகிறார்கள். தேசத்துரோகியான சேகர், பட்டம் பதவிகளை விரும்பி பலரையும் அரசாங்க விருந்தாளியாக்கி வருகிறார். பிரதாபனை அவர் கற்கோட்டையில் அடைக்கச் சொல்லுகிறார். அங்கே போலீஸாருக்குத் தொந்தரவு கொடுத்ததற்காக பாதாளச் சிறையிலடைக்கப்படுகிறான். சுந்தரி அவனை விடுதலை செய்யும்படிக் கெஞ்சுகிறாள்.

சுந்: ஐயா! ஐயா!

சேக: யார் அது?

சுந்: அவரை விட்டுடுங்க ஐயா!

சேக: யாரை?

சுந்: அவரைத்தான். அவர் ஒண்ணுமே செய்யல்லே!

சேக: என்ன உளர்றே? அவர் ஒண்ணுமே செய்யலியாம்! அவரை விட்டுடணுமாம். யார் அவன்?

சுந்: அவர்தான். அந்த கிருஷ்ணகுமாரியின் காப்டனாக இருநதாங்களே, அதான் மணக் கோலத்திலிருந்து இழுத்துக்கிட்டு வந்துட்டாங்களே...

சேக: ஓ! அந்த பிரதாபனா?

சுந்: ஆமாம், அவரேதான். அவர் ஒரு குத்தமும் செய்யலே. அவரை விடுதலை செய்யுங்க.

சேக: அவனுக்கா விடுதலை? அவன் ராஜத்துரோகம் செய்திருக்கான்.

சுந்: ராஜத்துரோகம் என்னான்னு அவருக்குத் தெரியவே தெரியாதுங்க. யாரோ பொறாமைப்பட்டு இல்லாததும் பொல்லாததும் சொல்லி உங்க மனசைக் கலைச்சிருக்காங்க.

சேக: மூடு வாயை! நடந்த விஷயம் எனக்கே தெரியும். அவன் தண்டனை அடைந்தே தான் திரணும்!

சேகரின் கால்களைக் கட்டிக் கொள்ளுகிருள் சுந்தரி.

சுந் : ஐயா, அப்படிச் சொல்ல வேண்டாம். நான் ஒரு அனுதை. எனக்கு அவரைத் தவிர வேறு யாரும் கதியில்லை. என்னை உங்கள் சகோதரி போல நினைத்து உதவி செய்யுங்கள்.

சேக : ஊரிலுள்ள எல்லோருமே எனக்குச் சகோதரிகள் ஆனல் என் பாடு திண்டாட்டம்தான்.

சுந் : ஐயா! பெண் என்ருல் பேயும் இறங்குமே!

சேக : பேய் இறங்கலாம். ஆனல் சட்டம் இரங்காது!

சுந் : சட்டம்! இது யாரிட்ட சட்டம்? மணக்கோலத்தி லிருந்த எங்களைக் கருணையில்லாமல் பிரிப்பது தானு உங்கள் சட்டம்? ஏழை மக்களைக் காப்பதற்குப் பதில் அழிப்பதுதானு உங்கள் சட்டம்? பாழாப் போன சட்டம்!

சேக : சட்டத்தைப் பற்றி எனக்கே சொல்லவா வந்துட்டே?... ஏழுமலை! இவளைக் கழுத்தைப் பிடிச்சு தள்ளு!

அங்கிருந்து விரட்டப்பட்ட சுந்தரி பிரதாபனின் தந்தையிடம் வருகிருள். அவர் புத்திர பாசத்தால் துடித்துப் பிணமாகி விட்டது கண்டு பதறிப் போய்க் கதறுகிருள்.

காட்சி 4

சேகர் ஒரு அயோக்கிய சிகாமணி. இந்தியர்களைப் பழிவாங்கி வெள்ளைக்காரனிடம் நல்ல பெயரெடுக்க நினைக்கும் தேசத்துரோகி. அவன் செய்யாத அக்ரமமே இல்லை. தாசி விலாசினியின் ஆசைக் காதலன் அவன். அவள் வீட்டிற்கு ஆவலோடு வருகிருன். அவள் கட்டிலில் படுத்திருக்கிருள்.

சேக : விலாசினி! விலாசினி! உடம்பு சௌக்கியமில்லையா? என் மேல் கோபமா? எங்கே இப்படித் திரும்பு பார்ப்போம்!

விலா : என் கோபம் உங்களை என்ன செய்யப்போகுது? என்னையே மறந்துட்டீங்களே. என் கோபத்தை கண்டா பயப்படப் போறீங்க? என்னங்க! இந்த வீட்டுப் பக்கம் திரும்பி மாசம் அஞ்சாச்சு.

சேக : அதுதான் உன் லெட்டர் பார்த்தவுடனே அடுத்த வண்டியிலேயே கிளம்பி வந்துட்டேனே. என்ன செய்யறது விலாசினி? ராப்பகலா வேலை. ஒரு பைத்தியக்காரன் வந்து ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பிச்சிருக்கான். ஊர் ஜனங்களெல்லாம் கள் குடிச்ச குரங்குங்க மாதிரி கலாட்டா செய்யருங்க. ஆயிரக் கணக்கா ஆள்களை உள்ளே தள்ளிக்கிட்டிருக்கோம். மூச்சுவிடக் கூட நேரமில்லை.

விலா : உங்களைச் சொல்லி என்ன குத்தம்? என் அண்ணன லண்டன் போறபோது உங்க கவனிப்பிலே என்னை விட்டுட்டுப் போனுனே, அவனை சொல்லணும்.

சேக : அடேடே! பிரசங்கம் பிரமாதமாயிருக்கே! இது எதுக்குப் பீடிகை?

விலா : ஒண்ணும் இல்லே. ஒங்களுக்கு வாரிசா ஒரு ஜட்ஜ் பிறக்கப் போருன்!

சேக : ஐயையோ...!

விலா : இன்னும் நாலு மாசம் தான் இருக்கு, தொட்டில கட்டறதுக்கு.

சேக : எனக்கு அப்பவே சொல்ல வேண்டாம்? இதுக்கு ஒரு முடிவு கட்டணும்.

விலா : இன்னிக்கி கல்யாணம் செய்துக்கறேன், நாளைக்குக் கல்யாணம் செய்துக்கறேன்னு நம்பவச்சு.

இப்ப என் கழுத்தை அறுக்கவா பாக்கறீங்க?

சேக: பார்த்தியா பார்த்தியா! தப்பா நினைக்காதே! இதனாலே பெரிய உத்தியோகத்துலே இருக்கிற எனக்கு எவ்வளவு அகௌரவம் ஏற்படும்னு உனக்குத் தெரியாதா?

விலா: இந்த புத்தி அப்போ எங்கே போயிருந்தது? வேண்டாம் வேண்டாம்னு கெஞ்சிக் கேட்டுக் கொள்ளலியா? உங்க கௌரவத்துக்கு நானு பலி? என் கதி என்னன்னு கொஞ்சமாவது சிந்திக்க மாட்டீங்களே!

சேக: சிந்திக்க மாட்டேனு? உனக்காக ஒரு மாப்பிள்ளையும் தேடியிருந்தேன். அதுக்குள்ளே இது வந்துடுத்தே! ஆல்ரைட்! கிம்ப்பாக்கத்திலே எங்க அத்தை பங்களா காலியாயிருக்கு. அங்கே போய் நம்ம காரியத்தை ரகசியமா முடிச்சுடுவோம்.

இடையே பல காரியங்கள் நிகழ்ந்து விடுகின்றன. விலாசினிக்குப் பிறக்கும் குழந்தையை மறைத்து விடுகிறான் சேகர். கற்கோட்டைக்குப் போனதாகவும் பிரதாபன் மரணமடைந்து போனதாகவும் கூறி சுந்தரியின் மனதை மாற்றி ஆனந்தன் அவளை மணந்து கொண்டு விடுகிறான். எஜமானனை ஏமாற்றி பெரும் பொருள் ஈட்டி பாங்கி நடத்துகிறான் சண்முகம். அவனுடன் பங்கு கொண்டு ஊரை ஏமாற்றிப் பிழைக்கிறான் சேகர். ஒரு நாள் சண்முகத்திடம் அவசர அவசரமாக வருகிறான் சேகர்.

சண்: ஹிந்துஸ்தான் பாங்க் ஷேர்வித்ததுலே உங்க பங்குக்கு மட்டும் ஐயாயிரம் ரூபாய் லாபம்...வேறே ஏதாவது வாங்கணுமா?

சேக: ரப்பர் விலை ஏறிப்போகுதாம். செகரெட்டேரியெட்டிலிருந்து இந்த ரகசியம் எனக்குத் தெரிஞ்சுது. ஒரு இருநூறு ஷேர் எனக்காக வாங்கிடுங்களேன்.

சண்: சரி! சிமென்டு ஷேர்லே மார்க்கெட் ரொம்ப விருவிருப்பாயிருக்கு. இனிமே எல்லாரும் சிமென்டிலே வீடு கட்டப் போறாங்களாம். அதிலேயும் கொஞ்சம் ஷேரு ஒங்களுக்கும் வாங்கலாம்னு இருந்தேன்.

சேக: அதுக்கென்ன? வாங்கலாம். இம்பீரியல் பாங்க் பிக்ஸெட் டெபாசிட் அடுத்த மாதம் 'மெச்சுவ'ராகும். அப்போ வாங்குவமே!

சண்: பணத்தைப் பத்தி யோசனை வேணுங்க. ஓங்க பேர்லே ஓவர்டிராப்ட் போட்டுடறேன்.

சேக: நான் வந்த விஷயத்தையே மறந்துட்டேனே! ஜாதகத்தை ஜோசியரிடம் காட்டினேன். எல்லாம் பொருத்தமாயிருக்காம், எதுலேயும் கொறைச்சலே இல்லியாம். நீங்க சரின்னு போதும்.

சண்: அதெல்லாம் சரி, வயசுதான்.

சேக: வயசா? ஓங்க வயசுக்குப் பொருத்தம் இருக்க வேண்டாம்? சிறு வயசுப் பொண்ணு ஓங்க வீட்டைச் சமாளிக்க முடியுமா? கொஞ்சம் யோசனை பண்ணிப் பாருங்க.

சண்: அதுவும் நெசந்தான்!

சேக: உம்... அப்படி வாங்க. நம்ப விலாசினி நல்லா படிச்சவ; ரொம்ப அனுபவசாலி; அதுமட்டுமில்லே, சொத்து ஏராளம்!

சண்: சுமார் எவ்வளவு?

சேக: கொறைஞ்சது அஞ்சு லக்ஷம்!

சண் : அஞ்சு லக்ஷம்...! இப்பவே போய்ப் பாத்துடலாமா?

சேக : சந்தேகமென்ன 'புறப்படுங்க.

இருவரும் விலாசினி வீட்டுக்குக் கிளம்புகிறார்கள். அவர்கள் அவள் வீட்டுக்குப் போனதும் சண்முகத்தை ஹாலில் உட்கார வைத்து விட்டு உள்ளே போகிறார் சேகர். அவள் அப்போது படுக்கையில் படுத்துக் கொட்டாவி விடுகிறாள்.

விலா : ஓஹோ, ஏது இந்நேரத்திலே? திடீர்னு ஞாபகம் வந்தடுத்தோ? வீட்டுச் சாப்பாடு அலுத்துப் போயிருக்கும். இங்கே ருசி பார்க்கலாம்னு வந்திருப்பீங்க!

சேக : வீட்டுலே என்ன கொடுத்தாலும் நீ கொடுத்த மாதிரி இருக்குமா? விலாசினி! விளையாட்டுப் பேச்சுக்கு இது சமயமில்லே. வெளியே அவரை உட்கார வைச்சுட்டு வந்திருக்கேன்.

விலா : யாரு அவரு?

சேக : நம்ம பாங்கர் ஷண்முகம்! வரவேமாட்டேன்னு இருந்தார். இருக்கிறது இல்லாதது எல்லாம் சொல்லி, அவரைக் கூட அழைச்சிட்டு வந்திருக்கிறேன். தத்துப் பித்துன்னு உளறி, காரியத்தை கெடுத்துடப் போறே.

விலா : ஓ, அவரா? மீசைகூட நெரைச்சாப்லே இருக்குமே இல்லே!

சேக : மீசைதானே நெரைச்சிருக்கு? கல்யாணம் பேருக்குத் தானே? கம்மான் டார்லிங்!

சண்முகத்தை அவளுக்கு அறிமுகப்படுத்தி அவன் தலையிலே விலாசினியைக் கட்டி விடுகிறார் சேகர்.

காட்சி 5

பாதாளச் சிறையிலே அவதிப்படும் பிரதாபன் ஒரு நாள் இரவு, 'டக் டக்' என்ற சப்தம் வருவதைக் கவனிக்கிறான். யாரோ சுரங்கம் வெட்டுவது போல் தோன்றவே யோசித்து சட்டியை உடைத்துச் சுவரில் தேய்த்துச் சுரண்டுகிறான். அப்போது ஒரு கிழவன் சுவரைத் தள்ளிக் கொண்டு தலையை நீட்டுகிறான். சிதம்பரம் என்ற அந்தக் கைதி இந்திரபுரி திவானாக இருந்தவன். அவன் ஏராளமான ஐசுவரியங்களை ஓரிடத்தில் மறைத்து வைத்திருந்தான். அவனோடு சுரங்கம் குடைந்து தப்பி ஓடத் தீர்மானிக்கிறான் பிரதாபன். ஆனால் கற்கள் சரிந்து சிதம்பரத்தின் உயிரைக் குடிக்கின்றன. அவனை கோணியில் கட்டி கடலில் எறியத் தீர்மானிக்கின்றனர் போலீஸார். அவர்கள் கைதியைக் கோணியில் கட்டிய பின் வெளியே சென்றிருக்கும்போது பிரதாபன் சிதம்பரத்தின் உடலைச் சுரங்கத்தில் தள்ளிவிட்டு தான் அந்த கோணியில் புகுந்து கொள்ளுகிறான். கடலில் எறியப்பட்ட பின் நீந்திக் கரைசேர்ந்து இந்திரபுரி புதையலையும் கண்டெடுத்து கோடீஸ்வரனாகிறான்.

இப்படி சுமார் பதினான்கு வருஷங்கள் பாடுபட்ட பின் பணக்காரனாகி விட்ட பிரதாபன் தன் சுந்தரியையும் தகப்பனாரையும் காண மாறு வேடத்தில் பாதிரியைப் போல் சபாபதியிடம் வருகிறான்.

பாதிரி : பத்து பதினைந்து வருஷத்திற்கு முன்னே உன் வீட்டிலே குடியிருந்தானே, பிரதாபன்!

சபா : பிரதாபனா? ரொம்ப நல்லவனுங்க. அவனைக் கொண்டு போய்க் கற்கோட்டையிலே போட்டுட்டாங்களே! உயிரோடிருக்கானா? உங்களுக்கு தெரியுமா?

பாதி : நன்றாகத் தெரியும், அடிக்கடி கற்கோட்டையில் சந்தித்திருக்கிறேன். பாவம், படாத பாடுபட்டு உயிர்விட்டான்.

சபா : என்ன அநியாயம்! அந்தப் பாவிங்க இழுத்தட்டுப் போய் மாட்டிட்டாங்க.

பாதி : யாரு?

சபா : ஐயோ! அந்தக் கதையை ஏன் கேக்கறீங்க?

பாதி : ஆமா, அதைக் கேட்டு என்ன பிரயோஜனம்? இதோ பாரு அவன் கிட்டே ஒரு வைர மோதிரம்

இருந்தது. அதை அவனுடைய நண் பர்களுக்குக் கொடுக்கும்படிச் சொன்னுன்.

சபா: வைர மோதிரமா? யாருங்க அந்த நண்பர்கள்?

பாதி: சண்முகம், ஆனந்தன், சபாபதின்னு சொன்னுன்.

சபா: எம்பேரையும் சேத்திருக் கானே. அந்தப் படுபாவிகளுக்கு என்னத்துக்குங்க? பிரதாபனைக் கண்டாலே அவங்களுக்கு வயித் தெறிச்சலுங்க. காப்டனுயிட்டான்னு சண்முகத்துக்கு ஒரே ஆத்திரம். சுந்தரியைக் கல்யாணம் கட்டிக்கப் போருன்னு ஆனந்தனுக்குப் பொருமை மந்திரத்தால் ஆகாத தைத் தந்திரத்தாலே சாதிக்க லாம்னு சொன்னுங்க. சண்முகம் டீக்கடையிலே பேசினது எனக்கு நல்லா ஞாபகமிருக்குங்க. அந்தச் சண்டாளனுங்க என்ன செஞ்சாங் களோ, தாலி கட்ற சமயத்திலே அவனை இழுத்துக்கிட்டுப் போயிட் டானுங்க.

பாதி: பிரதாபனுடைய அப்பா...

சபா: ஐயோ! அதையேன் கேக் கறீங்க? பிள்ளையைப் பிரிஞ்ச ஏக்கத் துலே துரும்பு தும்பாப் போயிட் டாரு. டாக்டர் வயத்திலே புண் ணுன்னு சொன்னுரு. அவருக் கென்ன தெரியும்? சோறு இல்லா மெப் பட்டினி கிடந்து குடல் காஞ்சு, 'பிரதாபா, பிரதாபா'ன்னு சொல்லி கிட்டே உயிரை விட்டாருங்க.

இதைக்கேட்டதும் பிரதாபன் துடிதுடித்துப் போகிருன். அவன் கண்களிலே நீர் அருவியென வழிந் தோடுகிறது.

சபா: நீங்க ஏன் அழறீங்க?

பாதி; ஒண்ணுமில்லே! என் தகப்பனுர் ஞாபகம் வந்தது. ஆனந் தன், சண்முகம்!!?

சபா: அவுங்களுக்கு என்னுங்க கேடு? அந்த ஆனந்தன் அசெம்பிளி மெம்பராம், இப்ப பட்டணத்துலே இருக்கான், அந்த சண்முகம்... அவனும் பட்டணத்திலெயே இருக்கா னுங்க. எப்படியோ கொள்ளையடிச்சு பெரிய பாங்கி வச்சிருக்கானுங்க. என்னுயிருந்தா என்ன? ஒரு பொண் ணைக் கட்டிக்கிட்டிருக்கான், மகா மட்டங்க. அது ஜட்ஜை வச்சிகிட் டிருக்குதாம். நமக்கேங்க ஊர் வம்பு? என்னைப் பாருங்க. நல்ல மொறை யிலே பொழைக்கணும்னு டவரா கழுவறேனுங்க.

பாதி: அப்படின்ன நீதான் பிர தாபனுடைய நண்பன். இதை நீயே எடுத்துக் கொள்?

மோதிரத்தை சபாபதியிடம் கொடுக்கிருன் பிரதாபன்.

சபா: இருங்க. பெஷலா ஒரு கப் டீ போட்டுத் தர்றேனுங்க.

பாதி: இல்லே. வேண்டாம்... வேண்டாம்! வந்தனம்.

அங்கிருந்து கிளம்பிப் போகிருன் பிரதாபன். நேரே சண்முகத்திடம், இந்திரபுரி ஜமீன்தார் என்று சொல் லிக் கொண்டு போய்ச் சேருகிருன்.

சண்: வாங்க வாங்க! நமஸ் கார்ம். இந்த ஊர் பேரையே கேட்ட தில்லேயே? புது ஜமீன்தார் போலிருக்கு. கடன் வேணுமா? சுமார் எவ்வளவு?

ஜமீ: உள்ளே வரும்போது போர் டைப் பார்த்தேன். ராவ் பகதூர் சண்முகம்னு இருந்தது. அந்தப் பட்டத்தை வாங்க ரொம்பச் செலவா யிருக்குமில்லே?

சண்: (அலக்ஷியமாகச் சிரித்து) இதென்ன பிரமாதம்? நம்ம கவர்ன மெண்டுக்கே அஞ்சு லக்ஷம் கடன் கொடுத்திருக்கேன். மந்திரி மகா தேவனுக்கு ஒரு லக்ஷம் அமைத்தாக் கொடுத்திருக்கேன், அதுமட்டு மென்ன, போலீஸ் ஆபிஸர் கடபட ஸிங்குக்கு அவசரம்னு, பாதி ராத்திரி யானுலும் தடபுடன்னு இங்கேதான் வரணும்!

ஜமீ: ஆமாம். இவ்வளவு சம்பாத் தியம் உங்களுக்கு எப்படி வந்தது?

சண்: அதுதானுங்க நம்ப மூளை வேலே! பிலிம் கம்பெனிகளுக்கு ஒரு பாங்கியும் கடன் கொடுப்பதில்லே. நான் ஒருத்தன்தான் துணிஞ்சி அந் தத் தொழில்லே இறங்கியிருக்கேன்.

ஆனா அநியாய வட்டி வாங்கறது கிடையாதுங்க. ஞாயமா நூத்துக்கு அம்பது பர்ஸண்டுதான். முன்னே பின்னே தெரியாதவங்களுக்குக் கண்ணை மூடிக்கிட்டு பணம் கொடுக்கறதுக்காக இருபது பர்ஸண்டு ராயல்டி. அவ்வளவுதான். இது தவிர அது இது எத்தனையோ வியாபாரம், எல்லாம் சொந்த முயற்சிங்க. அதிருக்கட்டும், நீங்க படம் புடிக்கப் போறீங்களா? இப்ப எல்லா ஜமீன்தாரும் அந்த வேலையைத்தானே ஆரம்பிச்சிட்டிருக்காங்க. ஒங்களுக்குக் கடன் வேணுமா? சுமார் எவ்வளவு?

சண்முகத்திடம் ஒரு கடிதத்தைக் கொடுக்கிறான் பிரதாபன்.

ரூ. 5க்கு

15 ஜுவெல் கைக்கடிகாரம்

ரூ. 5-க்கு ஒரு பவுண்டன் பேனாவும், 15 ஜுவெல் கைக்கடிகாரமும் அடையலாம். அழகுக்கும், உறுதிக்கும் 15 வருஷ உத்தரவாதம். தபாற்செலவு ரூ. 1-2-0

National Swiss Watch Supplier

Halka No. 28 (P.P.M.) Meerut

அமெரிக்க விஞ்ஞானி சமீபத்தில் கண்டுபிடித்த ரேடியோ

மின்சாரமோ, பாட்டரியோ இன்றி, ஸ்பஷ்டமாக நீங்கள் செய்திகளையும் சங்கீதத்தையும் தெளிவாகக் கேட்கலாம். விலை நெ. 555 ரூ. 5. ஸ்பெஷல் நெ. 666 ரூ. 7/8. ஸ்பெஷல் டிலக்ஸ் நெ. 777 ரூ. 9/8. பாக்கிங் மற்றும் தபால் கட்டணம் ரூ. 2/8. 5 வருஷத்திற்குள் ஏதாவது பழுது ஏற்பட்டால் இலவச ரிப்பேர் செய்ய உத்திரவாதம். உடனே எழுதவும்.

ஸோல் ஏஜண்ட்ஸ் :

AMERICAN RADIO STORE

Halka No. 28 (P.P.M.) Meerut.

சண் : கத்தியவாடு பாங்க் அன்லிமிடெட் கெரிடியட்டுன்னு? வரம்பில்லாமே வேண்டிய போதெல்லாம் பணம் கொடுக்கணும்னு...வழக்கமே புதிசாயிருக்கே ?

ஜமீ : உங்களது எல்லாம் சில்லறை வியாபாரம் போலிருக்கு ! அதுதான் உங்க பேச்சும் சில்லறையாயிருக்கு. சமாளிக்க முடியாதுன்னு சொல்லிடுங்க. வேறே பாங்குக்கு லெட்டர் இருக்கு. அங்கே போயி வாங்கிக்கறேன்.

சண் : உக்காருங்க...உக்காருங்க. இடத்தைப் பார்த்து மலைக்காதீங்க. அதிகம்னு ஒரு லட்சமா ?

பிரதாபன் தன் செலவுகள் பற்றிக் குறிப்பிட்டதைக் கேட்டுத் திடுக்கிடுகிறான் சண்முகம். அவனிடம் உளவறிந்த பின் ஆனந்தனிடம் போகிறான் பிரதாபன்.

காட்சி 6

ஆனந்தனின் மகனைப் புலி வாயிலிருந்து காப்பாற்றிய பிரதாபனுக்கு அவன் வீட்டிலே ராஜோபசாரம் நடக்கிறது. ஆனந்தன் பேசிக் கொண்டிருந்து விட்டு கௌன்சில் கூட்டத்திற்குப் போய் விடுகிறான். குமார் தன் தாயை அழைக்கிறான். சுந்தரி வருகிறாள். பிரதாபன் மனங்குமுறுகிறான். பிரதாபனைக் கண்டு திடுக்கிட்டுப் போகிறாள். குமார் பயந்து விடுகிறான்.

குமா : அம்மா! உடம்புக்கு என்ன ?

சுந் : அணைந்து போக இருந்த நம் குல விளக்கைப் புயல் காற்றிலிருநது காப்பாத்தின இந்த மகானுடைய தரிசனத்தால் ஏற்பட்ட மயக்கம். வேறு ஒண்ணுமில்லே, வா அப்பா.........(சோபாவருகே வந்து) உட்காருங்க !

குமாரை சாக்குச் சொல்லி அப்பாவிடம் அனுப்பி விடுகிறாள் சுந்தரி. அவள் உண்ணக் கொடுக்கும் எதையும் ஏற்க மறுத்த பிரதாபன் தன் கதையைச் சொல்லுகிறான்.

பிர : பல வருஷங்களுக்குமுன் நான் ஒரு பெண்ணைக் காதலித்தேன்.

அவளும் என்னை மிகவும் காதலித்தாள். கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்தேன். தாலி கட்ட நொடிப் பொழுதுதான் இருந்தது. அதற்குள் பெரிய புயல் காற்று அடித்தது. நாங்கள் பிரிக்கப்பட்டோம். என்றுவது ஒரு நாள் அவளை அடைவேன் என்ற ஆசையால், அனுபவிக்க முடியாத கஷ்டங்களை யெல்லாம் அனுபவித்தேன்......ஆனால் .....

சுந் : ஆனலென்ன?

ஜமீ : அவள் என்னை மறந்து வேறொருவனை மணம் செய்து கொண்டுவிட்டாள்.

சுந் : அப்படியில்லே... அப்படியில்லே! அந்தக் கதை அப்படியில்லை!

சுந்தரி பிரதாபனை சந்தேகமற தெரிந்து கொண்டு விட்டுத்தான் அப்படிக் கதறி விடுகிறாள்.

ஜமீ : அந்தக் கதை உங்களுக்கு எப்படித் தெரியும்?

சுந் : எனக்கு எப்படித் தெரியும்? ஆமாம் எனக்குத் தெரியாது.. அப்படியிருக்கக் கூடாது என்று சொன்னேன். வாய் தவறுதலாகச் சொல்லிவிட்டேன்.

ஜமீ : அழுவது எதற்கு?

சுந் : உங்களுக்காக இல்லே... இல்லே... உங்கள் கதைக்காக. எவ்வளவு சோக மயமான கதை? வாழ்க்கையில் எத்தனை கஷ்டங்களை அனுபவித்து விட்டீர்கள்? ஐயோ! இதற்கெல்லாம் அவள்தானே காரணம். அவள் ஒரு பாவி! அவளை நீங்கள் எவ்வளவு காதலிக்கிறீர்களோ? அவளுக்கு மன்னிப்பு உண்டா?

பிரதாபன் வேதனை தாங்காது எழுந்துபோய் விடுகிறான். 'பிரதாப்-...பிரதாப்..' என்று கூவியபடி சோபாவில் சாய்கிறாள் சுந்தரி.

காட்சி 7

விலாசினிக்குத் தன்மூலம் பிறந்த குழந்தையை சேகர் தன் மாமியாரின் பாழடைந்த பங்களாவில்தான் கொன்று போட்டார். அதை விலைக்கு வாங்கி அந்த வீடு முழுவதையும் பிரமாதமாக மாற்றி அலங்கரித்து விடுகிறான் பிரதாப். ஒரு அறை மட்டும் பாழடைந்தே கிடக்கிறது. சேகர், அவர் மனைவி மங்களம், சண்முகம், விலாசினி ஆகியோரைத் தன் மாளிகைக்கு அழைக்கிறான் பிரதாப். பாழடைந்த அறைக்கு அவர்கள் வருகின்றனர்.

ஜமீ : வாங்க... வாங்க.

விலா : இந்த ரூம் மட்டும் ஏன் இப்படி இருக்கு?

ஜமீ : இது ஓர் ஆச்சரியமான இடம். சொல்ல எனக்கே பயமாயிருக்கு!

சுவற்றில் எழுதப்பட்டிருக்கும் எலும்புக்கூடு படத்தைப்பார்த்து விலாசினி கூச்சலிடுகிறாள்.

ஜமீ : ஏன், இவ்வளவு பயம்?

விலா : பயம் ஒண்ணுமில்லே. நீங்க சொல்லுங்கோ!

ஜமீ : ஒவ்வொரு ராத்திரியும் பன்னெண்டாவது மணி அடித்தவுடனே "குவா... குவா" என்று குழந்தை அழுகிற சப்தம் கேட்கிறது. மறு நிமிஷமே அந்தக் குரல் இந்த வாசல் வழியாக வெளியே செல்கிறது. அப்படியே பின்புறமிருக்கும் படிக்கட்டு வரை சென்று யாரோ கழுத்தை நெறிப்பதுபோல "க்வாக்" என்று நின்றுவிடுகிறது...

இதைக்கேட்ட விலாசினி மயக்கமாகிக் கட்டிலில் விழுந்து விடுகிறாள்.

மங் : ஐயையோ, விலாசினிக்கு மயக்கம் வந்துடுத்தே!

சண் : மயக்கமா? ஏன் வந்தது?

அவன் தன் குல்லாய்கொண்டு விசிறுகிறான். பிரதாபன் ஒரு பாட்டிலை அவள் மூக்கில் காட்டி முகரச் செய்கிறான். விலாசினி கண் திறக்கிறாள்.

மங் : என்ன அற்புதமான மருந்து! உங்களுக்கு வைத்தியம் கூடத் தெரியுமா?

ஜமீ : அரேபியாவிலே தெரிந்து கொண்டேன்.

சண் : பலே பலே! என்னைக் கண்டு இவ ஒரு நாளாவது இப்படிப் பயப்படலியே! என்னங்க, இந்த மாதிரி ரெண்டு கதை நமக்கும் சொல்லிக் கொடுங்களேன!

சேக : கட்டுக் கதையெல்லாம் சொல்லிப் பெண்களைப் பயப்படுத்தாதீங்க.. சேச்சே.... இந்த ரூம்லே காத்தே இல்லியே!

ஜமீ: தோட்டத்துக்குப் போவோம் ...காபி ரெடியாயிருக்கும். வாங்க...

காட்சி 8

பிரதாபன் சபாபதியுடன் சேர்ந்து சதிகளைப்பற்றி விவரங்களறிகிருன், பழிவாங்கும் படலத்தையும் ஆரம்பித்து விடுகிருன். தன் பேருக்கு ஒரு தந்தியை கேர் ஆப் சண்முகம் என்று பம்பாயிலிருந்து கொடுக்கும்படி சபாபதியிடம்கூறி பம்பாய்க்கு அனுப்புகிருன். சண்முகம் தந்தியைப் படிக்கிருன். படித்துவிட்டு டெலிபோனில்பேச ஆரம்பிக்கிருன்.

தனிமையில் படிக்கவேண்டிய

கொக் சாஸ்திரம்

நீங்கள் படித்திராத வசிகரண ஆசனங்கள், யந்திரம், 200 ஆண் பெண் படங்கள், ரகசிய கட்டுரைகள் அடங்கியது விலை ரூ. 3/- தபால் செலவு ரூ. 1/-.

படுக்கையறைப் படங்கள்

அழகிய படுக்கையறைக் காட்சிகளைப் பார்க்கவேண்டுமானல் உடனே 50 அடங்கிய ஒரு செட்டுக்கு எழுதுங்கள். விலை ரூ 5/- தபால் செலவு ரூ. 1/-.

இரண்டிற்குமாக ஆர்டர் செய்தால் விலை ரூ. 8/-. (கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்தில்)

H. H. Stores, (PPM)
Post Box 51, MEERUT.

சண் : ஹலோ... எக்ஸ்சேன்ஜா? எட்டு அஞ்சு...மூணு...ஆறு பேசறது! பம்பாயி 34345 ..இதுக்கு ஒரு கால் போடுங்கம்மா ... அர்ஜண்ட் ... அப்படியே இன்னொரு காலே .. நாகப்பூர் 952 ... இதுவும் அர்ஜண்டுதான்.. மிஸ்ஸி! கொஞ்சம் சிக்கிரமா கொடுக்கிறியா?

ரிஸிவரை வைக்கிருன். மணி அடிக்கிறது.

சண் : ஹல்லோ ...... ஹல்லோ! யாரு? பம்பாயா? மாணிக்கலாலா பேசறது? ராம் ராம். சலாம் சேட்டு ...மார்கெட் கைஸா ஹை? மூஸா கோல்டு கைஸா ஹை? ..அச்சா... அச்சா...சில்வர்? பத்தாயிர தோலா தக்கமும் தோ ஹஸார் வெள்ளியும் நமக்கு வாங்கிப் போடுங்க...

வைத்து விடுகிருன் ரிஸிவரை. மீண்டும் மணி அடிக்கிறது.

சண் : ஹல்லோ! ஹல்லோ! யாரு கோவர்த்தனலாலா பேசறது? புள்ளை குட்டியெல்லாம் சௌக்கியந்தானே? ஒரு நாலாயிரம் மூட்டை நாகப்பூர் சக்கரையும் இருவத்தையாயிரம் மூட்டை மைசூர் சக்கரையும் நம்ம பேருக்குப் போடுங்க...டிராப்டு அனுப்பிச்சுடறேன்...இப்பவே அனுப்பிச்சுடறேன்!

ஜமீன்தாரிடம் அவர் பேருக்குத் தந்தி வரவேயில்லை என்று புளுகி விடுகிருன்.

காட்சி 9

ஆனந்தனைத் தன் வீட்டுக்கு வரவழைத்துத் தன்னை அறிமுகப் படுத்திக் கொள்ளுகிருன் பிரதாப்.

பிர : நன்ருகப் பார்! கண்ணைத் திறந்து பார்! கவனித்துப் பார்! சிப்பாய் ஆனந்தனே, சிந்தித்துப் பார்! நான் ஜமீன்தாரல்ல. கப்பலோட்டி பிரதாபன்! உன் அயோக்கியத் தனத்தை வெளிப்படுத்தப் புத்துயிர் பெற்று வந்திருக்கிறேன்.

ஆன : பிரதாபனு?

இருவரும் சண்டை போட்டு மண்டையுடைத்துக் கொள்ளுகின்கின்றனர். பிரதாபன் சீறுகிருன்.

பிர : மிலிட்டரி கண்டிராக்டில கொள்ளை யடித்தது, தேசத் தொண்டனுக நடித்து வருவது, நான் இறந்தே விட்டேனென்று பொய் சொல்லி சுந்தரியை ஏமாற்றினது : நீ எப்பேர்ப்பட்ட நயவஞ்சகன் என்று அவளிடம் சொல்லுகிறேன், துரோகி!

ஆனந்தன் கோபத்தோடு வீட்டுக்கு ஓடுகிருன். இந்திரபுரி ஜமீன்தாரின் சதி காரணமாகத் தான் தற்கொலை செய்து கொள்ள நேரிட்டது என்று மகன் குமாருக்கு எழுதி வைத்துவிட்டு, சுட்டுக்கொண்டு சாகிருன் ஆனந்தன். குமார் கடிதம் கண்டு குமுறி பிரதாபனைக் கொல்லக் கிளம்புகிருன். சுந்தரி தடுத்துத் துடிக்கிருள். அவள் குமார் அறியா வண்ணம் பிரதாபனிடம் போகிருள்.

சுந் : பிரதாப் ! உன்னை நேசித்ததற்கு இருபது வருஷங்கள் கண்ணீரும் கமபலையுமாகக் கழித்தேன். நான் அனுபவித்த கஷ்டங்கள் போதாமதனறு என்னை ஏன் இந்த நிலைமைக்குக கொண்டு வந்தாய்? என் மாங்கல்யத்தைப பறித்ததால் உனக்கு வந்த லாபமென்ன ? ஆனந்தனைக் கொன்றதால நீ அடைந்த பயனென்ன ?

பிர : உம்.. பதினுலு வருஷங்கள் கற்கோட்டை இருடசிறையில் புழுப்போல் துடித்த எனக்குத்தான் அதன் பயன் தெரியும். என தலை மறைந்ததும் என விரோதி ஆனந்தனை மணந்து இன்பசாகரததில் மிதந்து கொண்டிருந்த உனக்கு அதன் பயன எப்படித்தான் தெரியும ?

சுந் : பிரதாப் ! என் விஷயத்தில் உனக்கு ஏன் இந்தக் கல் நெஞ்சம் ? நான் என்ன சுகம் அடைந்து விட்டேனென்று உனக்கு இந்தக் கோபம் ? உன்னைப் பிரிநதிலிருந்து என் வாழ்க்கையே சூனியமாகி விட்டது. உன்னைக் காணவேண்டுமென்று பல முறை முயற்சி செய்தேன். மாஜிஸ்டிரேட்டிடம் கெஞ்சினேன். நீ ராஜத துரோகி ; உனககு விடுதலை கிடையாது எனறு சொலலி விட்டான்.

பிர : அவன் சொன்னது பொய் !

சுந் : நானும் நமப வில்லை. என்ருவது ஒருநாள் நீ திரும்பி வருவாயென்று காத்திருந்தேன். நீ இறந்து விட்டாய் என்று ஆனந்தன் சொன்

ஞர். அதை நம்பினேன். பாழான பெண் ஜன்மம். உலக நிந்தனைக்கு அஞ்சி வாழ வேண்டும். வேறு வழியில்லாமல் ஆனந்தனை மணந்தேன். இத்தனை வருஷங்களில் ஒரு நாளாவது மனமாறச் சிரித்ததில்லை. சுகத்தோடு வாழ்ந்ததில்லை. தற்கொலை செய்து கொள்ளத் தைரியமில்லாமல் வாழ்ந்து வருகிறேன். இது என் தலைவிதி.

பிர: சுந்தரி! நம் துக்கத்துக்கெல்லாம் ஆனந்தனே காரணம்! 'துப்பாக்கி யிருந்தால் உன்னை சுட்டிருப்பே'னென்று அவன் சொன்னது உனக்கு ஞாபகமில்லையா? எனக்கு எதிராக சூழ்ச்சி செய்தான். கள்ளக் கடிதமெழுதி மாஜிஸ்டிரேட்டுக் கனுப்பினுன். என்னை பதினைந்து வருஷங்கள் கற்கோட்டையில் கதறச் செய்தான். நான் இறந்தே விட்டேனென்று பொய் சொல்லி உன்னை ஏமாத்தினுன். இந்த வீட்டிலேயே என்னை கொலை செய்யப் பார்த்தான். அவன் செய்த அநியாயங்களை உன்னிடம் தெரிவிப்பதாகச் சொன்னேன். அதற்கு அஞ்சி தற்கொலை செய்து கொண்டான்.. இதில் நான் செய்த குற்றமென்ன?

சுந்: நான் மனதார நேசித்த பிரதாபன் நீ. என் கைப்பிடித்த கணவன் ஆனந்தன். யார் பக்கமும் பேச என்னுல் முடியவில்லை. பிரதாப்! உன் பழி வாங்கும் எண்ணத்தை இத்துடன் நிறுத்து. நீ தான் தன் தந்தையின் சாவுக்கு காரணம் என்று குமார் நினைக்கிறுன். இதுவரை உன்னை தெய்வமாகப் பூஜித்து வந்தான். இப்பொழுது உன் பெயரை எடுத்தாலே கோபத்துடன் கொதிக்கிறுன். ஆத்திரத்தில் உன்னிடம் சண்டைக்கு வந்தால், அவனுக்கு எந்தத் தீங்கும் நேராமல் காப்பாத்து.

பிர: சுந்தரி! குமாரிடம் எனக்கேது கோபம்? உலகமறியாத சிறுவன்.

சுந்: நான் வருகிறேன்.

பிர: சுந்தரி!

சுந்: என்ன?

போய்விடுகிருள் அவள்.

காட்சி 10

சண்முகம் போட்ட முதலெல்லாம் கோவிந்தாவாகி விடுகிறது. அவன் விலாசினியின் பணத்தோடு கம்பி நீட்ட முயலும் போது ஜமீன்தாரின் ஆட்கள் பிடித்து, அணுவணுவாக அவன் பணத்தைப் பறித்து உயிரையும் சிதைத்து வருகிருர்கள்.

மங்களம் ஒரு சண்டாளி. மூத்தாள் பெண் சுசீலாவை மருந்து கொடுத்துக் கொலை செய்யத் தீர்மானித்து பிரதாபனிடம் வருகிருள். அவன் அவள் மனதை ஒருவாறு புரிந்து கொண்டு விடுகிருன்.

ஜமீ: இங்கே பாருங்க, சகல வியாதிக்கும் என்னிடம் மருந்து இருக்கு. ஒவ்வொன்றும் ஒவ்வொரு தேசத்திலிருந்து கொண்டு வந்திருக்கிறேன். (அலமாரியிலிருந்து ஒரு பாட்டிலை எடுத்து) இது கொடூரமான விஷயம். இதிலே ஒரு துளி எடுத்து ஒரு அவுன்ஸ் தண்ணீரிலே கரைச்சி ஒரு சொட்டு கொடுத்தாப் போதும். தீராத வியாதி யெல்லாம் தீர்ந்துவிடும்.

மங்: கைதவறி ஒரு சொட்டுக்கு மேலே கொடுத்தால்?

பிர: உயிரே போய்விடும்.

மங்: அப்படீன்னு உயிர் எப்படி போச்சுன்னு கண்டுபிடிக்க?

ஜமீ: எமனுக்கே ரெண்டு வருஷம் பிடிக்கும்!

மங்: நான் வந்த விஷயத்தையே சொல்ல மறந்துட்டேனே! நம்ப கண்ணனுக்கு அடிக்கடி 'காக்கா வலிப்பு' வர்றது. பெரிய பெரிய டாக்டரெல்லாம் பார்த்தாச்சு. ஒண்ணும் பிரயோஜனப் படலே. அதுக்கு ஒங்ககிட்டே ஏதாவது...

ஜமீ: மருந்து இருக்குங்க. இதிலே இரண்டு மாத்திரையைத் தேனிலே கொழைச்சி தூங்கிறதுக்கு முன்னுடி கொடுங்க. காக்கா வலிப்பெல்லாம் பறந்துபோயிடும்.

மங்: ரொம்ப தாங்ஸ்.

ஜமீ: காபி சாப்பிடுங்க.

மங்: ஐயா வர்ற நேரமாச்சு. போய்வரேன்.

ஜமீ : நல்லது.

உள்ளே தான் போயிருக்கும் போது விஷமருந்து என்று தன்னால் சொல்லப்பட்டதை அவள் எடுத்து மறைத்துக் கொண்டதை பிரதாபன் இடையிலே கவனிக்காமலில்லை.

காட்சி 11

மங்களம் விஷம் என்று நினைத்து பிரதாபன் கொடுத்த மருந்தை சுசீலாவுக்குக் கொடுத்து விடுகிருள். அவள் மயக்கமானதை மரணம் என்று நம்பிப் புதைக்கின்றனர் உறவினர். அவர்கள் சென்றதும் தோண்டி எடுத்து மருந்து கொடுத்து சுசீலாவைக் காப்பாற்றுகிருன் பிரதாபன். மங்களம் தேடும் விஷத்தை சேகர் எடுத்து விடுகிருர். அவள் அதைத் தேடும் போது கோபிக்கிருர்.

சேக : என்ன தேடறே, கொலை பாதகி?

மங் : கொலை பாதகி! ஏன் இந்த விபரீதமான பேச்சு? நான் எந்தக் கொலை செய்தேன்?

சேக : ஒரு கொலையில்லை. இரண்டு கொலை!

மங் : ஐயையோ! உங்க உடம்புக்கு என்ன? ஏன் இந்தப் பேத்தல்?

சேக : (அவளைத் தள்ளி) மூடு வாயை! எங்கே நீ போட்ட விஷம்?

மங் : விஷமா? என்னிடம் விஷம் ஏது? நான் யாருக்கு விஷம் போட்டேன்? ஓங்க மூளை கலங்கிப் போயிருக்கும்.

சேக : அதனாலேயேதான் இது வரைக்கும் உன்னை நம்பினேன். (பாட்டிலைக் காட்டி) இதோ நீ போட்ட விஷம். இனிமே நீ என்னை ஏமாத்தவே முடியாது!

மங் : (விழித்தபடி) நான் விஷமிட்டது உண்மை. ஆனால் எதற்காகச் செய்தேன்? யாருக்காகச் செய்தேன்? என் கண்ணனுக்கல்லவா? உங்க கண்ணனுக்கல்லவா? நம்ப கண்ணனுக்கல்லவா? நீங்க பேராசை கொண்டு, இருந்ததை யெல்லாம் சண்முகத்துக்கு வாரிக் கொடுத்திட்டீங்க. நம்ப கண்ணனுக்கு என்ன மிச்சம்? எத்தனை சாமர்த்தியமா அஞ்சு லக்ஷ ரூபா சம்பாதிச்சிருக்கேன்.

சேக : (கன்னத்திலறைந்து) நிறுத்து பாவி! பணப் பேயே! நீ செய்த அநியாயத்துக்கு எந்தவிதமான தண்டனை கொடுத்தாலும் போதாது. இதோ இந்த விஷத்தைக் குடித்துச் சாக வேண்டும்.

மங் : ஐயோ! இந்த விஷத்தையா குடித்துச் சாகிறது? முடியாது. முடியாது! என்னை மன்னிச்சுடுங்க. நம்ப கண்ணனின் க்ஷேமத்திற்காக அல்லவா இதையெல்லாம் செய்தேன்? அவன் செல்வச் சீமானா வாழுறதைப் பார்த்துச் சந்தோஷப் படற நேரத்துலே, இந்த விஷத்தைக் குடித்துச் சாகிறதா? வேண்டாம். வேண்டாம் . முடியாது...... என்னால் முடியாது.

சேக : முடியாவிட்டால் பொது ஜனங்கள் எதிரில் தண்டனை ஏற்றுக் கொள்ள வேண்டும். சட்டம் உன்னைச் சும்மா விடாது. உன் வினை உன்னைச் சுடட்டும்.

மங் : முடியாது முடியாது...

அவளை உதறித் தள்ளி விட்டுப் போய் விடுகிருர் சேகர். அவருக்குப் போதாத காலம்! ஜமீன்தார் அழைப்பதாக அறிந்து அங்கு போகிருர். பிரதாபனின் ஆட்கள் அவரை வம்பு செய்து நாற்காலியோடு பிணைத்துக் கட்டி விடுகிருர்கள். பிரதாப் வருகிருன். அவர் விஷயங்களை அம்பலப்படுத்தி அவர் மகள் சுசீலாவை உயிருடன் காட்டுகிருன். மகளைக்கண்ட சேகர், மனைவியை காப்பாற்றப் பறந்தோடுகிருர். ஆனால் அதற்குள் மங்களம் குழந்தைக்கும் விஷம் கொடுத்துத் தானும் அருந்தி விடுகிருள். அதைச் சொல்லி அவள் மாண்டதும் சேகருக்குப் பைத்தியம் பிடித்து விடுகிறது. அவரும் விஷத்தைக் குடித்துச் சாகிருர்.

காட்சி 12

சேகரைப் பழிவாங்கியதோடு விடாமல் சண்முகத்திடமும் வந்து அவனிடம் விஷயங்களைக் கூறு

கிறான் பிரதாபன். உண்மையை அறிந்து பயந்துபோன சண்முகம் உயிர்ப் பிச்சை கேட்கிறான். பலனில்லை. காலில் விழுந்தவனைக் காலால் உதைத்துத் தள்ளிவிட்டுச் சுந்தரியிடம் போகிறான் பிரதாபன்.

பிரதாபன் சுந்தரியின் வீட்டுக்கு வருகிறான். அவனுக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை. சதிகாரர்களைப் பழிவாங்கிவிட்ட மகிழ்ச்சியிலே சுந்தரியிடம் ஓடோடியும் வருகிறான். சுந்தரி மாடியிலிருந்து இறங்கி வருகிறாள்.

பிர: *சுந்தரி! நமக்கு அநியாயம் செய்தவர்களையெல்லாம் அழித்துவிட்டேன். இனிமேல் நம்மைப் பிரிக்க யாராலும் முடியாது. சுந்தரி! பக்ஷிபோல் பறந்து உலகமெல்லாம் சுற்றி வருவோம். கண்குளிரக் காக்ஷிகளை எல்லாம் காண்போம். இருபது வருஷங்களாக நம் உள்ளத்தில் அடங்கி யிருந்த மனோரதங்களை ஈடேற்றிக் கொள்வோம்..!*

சுந்தரி இதைக் கேட்டு கண்ணீர் மழை பொழிகிறாள். பிரதாபன் திடுக்கிடுகிறான்.

பிர: *சுந்தரி! இந்தக் கண்ணீர் எதற்கு?*

சுந்: *அன்று போல் இன்றும் மாறாத காதலைக் கண்டதனாலோ அல்லது இந்த ஆனந்தமெல்லாம் அனுபவிக்க முடியாதே என்ற கலக்கத்தினாலோ......*

பிர: *ஏன் முடியாது?*

சுந்: *பிரதாப்! இத்தனை நாள் வேறொருவன் மனைவி! இன்று வாழ்வற்ற விதவை! வயது வந்த ஒரு மகனுக்கும் தாய். இதற்கு மேல் காதல் வாழ்க்கையா? இதைச் சமூகம் ஒப்புக் கொள்ளுமா?*

பிர: *சமூகம்...! எது சமூகம்? பிறரைப்பற்றி வாய்க்கு வந்தபடி பிதற்றித் திரியும் ஜனக்கூட்டத்திற்குச் சமூகம் என்ற பெயரா? கால் இடறி விழுந்தவனைக் கண்டு கைக்கொட்டிக் கொக்கரிக்கும் அகங்காரக் கும்பலுக்குச் சமூகம் என்ற பெயரா? என் மனைவியாக வேண்டிய உன்னை ஏமாற்றி ஆனந்தன் கல்யாணம் செய்து கொண்டதை இந்தச் சமூகம் ஒப்புக் கொள்ளவில்லையா? ஒன்றுமறியாத என்னை கற்கோட்டையில் தள்ளிய சேகரின் அநியாயத்தை இந்தச் சமூகம் ஒப்புக்கொள்ளவில்லையா? எனக்கெதிராகச் சூழ்ச்சி செய்து, பலரை ஏமாற்றி, பெரியவனென்று பெயர் வாங்கின மோசக்கார சண்முகத்தின் அக்கிரமத்தை இந்தச் சமூகம் ஒப்புக் கொள்ளவில்லையா? இவர்கள்தானே இந்த சமூகத்தின் தூண்கள்? என்னிடம் கோடிக் கணக்கில் பணம் இருக்கிறது. வாரி இறைத்தால் இவர்களே நம்மைக் கடவுள் என்று போற்றிப் புகழ்வார்கள். இவர்களுக்கா பயப்பட வேண்டும்? சுந்தரி! பத்து வருஷங்கள் இந்தக் கைகளால் சுரங்கத்தைத் தோண்டினேன்; அரும்பாடுபட்டு அலைகளை எதிர்த்து நீந்தினேன்; அரும்பாடுபட்டு என் வாழ்க்கையில் ஒளியான உன்னை அடைந்திருக்கிறேன். சுந்தரி! நீ என்னுடையவள்! எனக்கே சொந்தமானவள்...என் மனைவி. மறுக்காதே!*

அவளை பிரதாபன் அணைப்பதைக் கண்ட குமார் அவனை நோக்கிச் சுடுகிறான். ஆனால் அதைக்கண்ட சுந்தரி பிரதாபனின் முன் நின்றுவிடவே அவள்மீது குண்டு பாய்ந்து கீழேவிழுகிறாள். குமார் திடுக்கிட்டு டாக்டரை அழைக்க ஓடுகிறான். பிரதாபன் அவளைச் சாய்த்துப் பிடித்துக் கொள்ளுகிறான். "மறுபிறப்பிலாவது நாம்" என்று கூறும் சுந்தரியின் தலைசாய்கிறது; உயிர் உடலைவிட்டுப் பிரிகிறது. அவள் கவலைகளுக்கோர் முடிவு ஏற்பட்டுவிடுகிறது. ஆனால் பிரதாபன்? 'இந்தப் பாழான உலகத்தில் நமக்கு இடமில்லை' என்று கூறி அவளுடலைச் சுமந்து கால் செல்லும் வழியே கிளம்பிப் போகிறான். பாவம் பிரதாபன்! காதலுக்காக அவன் பட்டபாடு நம்மை மனமுருகச் செய்கிறது. அவனுக்காக நம் மனம் அழுகிறது. பிரதாபன் ஒரு துரதிருஷ்டசாலி. சிறையில் அவதிப்பட்டுச் சுரங்கம் தோண்டி, வெளிவந்தவன் அவளைக் கண்டான். ஆனால் அடையக் கொடுத்து வைக்கவில்லை. பிரதாபன் துரதிருஷ்டத்தின் வடிவம்தான்! ★

சிவசூரியன், விருதை

குருடனுக்குச் சினிமா எதைப் போன்றது?

செவிடனுக்கு ரேடியோவைப் போன்றது!

கலாசாரம் கலாசாரம் என்கிருர்களே, அது என்ன?

பிறநாட்டுப் பிரயாணத்துக்கான இலவச பாஸ் போர்ட்!

காதலின் முடிவு?

சோகத்தின் உதயம்!

ரா. ராகவன், திருச்சி

நீங்கள் எந்தப் படத்தையாவது பார்த்து அதிர்ச்சியடைந்ததுண்டா?

'உலகம்' எனக்குக் கற்பித்த முதல் பாடம் அதுதான்!

.. நடிகைக்கு அழகு எப்படிப் பட்டது?

ஒரு அபூர்வ சொத்து!

நமது சினிமா நக்ஷத்திரங்களில் பலரும் ஏன்......... சோப்பையே உபயோகிக்கிருர்கள்?

காசில்லாமல் கிடைக்கலாம்!

கண்ணன், கரூர்

இப்பொழுது வரும் படங்கள் போதனைப் படங்களாக இருப்பதில்லையே, ஏன்?

யார் சொன்னது? படமுதலாளிகளுக்கு அவை நல்ல பாடம் கற்பிக்கின்றனவே!

பெண்களின் அழகை எதைக் கொண்டு அளக்கலாம்?

கண்களைக் கொண்டு!

என் இதயம் மிகவும் படபடக்கிறது...?

நல்ல படமொன்றை அதிசயமாகப் பார்த்திருப்பீர்கள்!

ரஷீத், வெள்ளவத்தை

படப்பிடிப்பின்போது கதாநாயகனே, அல்லது கதாநாயகியோ திடீரென்று இறந்துவிட்டால் என்ன நேரிடும்?

ஒன்றும் நேராது! கதையில் மட்டும் சிறிது மாறுதலிருக்கும்.

ஒரு டைரக்டரும் தயாரிப்பாளரும் ஒரு நடிகையிடம் எதை விரும்புகிருர்கள்?

முறையே திறமை, அழகு!

விசாலம், சிவகங்கை

நடிகைகளுக்கு ஆண் வேஷம் போடுவதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

வரவேற்கிறேன்! பெண்மையற்ற சில நடிகைகளுக்கு 'பெண் வேஷம்' போட்டுச் சிரமப்படுவதைவிட, இது மேலல்லவா?

காதலுக்கும் கணவனுக்கும் என்ன தொடர்பு?

பெயர் மாற்றம்தான். காதலன் கணவனாகும்போது காதல் கருகி விடுகிறது.

கண்ணீருக்கு விளக்கம் தர முடியுமா ?

ஆனந்தம் – அவஸ்தை இவற்றின் ஊற்று!

சம்பந்தம், அரகண்டநல்லூர்

தங்கள் நடிப்பு சோடையாகப் போய்விட்டதை படத்தில் பார்க்கும் நடிகர்கள் என்ன செய்வார்கள்?

அவர்கள்என்ன செய்வார்களோ? ஆனல் அதைப் பார்த்து நாம் வெட்கப்படுவோம்; வருந்துவோம்!

ரமணி, கிண்டி

தேவதைகளுக்கும், நக்ஷத்திரங்களுக்கும் என்ன வித்தியாசம்?

தங்கள் விசிறிகளுக்கு நக்ஷத்திரங்கள் தேவதைகளாக மாறலாம்; ஆனல் தேவதை நடிகையாக மாற முடியாது!

பெண்கள் மௌனமாயிருப்பது எப்போது ?

பிறர் பேசும் ரகசியங்களை ஒட்டுக் கேட்கும் போது!

வாழ்க்கை என்பது ஒரு கனவா?

இல்லை! ஒரு 'சினிமாப் படம்'!

துரை, வாணகப்பாடி

கற்பனைக்கு முடிவு எங்கே ?

படவுலகில்! இங்கு புதுமை எதையும் காண முடியவில்லையே!

ராஜன், மதுரை

பெண்களுக்கு அழகு ஆபத்தாவது எப்போது ?

குணம் குறையும்போது!

கடன் என்பது என்ன?

வாங்கும்போது ஏற்படும் உற்சாகம், கொடுக்கும்போது உபத்திரவமாவது!

வேந்தன், சீர்காழி

பட்டினி என்பது என்ன?

ஏழையின் உயிர்த் தோழன்; பணக்காரனுக்கு ஒரு மருந்து!

சினிமா என்பது என்ன?

நடக்காததையும் நம்ப முடியாததையும் சித்தரிப்பது!

.. 'நடிகையின் குரல் இனிமையானது' என்று ஒருவர் எழுதியிருக்கிருரே, நீர் என்ன சொல்கிறீர்?

அவரது காது செவிடாக இருக்கலாம்!

உங்களால் எந்தக் கேள்விக்கு "சரி" என்று பதில் சொல்ல முடியாது?

"என்னைச் சினிமாவில சேர்த்து விடுகிறீர்களா?" என்ற கேள்விக்கு!

சிற்றரசு, இரணியல்

படவுலகில் எந்த விஷயங்களைப் பற்றிச் சொல்லக்கூடாது ?

படவுலகு சம்பந்தப்பட்ட இம் மாதிரியான கேள்விகளுக்குப் பதில் சொல்லக்கூடாது!

ஆண்டு மலரில் உங்களுடைய கடுமையான விமர்சனத்திஞல் பட முதலாளிகளிடம் உங்களுக்குள்ள தொடர்புக்குக் குந்தகம் ஏற்படலாமல்லவா ?

அதைப் புரிந்து கொள்ளாதவர்களிடமும்; அதை அவர்கள் புரிந்து கொள்ளும் வரையிலும்தான்!

'ஜன்னல்' என்ருெரு கதையை நான் எழுதியிருக்கிறேன்...?

படவுலகத்தினர் அதை எட்டிக் கூடப் பார்க்க மாட்டார்கள்!

கண்ணன், சிவகங்கை

மழை ஏன் பெய்கிறது ?

பூவுலகத்தின் பாவங்களைக் கழுவ!

பிச்சை எடுப்பது ஒரு கலையா ?

ஒரு தொழிலாக இன்றையதினம் மாறிவிட்டது!

மா. ராஜமாணிக்கம், புதுவை

அண்ணு, நீங்கள் ராஜகுமாரிக்கு உறவினராமே ?

ஆம்! உங்களுக்கு நான் அண்ணஞக இருப்பதைப் போலத்தான்.

நாடகத்துக்கும், சினிமாவுக்கும் என்ன வித்தியாசம் ?

ஒரு திரைதான்! இங்கு திரை விலக்கப்பட்டதும் காட்சி ஆரம்பமாகிறது; அங்கு திரை தயாரானதும் காட்சி துவங்குகிறது!

சி. கே. டேவிட், மதுரை

ஹாஸ்யம் என்பதற்காக அளவுக்கு மீறிய ஆங்கில வசனத்தை பொன் வயலில் உபயோகப் படுத்தியிருக்கிருர்களே, தங்கள் அபிப்பிராயம் என்ன?

'பேசும் பட'த்தில் 'வசனகர்த்தா' ஏ. டி. கே. யைப்பற்றி எழுதியிருப்பதைப் படித்துப் பாரும்.

பிரஸாத்தின் 'பெற்ற மனம்' இன்னும் வெளிவரவில்லையே, ஏன்?

பெருமாளுக்குத்தான் வெளிச்சம்!

கோபாலகிருஷ்ணன், திருப்பூர்

தங்களிடம் கேள்வி கேட்க வேண்டுமானால் சரியான விலாசம் என்ன?

நீர் சரியான விலாசத்தை எழுதியிராவிட்டால் இந்தக் கடிதம் எனக்குக் கிடைத்திருக்குமா?

ஏ. எல். ராமனுதன், கோவில்பட்டி

ராஜி என் கண்மணியில் நவநாகரீக நங்கையாக நடித்த வசுந்தரா, ஒள்வையாரில் ஆதியாகத் தோன்றியவர்தானே?

அந்தப் பாட்டியின் தாயார் வேஷத்தில் தோன்றிய அவரே தான்!

ஷண்முகம், சென்னை

டி. ஆர். ராஜகுமாரி நடித்த படங்கள் அவருடைய சொந்த தியேட்டரில் திரையிடப் படுவதில்லையே, ஏன்?

திரையிடப்படுவது விநியோகஸ்தரின் இஷ்டமல்லவா?

ராமராஜ், பழனி

ராஜி என் கண்மணியில் ஆயிரம் ரூபாய் திருடிய ராமு சிறைக்குச் சென்றபோது, அவனைவிட பெருந் தொகையைத் திருடிய அவ்வீட்டு வேலைக்காரனை மட்டும் ஏன் போலீஸ் பிடிக்கவில்லை?

படத்தின் நீளம் வளர்ந்து விடும் என்பதற்காக இருக்கலாம்!

ஏ. வெங்கடாசலம், கோயம்புத்தூர்

இதுவரை ஒரு படத்திற்கு மட்டும் அதிகப் பணம் வாங்கிய நடிகர் யார்?

ஒரு காலத்தில் புகழும் பெயரும் தன் இருபுறமும் அணைக்க, இருந்த ஒரு நடிகர்!

ம. க. ஆனந்தன், சென்னை

அக்பருடைய காலத்தில் அழகான பெண்களை ஏலம் போட்டது மெய்தான் என்று என் நண்பன் 'எலி' (முத்துகிருஷ்ணன்) சொல்லுகிறான். ஆனால் அனார்கலி படத்திற்கும், அதற்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்லுகிறேன். எது உண்மை?

இதை நீர் எனக்குச் சொல்ல வேண்டிய அவசியமில்லையே! படத் தயாரிப்பாளர்கள்தான் படத்தின் இறுதியில் இதை அறிவித்திருக்கிறார்களே!

ஈ. வி. வேலு, சென்னை

"கொட்டகையில் கண்டிப்பாக புகை பிடிக்கக் கூடாது" என்ற எச்சரிக்கையை ஸ்லைடு மூலம் காட்டிவிட்டு, பிறகு "நறுமணமுள்ள பீடியை உபயோகியுங்கள்" என்று காட்டுகிறார்களே, இவர்களுடைய மூளையை எதற்கு ஒப்பிடலாம்?

நிலையற்ற நீர்க் குமிழியின் தன்மைக்கு!

ரங்கனுதரத்னம், வெளிப்பாளையம்

என்னுடைய கேள்விகள் தங்கள் இதழில் விடாமல் வர என்ன செய்ய வேண்டும்?

இம்மாதிரி அசட்டுத்தனமான கேள்விகளை இனி அனுப்பாமலிருக்க வேண்டும்.

'பழக்காரி' எப்போது வெளி வருவாள்?

பழம் பழுத்தவுடன்!

கன்டினுடி, பிராஸஸிங் என்றால் என்ன?

இன்றைய தினம் ஒரு குறிப்பிட்ட காட்சி படமாக்கப்படுகிறது. சில நாள் கழித்து மீண்டும் அதே காட்சியின் தொடர்ச்சி படமாக்கப்படலாம். அப்படி நேரும்போது முதல் நாள் எடுத்த காட்சிக்கும், அடுத்து எடுத்த காட்சிக்கும் காட்சி யமைப்

பிலோ உடை வகையிலோ இன்னும் இதர வகைகளிலோ மாற்றம் ஏற்படாமல், தொடர்பை விடுபடச் செய்யாமல் பார்த்து வருவதற்கு கன்டினுடி என்று பெயர். பிலிம் கழுவப்பட்டு, பிரதி எடுக்கும் வேலைகளை பிராஸஸிங் என்று சொல்லுகிறோம்.

எஸ். யு. நாதன், குரும்பூர்

பொன் வயல் படத்தில் 'ஓங்கி வளர்ந்த பயிர்' என்ற பாட்டைப் பாடியது யார்?

'புகழ் ஓங்கி வரும்' பாடகி கானசரஸ்வதி!

ஜூபிடர் பிரியன், மதுரை

மனோஹர் பிக்சர்ஸுக்கும் ஜூபிடர் சோமசுந்தரத்திற்கும் என்ன சம்பந்தம்?

மனோகர் பிக்சர்ஸின் உரிமையாளர் அவர்.

மதராஸ் பிக்சர்ஸ் ஸ்ரீநிவாசனும், மகாலிங்கமும் சந்தித்தால் என்ன பேசிக்கொள்வார்கள்?

அவர்களுக்கு மட்டுமே உரிமையான விஷயங்களை!

'பேசும் படத்'தில் மீண்டும் திரைப்பட விமர்சனங்களை வெளியிடுவீர்களா?

இதழ்களையும், நமது மலர்களாக்கி விடச் சொல்கிறீர்! அவ்வளவு தானே?

கலைநுணுக்கத்தில் ஹாலிவுட்டையும், கதை அம்சத்தில் கல்கத்தாவையும், நடிப்பு விஷயத்தில் பம்பாயையும் நம் தமிழ்ப் படவுலகம் பின்பற்றினுல் அதன் தரம் எப்படி இருக்கும்?

அதன் தரம் தரை மட்டமாகிவிடும்!

ராணி, பரமக்குடி

ஆடலழகிகளான பத்மினி, வைஜயந்திமாலா இருவரில் அழகிலும் ஆட்டத்திலும் சிறந்தவர் யார்?

அழகில் பத்மினியும், ஆட்டத்தில் வைஜயந்தியும்.

சுந்தர், திருப்பட்டினம்

பராசக்தி, கண்ணகி – பட வசனங்களில் சிறந்தது எது?

பொருளுக்கு கண்ணகியும், புதுமைக்கு பராசக்தியும்!

மாஸ்டர் சேது நடிக்கும் படங்கள் ஏதாவது இருக்கிறதா?

'பேப்பர் பா'யில் அவன் நடிக்கிறுன். ஆனுல் அதன் படப்பிடிப்பு தான் நடைபெறுவதில்லை!

மைனுவதிப்பிரியன், கமுதி

கைதியில் நடித்த ரேவதியின் உண்மைப் பெயர் என்ன? அவர் கைதிக்கு முன்னும், பின்பும் நடிக்கும் படங்கள் என்ன?

செமந்தகமணி என்பது அவரது இயற்பெயர். கைதிக்கு முன்பு மச்சரேகை முதலிய படங்களில் அவர் நடித்திருக்கிறுர். முன்பு மைசூரில் தயாரான முயற்சியில் அவர் நடித்திருக்கிறுர். அது சரி! உமது இயற்பெயர் என்ன?

'கேவாகலர்' என்பதற்குச் சரியான தமிழ் வார்த்தை என்ன?

கேவா வர்ணம்!

ஜே. சரோஜா, விழுப்புரம்

சிவாஜி கணேசனின் வாழ்க்கைச் சித்திரத்தைச் சுருக்கிக்கூறுவீர்களா?

பராசக்தியின் மூலம் படவுலகில் நுழைந்து அமோக புகழ்பெற்ற அவர், மனோகரா மூலம் தமிழ்நாட்டு சினிமா ரஸிகர்களின் உள்ளத்திலிருந்து மறைய முடியாத நடிகராகி விட்டார்.

எம். இராதாகிருஷ்ணன், பம்பாய்

டி. கே. எஸ். சகோதரர்கள் தற்போது எந்தப் படத்தில் நடித்து வருகிறுர்கள்?

அவர்களது சொந்தத் தயாரிப்பான 'இரத்த பாச'த்தில் நடிக்கிறுர்கள்.

ராஜி, நாகப்பட்டினம்

சாவித்திரியின் உயரமென்ன?

தேவதாஸ் மூலம் அவர் அதிகம் (நடிப்பில்) உயர்ந்து விட்டாரே!

சில மட்டரகப் படங்களுக்கு விசித்திரமான முறைகளிலெல்லாம் விளம்பரம் செய்யப்படு

கிறதே, அதைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

தோல்வியை அழகுபடுத்தி வர வேற்கிருர்கள் என்பதுதான்!

சங்கரன், பெங்களூர்

உங்கள் 'பேசும்-பட'த்தை யாருமே வாங்காவிட்டால்?

சினிமா செத்து விட்டது என்று அர்த்தம்!

பெண்கள் ஆண்களைவிடப் புத்தி சாலிகளா?

பல சமயங்களில் அப்படித்தான் எண்ணத்தோணுகிறது. ஆனல் சிறு விஷயங்களில்தான்!

'கணவன் தேவை' என்று ஒரு நடிகை தினசரியில் விளம்பரப்படுத்திஞல் அவளைப் பற்றி நீர் என்ன நினைப்பீர்?

அவள் ஒரு 'மாஜி' நடிகையாகி விட்டாள் என்று கருதுவேன்!

விஸ்வம், காரைக்குடி

பெண்களின் பெரும் பகுதி எங்கே கழிகிறது?

கண்ணுடி முன்; அலங்காரத்தில்!

பெண்கள் நகையை ஏன் விரும்புகிருர்கள்?

தங்கள் இயற்கை அழகை(!) மறைத்துவிட.

இன்றைய இந்தியாவின் வாழ்க்கைத் தரம் என்ன?

குறைந்த உணவு; உடை. ஆனல் அவை ஏராளமான மக்களுக்கு!

ராகவன், குண்டக்கல்

என்னுடைய சில கேள்விகளுக்கு நீங்கள் பதில் தரவேயில்லை. உங்களால் அவற்றுக்குப் பதில தரமுடியவில்லை என்று நான் நினைக்கிறேன். சரிதானே?

அர்த்தமற்ற ஆபாசக் கேள்விகளையும், திரும்பத் திரும்பப் பதில் சொல்லிச் சலித்துவிட்ட கேள்விகளையும் தவிர, வேறு நல்ல கேள்விகளை நீங்கள் அனுப்ப முடியாத போது, நான் அவற்றுக்குப் பதில் தரமுடியாமலிருப்பதும் சரிதானே!

ராமு, செங்கோட்டை

என் நண்பனின் பிறந்த நாள் பரிசாக ஒரு பேசும் படத்தை அவனுக்கு வாங்கிக் கொடுத்தேன். இதைப் பற்றி உமது அபிப்பிராயம் என்ன?

உமது நண்பருக்கு இனி மாதமொன்ருக வருஷத்தில் பனிரெண்டு பிறந்த நாட்கள் வந்து விடும்!

வேலன், பூங்குடி

என் நண்பன ஒருவன் சினிமா நடிகையொருத்தியை மணம் செய்துகொள்ள விரும்புகிருன். அவனுக்கு உதவி செய்ய முடியுமா?

முடியாது! நான் உமது நண்பரைக் காப்பாற்ற விரும்புகிறேன்!

தமிழ்ப் படங்களில் சாவுக்காட்சிகள் துக்கத்திற்குப் பதில் சிரிப்பைத் தானே தருகின்றன. ஏன்?

அங்கேதான் ஒரு பாட்டைப்பாடி விடுகிருர்களே!

மூர்த்தி, புதுக்கோட்டை

படமுதலாளியும் நடிகையும், ஒரு படத்திற்கு எப்பொழுது பாகஸ்தராக மாறுகிருர்கள்?

படப்பிடிப்பு பணமின்றி பாதியில் நிற்கும்போது; நடிகையின் சம்பளத் தொகை முதலீடாகமாறி விடும் போது!

ஏ. எம். ஷண்முகம், ஜபல்பூர்

என் நண்பரொருவர் ..... யின் புகைப் படத்தை வைத்துக் கொண்டு நாள் தவருமல் அதற்கு பூ போட்டுப் பூஜை செய்து வருகிருர். அந்த நடிகை அவரது கனவுக் காதலி என்றும், ஒவ்வொரு இரவிலும் அவளுடன் தான் பேசுவதாகரும் அவர் கூறுகிருர். இது உண்மையா?

அவரது கனவில் வந்து பேசும் நடி, என் கனவிலும் வந்து சொன்னலல்லவோ, எனக்கும் அது உண்மையா என்பது தெரியவரும்?

கலைப்பித்தன், திருகிரி

அழகு, அன்பு இவைகளில் எது உள்ள பெண்ணை ஒருவன் முற்றிலும் நேசிப்பான்?

அன்புள்ள பெண்ணைத்தான்! அழகிருந்தும் ஒரு பெண் அசுரத்தனமாக நடந்து கொள்ளலாமல்லவா?

மனிதனின் உயர்வுக்கும் தாழ்வுக்கும் எது காரணம்?

தற்போது பணம்!

மனிதனின் மகத்தான செயல் யாது?

பகுத்தறிவைப் பெற்றிருப்பது!

எஸ். ஆர். சாமிநாதன், கொழும்பு

நம் மாகாணத்திலேயே மிகவும் தேர்ச்சி பெற்ற நாடகக் கம்பெனி எது?

உயிரோடு இருப்பவற்றுள் நவாபினுடையதுதான்.

ஆ. கோ. பாலசுந்தரம், ஆற்காடு

நான் வருஷக்கணக்காக தங்கள் பேசும் படத்தைப் படித்து வருகிறேன். நீங்கள் ஏன் சிவாஜி கணேசனின் வாழ்க்கை வரலாற்றை பேசும் படத்தில் வெளியிடவில்லை?

நீங்கள் வருஷக்கணக்காகப் பேசும்படத்தைப் படித்து வருவதில்லை என்பது இதிலிருந்து தெரிய வருகிறது. இல்லாவிட்டால் சென்ற வருஷம், ஜூலை மாதத்தில் அவரது வரலாறு வெளி வந்திருப்பது உமக்குத் தெரியாமலிருக்குமா?

ஆ. இரத்தின சிங்கம், இலங்கை

சிரிக்கும் மங்கைக்கும் படம் விரிக்கும் பாம்புக்கும் என்ன வித்தியாசம்?

அந்தப் பாம்பு கடித்தால் விஷம். பாவை பார்த்தாலே விஷம்!

கஷ்டமும் கவலையும் ஏற்படும் போது ஒருவன் எதைச் செய்யலாம்? எதைச் செய்யக்கூடாது?

சிந்திக்கலாம். ஆனால் பயித்தியம் போல் சிரிக்கக்கூடாது!

இலங்கை அரசாங்க விகிதர் சங்கக் கட்டிட நிதிக்காக லலிதாவையும் பத்மினியையும் நடனத்திற்கு அழைத்தால் கொடுக்கும் பணத்தைப் பெற்றுக்கொண்டு நடனமாடுவார்களா?

'கொடுக்கும் பணத்தை'ப் பொறுத்தது அது!

துரை—முருகேசன், காரமடை

ஒரே கதையைப் பல பெயர்களில் மாற்றியமைத்துப் படம் பிடிப்பதிலிருந்து என்ன தெரியவருகிறது?

படவுலகில் நல்ல கதாசிரியர்களுக்கு ஏற்பட்டுள்ள பஞ்சத்தைத் தெரிவிக்கவில்லை. அது நிச்சயம்!

எம். எல். வஸந்தகுமாரிக்கு திருமணமாகிவிட்டதா?

பிறரைச் சிரிக்க வைக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் விகடம் கிருஷ்ணமூர்த்திதான் அவரது கணவர்.

ஈ. ஷண்முகம், சென்னை

'சினிமாப் படம் ஒரு பொழுது போக்குப் படமாகவே தயாரிக்கப்படவேண்டும்' என்று கூறும் வாஸனின் கருத்தைப்பற்றி தங்கள் அபிப்பிராயம் என்ன?

வாஸன் அவர்கள் சொன்னதை நீங்கள் தவறுகப் புரிந்து கொண்டு விட்டீர்கள். "சினிமா என்பது ஒரு பொழுது போக்கு சாதனம்" என்றுதான் அவர் கூறினரே. தவிர, போதனைப் படங்களைத் தயாரிக்கக்கூடாது என்று அவர் சொல்லவில்லை!

வங்கப் பத்திரிகை ஒன்றில் தென்னிந்திய நடி. நேயர்கள் தனக்கெழுதும் கடிதங்களுக்குப் பதிலெழுதுவதாகக் கூறியிருக்கிறர். ஆனல் என் விஷயத்தில் அது உண்மையாகத் தெரியவில்லையே?

அவர் வெறும் நடிப்புக்காக இப்படிக் கூறியிருக்கலாம்.

ஆ. சந்தானகிருஷ்ணன், மூளாய்

உலகத்திலேயே மகா அதிர்ஷ்டசாலி யார்?

இறந்த காலத்தை எண்ணி இன்பமடையவும், நிகழ்காலத்தை நினைத்து பூரிப்புக் கொள்ளவும், வகையும் வழியும் உள்ளவன்.

("சினிமா பார்க்கும் பொது ஜனங்கள் ஆபாசத்தைத்தான் விரும்புகிறார்கள். மாயாஜாலப் படங்களும், ஸ்டண்டுகளும்தான் ஓடுகின்றன. அரை நிர்வாண நடனம் இல்லாத படங்கள் தோல்வியடைகின்றன'' என்றெல்லாம் கூறும் படமுதலாளிகளை இந்தப் பகுதியைக் கவனமாகப் படிக்கும்படிக் கேட்டுக் கொள்கிறோம். ஜனங்கள் எதை ரஸிக்கிறார்கள்; எதைப் பாராட்டுகிறார்கள் என்று தெரிந்து கொள்ள இப்பகுதி மிகவும் உபயோகமாக அமைந்திருக்கிறது-ஆசிரியர்.)

* மனோகரா

வசந்தசேனையிடம் மன்னிப்பு கேட்க மறுக்கும் மனோகரனுக்கு மதியிழந்த மன்னன் மரண தண்டனை விதிக்கிறான். அரசி பத்மாவதி மகன் தந்தைக்கு விரோதமாக ஏதும் செய்யக்கூடாதென்று சொல்லி மகனை சாகச் சொல்கிறாள். 'நான் சாகத்தான் வேண்டுமா?' என்கிறான், அன்னையின் ஆணையைத் தட்டியறியாத தனயன் மனோகரன். "ஆமாம். யாருக்கும் கிடைக்க முடியாத பாக்கியம், தந்தையே மகனைக் கொல்வது! தாய் அதற்குத் தலையசைப்பது! தங்கமே! தரணியிலே யாருக்கடா கிடைக்கும் இந்த ராஜபாக்யம். போ மகனே! சாகப்போ!'' என்கிறாள் வேதனையோடு. நம் உள்ளம் வெடித்துவிடும்போல் இருக்கிறது.

டி. சுந்தரா.

நாகர்கோவில்.

* கற்கோட்டை

ஊரை ஏமாற்றி, எஜமானனைத் துரோகம் செய்து பொருள் சம்பாதித்து பாங்கி நடத்தும் சண்முகம் கடைசியில் பிரதாபனின் ஆட்களிடம் மாட்டிக் கொள்ளுகிறான். அவனைக் கதறவைத்து இட்டிலிக்கும், குடி தண்ணீருக்கும் ஆயிரமாயிரமாகப் பணம் வாங்கி அவனை அணு அணுவாகச் சிதைக்கிறார்கள் பிரதாபனின் ஆட்கள். பலநாள் திருடன் ஒருநாள் அகப்படாமலா இருக்க முடியும்? அயோக்கியர்களுக்குச் சரியான சவுக்கடி இந்தக் காட்சி.

"ராஜகுமார்."

காஞ்சீபுரம்

* பணம் படுத்தும் பாடு!

'பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும்' என்பது பழமொழி. ஆனால் அவனுக்கோ பணம் என்றாலே ஒரே வெறுப்பு! இந்த சமயத்தில் அவனுக்கு கல்யாணம் நிச்சயமாகிறது. மாப்பிள்ளையின் திறமையைச் சோதிக்க மாமனார் நிறையப் பணம் தருகிறார். பணத்தை விரயமாக்கி விட்டால் காதலில் வெற்றி பெற முடியும் என்று நினைக்கிறான் அவன். அதற்காக குதிரைப்பந்தயத்தில் மனம் போனபடி பணத்தை வாரியிறைக்கிறான். என்ன அதிசயம்! வேண்டாம் என்று ஒதுக்கித் தள்ளியும் கூட பந்தயத்தின் மூலம் பணம் மலைமலையாக வந்து குவிகிறது அவனுக்கு. அவனுக்கோ இந்தப் 'பணம் படுத்தும் பாடு' பெரும் வேதனையாகி விடுகிறது. அவன் தொட்ட இடமெல்லாம் பணம்; பார்க்குமிடமெல்லாம் பணம்! இப்படியாக பணம் அவனை ஒரே பித்தனாக்கி விடுகிறது. நம்மைச் சிரிக்க வைக்கும் காட்சி இது.

ராஜாராம்.

சென்னை.

---

* இக்குறியிடப்பட்ட மூன்று கடிதங்களுக்கும் தலைக்கு ஐந்து ரூபாய் வீதம் பரிசளிக்கப்பட்டிருக்கிறது.

மனோகரா

மன்னன் மனம் மருகக்கூடாது என்பதற்காகப் பத்தினி பத்மாவதி மகன் மனோகரின் மன எழுச்சிக்கு - மறத்துக்கு மடைகட்டுகிறாள். வேசியின் மகன் என்று தன்னை தாசி லோலன்—மன்னன் சொன்னபோது சினம் கொண்ட சிங்கம் மனோகரன் அன்னையின் ஆணையால் தகப்பனைச் சிதைக்க முடியாது, தன் சினத்தைச் சிதைக்கிறான். தாயிடம் அவன் கொண்டுள்ள பக்தி ஒரு அற்புதமான நீதியைப் போதிக்கிறது.

ஆ. நா. ராமன்,

கூடலூர்.

தூணில் கட்டப்பட்டிருக்கும் மகனைக் கண்டு மனந்துடிக்கிறாள் பத்மாவதி. அவளது ஆத்திரம் எல்லை மீறுகிறது! 'என் அருமைச் செல்வமே! உன் தந்தையின் நன்மைக்காகத்தான் உன் வீரக் கரங்களைக் கட்டிப் போட்டேன். இந்த விஷமக்காரியின் முன்னே சிரம் தாழ்த்தி நின்றேன். யாருக்காகப் பொறுமை பொறுமை என்று சொல்லி வந்தேனோ அவரையே சிறையில்பூட்டிவிட்ட பிறகு பொறுமைக்கு எங்கே இருக்கிறது பெருமை? மனோகரா, பொறுத்தது போதும், பொங்கி யெழு!... தாயின் ஆணை கிடைத்து விட்டது. புறப்படு...மனோகரா!'' என்று வீரப்பிரசங்கம் செய்கிறாள். உளுத்துப் போன உள்ளத்திலும் வீரத்தை துளிர் விடவைக்கும் அந்த வீரப் பேச்சு நம்மை உணர்ச்சி வசமாக்குகிறது. அரிய காட்சி இது.

மிஸ் வி. பேபி,

வேலூர்.

மனோகரனின் குழந்தை கொல்லப்பட விருப்பதை யறிந்து ஓடி வருகிறாள் பத்மாவதி. வசந்தசேனையைக் கண்டு அவள் உள்ளம் எரிமலையாகிறது. ஆனாலும் கணவனின் அன்பைப் பெற்றவளை ஒன்றும் செய்யக்கூடாது என்ற அளவுக்குப் பதிபக்தி கொண்டவள் அவள். ''இன்றுவரை நான் காட்டிய பொறுமையின் பேரால் கேட்கிறேன். உனக்கு நாடுதானே வேண்டும்? எடுத்துக்கொள்! நடத்து உன் ராஜ்யத்தை! எங்களுக்குக் காடு போதும். எங்கள் எல்லோரையும் விட்டுவிடு.'' என்று அவள் இறைஞ்சுகிறாள் தாசி வசந்தசேனையிடம். நம் உள்ளம் பற்றி யெரிகிறது அப்போது.

அ. ரவீந்திரன்,

மதுரை.

வேசியின் நஞ்சு கலந்த வஞ்சமொழிகளை நெஞ்சிற் கொண்டு, தன் மகனைச் சங்கிலியால் கட்டியிழுத்து வரக் கட்டளை யிடுகிறான் மன்னன் புருஷோத்தமன். மன்னன் முன் நிற்கும் மகன், கைதியாக்கப்பட்டதன் காரணம் கேட்கிறான். வேசியின் ஆசையில் மதியிழந்த மன்னன் தன் தர்ம பத்தினியை—மனோகரனின் அன்னையை வேசி என்று கூறுகிறான்.

சீறிப்பாயும் சிங்கமென வெகுண்ட மனோகரன் இரும்புச் சங்கிலிகளை அறுத்தெறிந்து கத்தி முனையிலே மன்னனை நிறுத்தும் போது, 'நிறுத்து' என்று கூறியபடி வருகிறாள் பத்மாவதி. அன்னையின் ஆணை கேட்டுக் கதி கலங்குகிறான் மனோகரன். ஏன் நம்மையும் தான் அக்காட்சி திடுக்கிடச் செய்கிறது.

ஆ. செல்வரசு,

விருதுநகர்.

மன்னன் விருப்பப்படி மயக்கமுற்றுக் கிடக்கும் மைந்தனைக் கொலைக்களம் கொண்டு போகச் சொல்கிறாள் பத்மாவதி. பெற்ற மகனைப் பிரியத் துணியும் அவளது பதிபக்தி நமக்கு ஆச்சரியத்தை விளைவிக்கிறது. அக்ரமம் என்று கூறும் மக்களுக்குப் பதில் கூறுகிறாள் பத்மாவதி. 'யாரும் பேசாதீர்கள். என் மகன்-அவனை என் இஷ்டப்படி நடத்துவேன். மரண தண்டனை நிறைவேறிய பிறகு சவ அடக்கம்கூட இந்த சாம்ராஜ்யத்திற்கு வெளியில்தான் நடைபெற வேண்டும்' என்கிறாள். நம் உள்ளம் குமுறுகிறது இக்காட்சியில்.

கு. சண்முகம்,

சென்னை.

சங்கிலியால் பிணைக்கப்பட்டுச் சதிகாரர் முன்னிலையில் கைதியாய் நிற்கும் மனோகரன், சாகப்போகும் தன் குழந்தைக்கு அன்பு முத்தமளிக்கத் தலைகுனிகிறான். குழந்தையை அருகே காட்டி ஏமாற்றிப் பின்னுக்குக் கொண்டு செல்கின்றனர். வீரன் மனோகரன் ஏமாற்றத்தால் எரிமலையாவது போலவே பாசத்தால் பதறியும் போகிறான். உள்ளமுருக்கும் காட்சி.

ரமணி,

சைதாப்பேட்டை.

அட்சயன் வேடத்திலிருந்த மனோகரனைப் பிடித்துவிடுகிறான் சேனுபதி. அப்போது மனோகரன் தாயிடம், "அம்மா! அப்பா சிறையிலே பூட்டப்பட்டு விட்டார்! தங்கள் ஆணையை மீற முடியாத நான் இந்தப் பாதகியின் உத்திரவுக்குப் பணிந்தேன். இந்தப் பாவியின் கரங்களால் பாதாளச் சிறையில் பூட்டினேன் அம்மா! உண்மையை உணர்ந்து கொண்ட தந்தை உங்களையும் என்னையும் காணத் துடிக்கிறார். இறந்துபோன கொடுமைகளை எண்ணி எண்ணிக் கண்ணீர் வடிக்கிறார். கலங்கித் தவிக்கிறார்... அம்மா!" என்று கதறுகிறான். அவனது தாயிடம் அவன் கட்டுப்பட்டுள்ள விந்தை கண்டு நாம் மகிழ்கிறோம், அந்த நிலையிலும்கூட.

இ. வில்விராணி,

சென்னை.

தாயை வேசி என்று இகழ்ந்த மன்னன், தன் தந்தையானாலும்—அவரை வாளால் குத்தப் போகிறான் மனோகரன். பத்மாவதி தடுக்கிறாள். "முதலில் நீ வளர்ந்த இந்த வயிற்றிலே வாளைப் பாய்ச்சி விட்டுப் பிறகு மகாராஜாவிடம் போ! தாயின் பிணத்தின்மேல் நின்றுகொண்டு தந்தையிடம் போரிடு! உம்..இதோ உன் தாய்! கொல் என்னை! பிறகு உன் கொள்கைப்படி நட.. ஏன் நிற்கிறாய்?" என்று கூவுகிறாள். புத்திரபாசத்தைவிட மேலோங்கி நின்ற அவளது பதிபக்தி இக்கால நாரீமணிகளுக்கு ஒரு சவுக்கடி!

வி. பத்மகுமார்,

இருச்சி.

சிறையில் தள்ளப்பட்ட மன்னன் புருஷோத்தமன் மைந்தனையும் மனைவியையும் நினைத்துப் புலம்புகிறான்..."பத்மாவதி! நீதான் பத்தரை மாற்றுத் தங்கம். உன்னைப் பழி கூறிய பாதகனுக்குச் சரியான பரிசு கிடைத்துவிட்டது, பத்மாவதி...! மனோகரா! ஆளப்பிறந்த என் செல்வமே! உன்னைச் சாகத் துரத்திய சண்டாளனுக்குச் சரியான தண்டனை கிடைத்துவிட்டது...நீ எங்கிருக்கிறாய் மனோகரா? ஆயிரம் குற்றங்கள் செய்திருந்தாலும் தந்தைக்கு ஆபத்து என்றால் தலை கொடுக்க ஓடி வருவாயே! உன்னிடம் யார் இந்தச் செய்தியைச் சொல்வார்கள் மனோகரா?" அவரது தவறுகளை மறந்து அவரிடம் ஓடும் மனோகரனைப்போல் நம் மனமும் அவர்பால் ஓடுகிறது.

"அறிவின்பம்",

கரூர்.

முத்து விஜயனை வென்ற மனோகரனைப் பழிவாங்க வந்த விஜயா சிறைப்படுத்தப் படுகிறாள். விசாரணை மண்டபத்திலே மறுநாள் அவள் மீது குற்றப்பத்திரம் படிக்கிறான் ராஜப் பிரியன். அவள் மனோகரனைக் கொலை செய்ய முயன்ற குற்றத்திற்காக, மனோகரனுக்கு மாலைசூட்டி அவனை மணாளனாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று ராஜப்பிரியன் கூறும்போது அதுவரை பிரமித்திருந்த நாம் மகிழ்ச்சியால் பூரித்துப் போகிறோம்.

கே. ரகுபதி,

கும்பகோணம்

மணாளன் சிறையில் மருளுவதறிந்து மனங் கொதித்த பத்மாவதி, மகனிடம் தான் இட்ட கட்டளையைத் திரும்பப் பெற்றுவிடுகிறாள். மகனை கட்டளையினின்று விடுவித்து மன்னனின் சிலையிடம் மன்றாடும்போது வசந்த சேனையும் உக்ரசேனனும் ஏளனமாகச் சிரிக்கிறார்கள். வீராங்கனையின் உள்ளத்திலே குமைந்த எரிமலை வெடித்துத் தீக்குழம்பை வாரியிறைக்கிறது.

"ஏன் சிரிக்கிறீர்கள்? செவ்வாழைத் தோட்டத்திலே குதித்தாடும் குரங்குகளே! மங்கை உருவில் - மகான் உருவில் இந்த

மண்ணை வளைக்க வந்த மகா பாதகர்களே! இப்படிச் சிரித்தவர் வாழ்ந்ததில்லை. அழுதவர் கெட்டதில்லை என்று ஜெகம் சொல்லும் சரித்திரத்தை மறந்தவர்களே! செப்பிடு வித்தையால் செழுந் தமிழர் செங்கோலை முறிக்க வந்த சிறு நரிக் கூட்டமே! சிரிக்காதே! கண்ணீரின் வலிமையை உணர முடியாத கயவரின் கும்பலே! கண்ணீர்த் துளிகள் சாதித்ததைக் கத்தி முனையும் சாதித்ததில்லை என்பதை மறந்துவிட்டுச் சிரிக்காதே! பச்சிளங் குழந்தை - பட்டத்திள வரசன் – பாராளும் மன்னன் - இத்தனை பேரையும் பழி வாங்கத் துடிக்கும் பாதகியைத் தாங்கி நிற்கும் பூமி மாதா! சங்கிலி தவிடு பொடியாகட்டும்! இந்த மண்டபமே இடிந்து தூள் தூளாகட்டும்..." என்று வார்த்தைகளில் அனலைக் கக்கும் அவளைக் கண்டு நாம் நடு நடுங்குகிறோம். சாது மிரண்டால் தெரியாதா என்ன? அற்புதமான காட்சி அது.

ரத்னகுமார்.
சென்னை.

படை வலிமைகொண்ட மனோகரனின் முன் நிற்க முடியாமல் வீர சொர்க்கம் புகுந்து விடுகின்றனர், பாண்டிய வீரர்கள். ஆனால் மனோ வலிமையும் வீரமும் கொண்ட கிழ அரசன் முத்து விஜயன் புலியெனப் பாய்ந்து போரிட்டு வீர மரணமடைகிறான். வீரத்திற்கும் தேச பக்திக்கும் எடுத்துக் காட்டாக விளங்குகிறது இக்காட்சி.

ஷேக் உதுமான்,
ரவண சமுத்திரம்.

நிலமை மீறிப்போய் விட்டது. வசந்தசேனையின் சதிகள் அம்பலமாகி விட்டன. இனி அவள் உயிர் தப்பி ஓடவேண்டியதுதான் என்ற நிலைவரையில் வந்தாகி விட்டது. மனோகரன் உயிரோடு இருக்கும் வரையில் உயிருக்கு ஆபத்துதான் என்பதை யறிந்த வசந்தசேனை கட்டாரியை அவன்மேல் வீசுகிறாள். ஆனால் அது குறிதவறி அவள் மகன் வசந்தன் உடலில் பாய்கிறது. அவள் "வசந்தா...வசந்தா!" என்று கதறுகிறாள். ஆனால் வசந்தன், 'அண்ணா அண்ணா!' என்று கதறி விடுகிறான். "அண்ணா! என்னை ஒரு முறை 'தம்பீ' என்று அழைக்கக் கூடாதா? சொல்லு அண்ணா, தம்பீன்னு" என்று கூவும் வசந்தனைப் பார்த்து உணர்ச்சியோடு "தம்பீ!" என்கிறான் மனோகரன். "அண்ணா! இந்தப் பாவி வீசிய கட்டாரி உன்மீது பட்டிருந்தால் நீ எவ்வளவு வலியோடு கஷ்டப்படுவாய் என்பதை நான் உணருகிறேன். நீ வாழவேண்டும் அண்ணா! அண்ணா! நீதான் நாட்டை ஆள வேண்டும். நான் சாகவேண்டும்" என்று கூறிச் சாகிறான். அவன் செத்ததோடின்றி வசந்தசேனையையும் வார்த்தைகளால் துடிக்க வைத்து விடுகிறான். 'தன்வினை தன்னைச் சுடும்' என்பதைச் சித்தரிக்கும் அருமையான காட்சி இது.

ஏ. எஸ். வி,
சென்னை.

மன்னிப்பு கேட்க மறுத்து நின்ற மனோகரனை வேசிமகன் என்கிறான் மன்னன் புருஷோத்தமன். சிங்கமெனக் கர்ஜிக்கிறான் மனோகரன். 'புருஷோத்தமரே! புரட்டுக்காரியின் உருட்டும் விழியிலே உலகத்தைக் காண்பவரே! மானமொன்றே நல் வாழ்வெனக் கொண்டு வாழ்ந்த மறவேந்தர் பரம்பரையில் மாசாக வந்தவரே! மயிலுக்கும் மந்திக்கும் வித்தியாசம் தெரியாத மதிவாணரே! குளிர் நிலவைக் கொள்ளிக் கட்டையெனக் கூறிய குருடரே! என் தாய்-அன்பின் பிறப்பிடம், அற நெறியின் இருப்பிடம், கருணை வடிவம், கற்பின் திருவுருவம், மாசற்ற மாணிக்கம், மாற்று குறையாத் தங்கம்—அவர்களை அவதூறு கூறிய உமது அங்கங்களைப் பிளந்தெறிவேன்..." என்றெல்லாம் கூறி அப்பனையும் சித்தியையும் துண்டாக்கத் துணிந்து வாளை யுருவும் போது தடுக்கிறாள் பத்மாவதி. நமக்கு அப்போது பத்மாவதியின்மேல் கோபங்கூட வருகிறது.

எஸ். சுகுமாரன்,
பாளையங்கோட்டை.

குழந்தை கொலை செய்யப்பட விருக்கும்போது ஓடிவந்து தடுக்கி

குள் பத்மாவதி. சோழபரம்பரையை ஒழித்து விடுவதாக அவளிடம் கூறுகிருள் வஸந்தசேனை. பத்மாவதி பாம்பாக மாறிச் சீறுகிருள்.

''நிறுத்து வசந்தி, நிறுத்து / பல ஆண்டு காலம் என் பர்த்தாவை உன்னுடையவளாக்கிக் கொண்டு என் வாழ்வை நில வில்லா வனமாக்கிஞய். பொறுத்துக் கொண்டேன்! சபாமண்டபத்திலே சாம்ராஜ்ய மகாராணிபோல் அமர்ந்து கொண்டாய்; அதையும் பொறுத்துக் கொண்டேன். பொல்லாத மொழி பேசிக் கொல்லாமல் கொன்று போட்டாய்; அதையுங்கூடப் பொறுத்துக் கொண்டேன். புலியென என் புதல்வன் சீறி எழுந்த போதெல்லாம் உறைவிட்டுக் கிளம்பிய வாளை உடனே தடுத்து உன் உயிரைக் காப்பாற்றி யிருக்கிறேன். காரணம் என்ன? கத்தி முனையிலே சோழநாட்டின் சொர்ண விக்ரகத்தை நிறுத்தியிருக்கும் புத்திகெட்டவளே, உன்னைத்தான் கேட்கிறேன். நான் பொறுமையாய் இருந்ததற்குக் காரணம் என்ன? புருஷன்மீது வைத்த அன்பு''என்று கண்ணகிபோல் கூச்சலிடும் பத்மாவதியைக் கண்டு நாம் பயப்படுகிருேம். மேலுக்குச் சிரித்தாலும் வசந்தசேனையின் உடலும் நடுங்கத்தான் செய்கிறது.

வீராசாமி,

சென்னை.

வசந்தன் அசடானுலும் அன்னையைத் தவிர மற்றவர்களிடம் பக்தியும் அன்பும் கொண்ட நேர்மையாளன். அண்ணன் கட்டப்பட்டிருக்கும்போது தனக்கு ராஜ்யம் வேண்டாமென்று கூறி அண்ணனுக்குச் சிம்மாசன மளிக்கும்படி வேண்டும் காட்சி—பரதனை ஞாபகமூட்டுகிறது.

''மனேகரப்ரியா,''

கும்பகோணம்.

துறவிபோல் வந்த உக்ரசேனனுடன் இன்பமனுபவிக்க அரசனைப் பிரிந்து அவனுடன் குலவும்போது வசந்தசேனுவிடம் உக்ரசேனன் சொர்க்கத்துக்குப் போய்க் கொண்டிருப்பதாகக் கூறி விளையாடுகிருன். அதைக் கவனித்த வசந்தன் மன்னனிடம் போய் 'அம்மாவும் சாமியாரும் சொர்க்கத்துக்குப் போகிருங்களாம்' என்று கூறி அழைத்து வரும் கட்டம் நம்மை வயிறு வெடிக்கச் சிரிக்கச் செய்கிறது.

வி. பி. பிரதாபன்,

காரைக்குடி.

கற்கோட்டை

அரும் பாடுபட்டு கற்கோட்டையிலிருந்து தப்பி வந்து கோடீஸ்வரனுகி விட்ட பிரதாபன் தன் விரோதிகளை யெல்லாம் ஒழித்துவிட்டு ஆவலோடு சுந்தரியிடம்வந்து தன்னேடு வாழும்படிக் கூறுகிருன். இதைக் கண்ட சுந்தரியின் மகன் பிரதாபனைப் பார்த்துச் சுடுகிருன். ஆனல் அந்தக் குண்டைத் தன் மார்பில் ஏற்றுக் கொள்ளுகிருள் சுந்தரி. அவளுக்காக அரும்பாடுபட்ட பிரதாபன் மனமுடைந்து கதறி அவளுடலைத் தூக்கிக் கொண்டு கிளம்புகிருன். இக்காட்சி நம் மனதை நெகிழச் செய்கிறது.

ஏ. ஆர். சந்தானம்,

சென்னை.

குமாரைப் புலி வாயிலிருந்து காப்பாற்றியதற்காக பிரதாபனுக்கு ஆனந்தனின் வீட்டில் ராஜோபசாரம் நடக்கிறது. ஆனந்தனும் குமாரும் வெளிச் சென்றதும் பிரதாப் தன்னை யறிந்து கொள்ளாத சுந்தரியிடம் தன் கதையைக் கூறி தன்னை இன்னுனென்று மறைமுகமாக அறிமுகப்படுத்திக் கொள்ளுகிருன். பிரதாபன் மாண்டுபோனதாகக் கூறி ஏமாற்றி ஆனந்தன் தன்னை மணந்ததை யறிந்த சுந்தரி துடிதுடித்துப் போகிருள். உள்ள முருக்கும் உயரிய காட்சி.

நந்தலா,

செங்கற்பட்டு.

நீதியின் பிரதிநிதியாக இருக்க வேண்டிய சேகர் அநீதியின் பிம்பமாக விளங்கி அக்கிரமங்கள் பல புரிகிருன். ஆனல் அவன் வைத்த தீ அவன் குடும்பத்தையே சுட்டுப் பொசுக்கி விடுகிறது. மகனும், மனைவியும் விஷமருந்தி மாண்ட

தைக் கண்டு மதிமயங்கி தானும் விஷம் சாப்பிட்டுச் சாகிறான். அவருக்குச் சரியான தண்டனைதான் அது என்றாலும் நமக்கு அவன் மீது அனுதாபம் உண்டாகத்தான் செய்கிறது.

வேதாசலம்,
சென்னை.

மங்களம் தன் மூத்த மனைவியின் மகள் சுசீலாவுக்கு விஷம் கொடுத்ததை யறிந்த மாஜிஸ்டிரேட் சேகர், அவளை அவள் மகன் கண்ணனுக்கு விஷம் கொடுக்கும்படிக் கூறுகிறான். தான் வைத்த பொறியில் தானும் மகனுமே சிக்கிச் சாகவேண்டியதை நினைத்து மங்களம் துடிக்கிறாள். பச்சைப் பாலகனுக்கு விஷமிடும் அவளது மனோபாவம் கண்டு நாம் அவளை அளவின்றி வெறுக்கிறோம்.

ராதாஹமீத்,
சித்தூர்.

பொன்வயல்

சிவராமக் கவுண்டர் மகள் செம்பாவுக்கு அய்யாக் கவுண்டர் மகன் ராஜா செங்கோட கவுண்டன் மீது அளவுகடந்த காதல். அத்தானுக்காகத் தானும், தனக்காக அத்தானும் பிறந்திருப்பதாக எண்ணிப் பெருமிதம் கொண்டாள் அவள். பெருமிதம் கொண்ட செம்பாவின் செறுக்கொழித்து அவள் வாழ்வின் இன்பப்படகிலே தாவிக் குதித்து அதைக் கவிழ்த்துத் தண்ணீரில் அமிழ்த்திவிடத் துணிகிறாள், வஞ்சகர் வலையிலே சிக்கிய புல்புல் மைனா பங்கஜா. அவர்கள் வலையில் விழுந்த அவள், தன் வலையிலே செங்கோடனைச் சிக்க வைக்கிறாள்.

அத்தானைக் காணாத ஆத்திரம், பால் போன்ற வெள்ளையுள்ளம் படைத்த அவன் களங்கப்பட்டு விட்டானே என்ற ஏக்கம், அதற்குக் காரணமான பங்கஜாவைப் பழி வாங்கவேண்டுமென்ற நோக்கம் எல்லாம் ஒன்று சேர விடு விடென்று செங்கோடனிடம் செல்லும் செம்பா தன் சொரூபத்தை அவனுக்குக் காட்டுகிறாள். அதோடு கத்தியையும் காட்டுகிறாள்.

"இதோ பாத்தியா? எனக்கும் உனக்கும் நடுவே யார் வந்தாலும் சரி, 'சதுக்' என்று ஒரே சீவு" என்று சொல்லி விட்டுத் திரும்புகிறாள். அத்தானைக் கொல்லவோ, தற்கொலை செய்து கொள்ளவோ விரும்பவில்லை அவள். இடையிலே புகும் யாரையும் ஒழித்துவிடத் தீர்மானிக்கிறாள். அவள் செங்கோடன் பால் கொண்ட பிரேமையைக் கண்டு நாம் ஆச்சரியப் படுகிறோம்.

"சசாங்கன்,"
சென்னை.

பங்காரு செங்கோடனின் வீட்டில் புதையலைத்தோண்டி யெடுக்கிறான். அதைக்கண்ட செம்பா அவனைத் தடியால் ஒரே போடாகப் போட்டு விட்டு, குடத்தோடு ஓடுகிறாள். ஆனால் அவளை ஏட் சின்னமுத்து தொடரவே, அய்யனூர் கோயில் கிணற்றில் போட்டு விடுகிறாள். அத்தானின் பொருளைக் காப்பாற்ற அவள் படும் பாட்டைக் கண்டு நாம் வியக்கிறோம்.

ஜே. கே. பக்தவத்ஸலு,
மாயவரம்.

பங்காரு படித்தவன்; பட்டதாரி; ஆனால் பணத்திற்காசைப் பட்டுப் பகுத்தறிவை யிழந்தவன். எஸ்ராஜின் எல்லாச் சதிகளுக்கும் உடந்தையாயிருந்த அவனை, செம்பா தடியால் தலையிலடிக்கும்போது அவன் அறிவு கலங்குவதற்குப் பதில் தெளிவுறுகிறது. அவள் அவன் தலையிலடிக்கவில்லை. மண்டையிலே குழம்பிக் கிடந்த மூளையைத் தட்டித் தெளிய வைத்தாள். உள்ளதை உள்ளபடி போலீஸாரிடம் கூறுகிறான் பங்காரு. இந்தக் காட்சி மிகவும் ரசிக்கத் தகுந்ததாகும்.

கே. வி. நமசிவாயம்,
சென்னை.

கல்யாண ஊர்வலமென்றால் வீட்டில் உள்ள சிறுவர்களுக்கெல்லாம் கனகுஷி. ஊர்வலம் வண்டியிலானாலும் காரிலானாலும் அவர்கள் உட்காரப் பிடிவாதம் பிடிப்பது கண்கூடு. வீட்டின் ஒரே பிள்ளையான அசட்டு

அழகு செங்கோடன்-செம்பா ஊர் வலத்தின்போது சாரட்டில் ஏறி அசட்டுத் தனம் பண்ணும் காட்சியை நம்மால் மறக்க முடியுமா என்ன ?

''குடந்தைவாசி'',
பெங்களூர்.

தீ விபத்திலிருந்து புல் புல் மைனுவைக் காப்பாற்றியதற்காக செங்கோட கவுண்டனுக்குப் பிரமாதமானதொரு விருந்தளிக்க ஏற்பாடு செய்கிருன் எஸ்ராஜ். அவன் வீட்டிலில்லாதபோது விருந்துக்கு வந்து சேர்ந்த செங்கோடனை சவால் கண்ணம்மாவும் பங்கஜாவும் உபசரிக்கின்றனர். ஆனல் எஸ்ராஜ் வந்து செங்கோடனை வெளியே போகச் சொல்லுகிருன். திடுக்கிட்டு வெளியே போய் நின்ற செங்கோடனை மீண்டும் மலர் மாலைகளுடன் எஸ்ராஜ் வரவேற்கும்போது வயிறு வெடிக்கச் சிரிக்கிறேம். ஆனந்தமான காட்சி.

''கேசவன்'',
திண்டுக்கல்.

செங்கோடனின் போக்கு கண்டு மனம் வெதும்பிப் பேசிக் கொண்டிருக்கிருர் சிவராம கவுண்டர். அவர் மனைவியிடம் இதைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கும் போது, சந்தர்ப்ப மறியாத அவர் பிள்ளை அழகு அசட்டுத்தனமாகச் சினிமாவுக்கு நேரமாகி விட்டதென்று கூறுகிருன். அழுவதா சிரிப்பதா என்று புரியாமல் விழிக்கிறேம்.

பி. எஸ். முகுந்தன்,
கரூர்.

சினிமா என்றல் என்ன என்றே தெரியாத செங்கோடன் புல் புல் மைனுவின் பேச்சைக் கேட்டு சினிமாவுக்குப் போகிருன். அங்கே முதல் ரீல் முடிந்ததும் எழுந்திருந்து மற்றவர்களையும் அழைக்கிருன். 'இன்னும் பதினேழாயிரம் அடி இருக்குதே!' என்று ஒருவன் சொல்லும்போது ''பதினேழாயிரம் அடியா? அவ்வளவையும் யாரு கொடுக்கிறது? யாரு வாங்கறது?'' என்கிருன். 'அட அசடே' என்று கூறிச் சிரிக்கிறேம். தமாஷான கட்டம் இது.

டி. எம். பாலகிருஷ்ணன்,
சைதாப்பேட்டை.

செங்கோடனைச் சிறையில் சந்திக்கிருள் செம்பா. பணத்தைப் பத்திரப்படுத்திவிட்டதாக அவள் கூறும்போது தான் அவனுக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது. அவள் குடத்தைக் கொண்டு போனதாக அவன் கூறும்போது 'எப்படித் தெரியும்?' என்று கேட்கிருள் செம்பா. அவன் அவளது வளையல் துண்டுகளைப் பற்றிக் கூறுகிருன். ''அத்தான்! மெச்சினேன் உன் புத்தியை'' என்று கூறி ஆனந்தப்படுகிருள். அவனும் குஷியில், ''மெச்சித்தானே ஆகணும்'' என்கிருன். தமாஷான காட்சி இது.

'' ஹாஸ்யப்ரியன் '',
தஞ்சாவூர்.

ராஜி என் கண்மணி

சிறையிலிருந்து விடுதலை பெற்ற ராமு ராஜியைக்காணத் துடிக்கிருன். அவனேடு இருந்த கைதி சிங்கம், ''உனக்காக எங்கப்பா அவ இவ்வளவு நாளும் காத்துண்டு இருக்கப் போரு ?'' என்கிருன். ராமு இதைக் கேட்டு அதிர்ச்சியடையாது, ''ராஜி அப்படிப்பட்டவளல்ல அப்பா'' என்று கூறுகிருன். ராஜியிடம் அவன் கொண்ட நம்பிக்கை கண்டு நம் மனம் நெக்குருகிறது.

இ. சண்முகரத்னம்,
சென்னை.

பாம்பே ஷோவில் விற்றதுபோக மிஞ்சிய ஒரு ரோஜா மலரை தன் அன்பளிப்பாக ராமுவிடம் கொடுக்கிருள் ராஜி. அவர்களது வாழ்வு வெவ்வேறு பாதைகளில் பிரிந்துவிட்டபின் ராமுவை அறியாத ராஜி, கடைசியில் தன் மகனைக் காப்பாற்றியதற்காக அவனுக்கு பொருளும், பழமும், புஷ்பங்களும் தருகிருள். அவன் அவைகளை மறுத்து ஒரு ரோஜா மலரை மட்டும் எடுத்துச் செல்லும்போது ராஜியின் மனதைம்

போல் நம் மனமும் நெகிழ்ந்து போகிறது.

ஆ. சை. தையப்புனிசாபேகம்,
காரைக்குடி.

ரகுவின் ஆஸ்பத்திரியில் ராஜிக்கு கட்டவிழ்த்து விடப்படுகிறது. எதிரே ரகுவும் அவள் அத்தையும் நிற்கிறார்கள். கண் திறக்கும்போது ராஜிக்கு உலகம் தெரிகிறது! ஆம், இப்போது அவள் குருட்டுப் பெண் இல்லை! அவள் உள்ளம் எவ்வளவு இன்பத் துடிப்பு துடிக்க வேண்டும்! இல்லை ராமு இல்லாத—ராமுவைப் பார்க்க முடியாத—உலகம் உலகமாகவே அவளுக்குப் படவில்லை. 'ராமு ராமு' என்று அவள் கூவும் போது நமக்கு உள்ளத்தில் ஒரு வேதனை ஏற்படுகிறது.

பி. எஸ். மணி,
தச்சநல்லூர்.

காதலி ராஜியைக்காண, காராக்கிரகத்திலிருந்து விடுதலை பெற்ற ராமு கனவேகத்தில் வருகிறான். மனம் பறக்கிறது; கால் நொண்டுகிறது. அவள் கண்ணைப் பெற்று ரகுவை மணந்து வாழ்வதாக அறியும்போது ராமுவின் உள்ளம் தடுமாறுகிறது. உள்ளக் கொந்தளிப்பு மனநிலே பிரதி பலிக்கிறது. தடுமாறும் தன் உள்ளத்தைச் சாந்தப் படுத்த முயலுகிறான் ராமு. அவனது முகபாவம் நம்மை என்னவோ செய்கிறது.

வி. எஸ். சோமசுந்தரம்,
சென்னை.

கண்காட்சியைப் பிரமாதமாக ரசிக்கும் ராமு ஒரு காட்சியைக் கண்டு குஷியில், "அந்த ஆட்டத்தைப் பார்! எவ்வளவு நன்றாக இருக்கிறது?" என்று கூறுகிறான். ராமுவின் மகிழ்ச்சிக்கு மடைபோட விரும்பாத ராஜி மன வேதனையை மறைத்துக் கொண்டு மகிழ்ச்சியடைந்தவள் போல, "ஆமாம், மிகவும் நன்றாயிருக்கிறது" என்று கூறிச் சிரிக்கிறாள். அப்போதுதான் ராமு தன் தவறை உணர்ந்து மன்னிப்புக் கேட்கிறான். அவளது மனோபாவத்தையும் அவன் நிலையையும் கண்ட நாம் மிகவும் வருந்துகிறோம். உள்ள முருக்கும் காட்சி இது.

ஏ. அப்துல் சமத்,
ஈரோடு.

சந்திரஹாரம்

தன் மகன் தீர்க்காயுளோடு சந்தோஷமாக வாழ வேண்டுமென்பதற்காக சந்தனை தேச யாத்திரைக்கு அனுப்புகிறார் மஹாராஜா. ஒருவன் விரும்பும் பெண்ணை மணமுடிக்காது அவர்கள் மரணத்திற்குக் காரணமாகிவிடும் பெற்றோருக்கு ஒரு படிப்பினையாகும் இக் காட்சி.

இ. வேதநாயகம்.
மட்டக்களப்பு, சிலோன்.

தானும் தந்தையும் கஞ்சியோ கூழோ குடித்துக்கொண்டு அந்த வீட்டிலிருக்க வேண்டுமானால் சிற்றன்னையின் விருப்பப்படி-இல்லை கட்டளைப்படி ஒரு அசட்டுப் பிள்ளையை மணக்க வேண்டும் என்ற நிலைமையில் தந்தைக்காக சரி என்று ஒப்புக் கொள்ளுகிறாள் கௌரி.

அவள் கண்களில் கண்ணீர்; உள்ளம் சூன்யமாகி விட்டது; எதிர்கால இன்பக் கோட்டைகள் சரிந்தன. தங்கள் வாழ்க்கையையே நிர்ணயிக்கும் சமயத்தில்...கனவுக் கோட்டையின் உச்சியிலே நிற்கும் போது—"சரி அம்மா" என்று மனம் வெறுத்துக் கூறும் நிலையில் இன்று நம் நாட்டில் எத்தனை கன்னிப் பெண்கள் இருக்கிறார்கள்? வறுமை, சித்தி, கூடப்பிறந்தவர்கள் இதைப்போன்ற பல காரணங்களால் தன் மனதுக்குப் பிடிக்காதவரை மணம் செய்துகொண்டு வாழ்நாளை வீணாக்கிக் கொண்டு துடிக்கும் பேதைப் பெண்களின் நிலையை நன்கு பிரதி பலித்து நம் உள்ளத்திலே சோக முத்திரையிடும் "சரி அம்மா" என்று கூறும் அக் காட்சியை நம்மால் மறக்க முடியுமா?

அம்பாரி,
சென்னை.

தபால் பெட்டி

ஏன் இப்படி?

நமது நக்ஷத்திரங்கள் ரஸிகர்களின் கடிதங்களுக்குப் பதில் எழுதுவது இடையாது. அவர்களின் படங்களைப் பார்த்து அவர்கள் மேல் அளவற்ற மதிப்பும் விசுவாசமும் கொண்ட ரஸிகர்கள் கடிதமூலமாய்த் தொடர்பு கொள்ள விரும்புகின்றனர். ஆனால் ரஸிகர்களை மதிக்காத காரணத்தாலோ என்னவோ நக்ஷத்திரங்கள் அவர்களோடு கடிதத்தொடர்பு கொள்வதில்லை. வட இந்திய நக்ஷத்திரங்களில் பெரும்பாலோர் ரஸிகர்களுடன் சர்வசகஜமாகப் பழகுகிறார்கள்; கடிதமெழுதுகிறார்கள். "இதற்குக் காரணம் அவர்கள் படித்தவர்கள்; நம் தென்னிந்திய நக்ஷத்திரங்கள் கைநாட்டுப் பேர்வழிகள்" என்ற அபிப்பிராயம் நிலவுகிறது. இந்த நிலையை மாற்றி ரஸிகர்களோடு தொடர்பு கொள்ள நக்ஷத்திரங்கள் ஏன் முன் வரக்கூடாது?

ஆ. செல்வரசு,
விருதுநகர்.

●

புகழவேண்டும்

மேல் நாட்டின் தலைசிறந்த ஹாஸ்ய நடிகரான சார்லி சாப்ளினைப் போன்ற ஒரு ஹாஸ்ய நடிகர் நம் நாட்டில் இல்லையே என்ற குறை நமக்கு இருந்தது. அதை இப்போது போக்கி விட்டார் நமது ஹாஸ்ய நடிகர் சந்திரபாபு. சந்திரபாபு ஹாஸ்யம் செய்வதில்லை. அதற்கென அவர் தனியாக எதுவும் செய்வதில்லை. அவர் வருகிறார்; அங்க பாவங்கள் பேசுகின்றன; அவர் பேசுகிறார். அவரது அங்க அசைவுகளும் சரளபேச்சும் கண்டு நம்மால் சிரிக்காமலிருக்க முடிவதில்லை; சிரிக்க வைப்பதற்காக அவர் 'நடிப்ப'தில்லை. அவர் பாத்திர தாரியாக மாறிவிடும்போது நாம் சிரிக்கிறோம். சந்திரபாபுவைப் போன்ற பிறவி ஹாஸ்ய நடிகரை நாம் பாராட்டிப் புகழ்ந்து ஆதரவளிக்க வேண்டும்.

எஸ். செல்வராஜ்,
பழனி.

●

எது விமர்சனம்?

மனோகரன் சிற்றத்தோடு தந்தையின் மேல் பாய்கிறான். அப்படிப் பட்ட தனயனை தாய் தடுக்கிறாள். இவ்வளவு உத்தமியான ஒருத்தியை தாசி என்று அரசர் கூறும்போது தந்தை யென்றும் பாராமல் அவனைக் கொல்ல முற்படுகிறான். இது கதையில் வரும் ஒரு சம்பவம். "இந்தக் கட்டத்தில் 'அமைக்கப்பட்டிருக்கும் வசனம் தந்தை-தனயன் வரம்பை மீறுவதாக உள்ளது' " என்று ஒரு பத்திரிகை விமர்சனம் கூறுகிறது. மனோகரா கதையில் இத்தனை வருஷங்களுக்குப் பின் இது வசனமூலம் குறையாகப்பட்டு விட்டது விமர்சகருக்கு! கலைஞர் மு. கருணாநிதி வசனம் எழுதியதால்—ஒரு கட்சியின் தூண்களில் ஒருவர் என்பதால் இந்த நிந்தனையா? தந்தையைக் கடவுள் இழித்தெறியும்போது அதைப் பிரகலாதன் பார்த்துக் கொண்டு சும்மா நின்றதைப்போல் தாயைப் பழித்த வாயைக் கிழிக்காமல் விடவேண்டுமென்று விமர்சகர் விரும்பினார் போலும்! உணர்ச்சிமிக்க வசனங்களை கட்சி மனோபாவம் கொண்டு தாக்குவது நேர்மையான விமர்சனமல்ல.

சி. கேசவன்,
மாயூரம்.

கவனிக்கவும்

சமூகத் துரோகிகள் என்ற தெலுங்குப் படத்தின் ஒரு கட்டத்தில் இந்தியாவுடன் இலங்கையின் படத்தையும் திரையில் வரைந்திருக்கின்றனர். அதில் உள்ள வடிவப்படி இலங்கை இல்லை; இலங்கைத் தீவின் அமைப்பைப்போல் படம் இல்லை. இதனால் இலங்கை வாசிகள் மனம் வருத்தம் கொள்வர். நானும் இலங்கைப் பிரஜை என்ற முறையில் வருந்துகிறேன். இலங்கையில் இந்தியப் படங்களுக்கு அமோகமான வசூல் கிடைக்கிறது. அப்படிப்பட்ட இடங்களைப்பற்றிய விஷயங்களில் அக்கறைகாட்ட வேண்டியது அவசியம் என்று படத்தயாரிப்பாளர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இ. ஷண்முகரத்னம்,
சென்னை.

பழசு ஏன்?

செய்திப்பட இலாகா நம் நாட்டின் பல விஷயங்களையும் பற்றிய படங்களைத் தயாரித்து வெளியிடுகிறது. சில முக்கிய நகரங்களில் உடனுக்குடன் புதிய விஷயங்கள் காட்டப்பட்டு விடுகின்றனவே தவிர மற்றபடி அதில் பிரயோஜனமில்லை. ஏதோ ஓரிரு குறிப்பிட்ட படங்களை எப்போது வேண்டுமானாலும் பார்த்துக் கொள்ளலாமே தவிர மற்றவை அனேகமாகப் பழசாகி யாருக்கும் பிரயோஜனம், சுவை இரண்டும் அற்றதாகி விடுகின்றன. உடனுக்குடன் செய்திப்படங்களை எங்கும் காட்ட முயற்சிக்க வேண்டும்.

ஜி. ராதாகிருஷ்ணன்,
நாகூர்.

படவுலகின் பாதுகாவலன்!

தென்னாட்டின் தலைசிறந்த தயாரிப்பாளர் எஸ். எஸ். வாஸன் அகில இந்திய பிலிம் சம்மேளனத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது அறிந்து மிகமிக மகிழ்ச்சி யடைகிறோம். பட உலகின் நிலையைப் புள்ளி விவரங்களோடு அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் எடுத்துக்கூறும் அந்த நேர்மையாளரின் கோரிக்கைகளை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டுமென விரும்புகிறோம். தமாஷாவரி விதிப்பதன் மூலம் ஒரு பொழுது போக்கு அம்சம்தான் படக்கலை என்று பட உலகை அரசாங்கம் தீர்மானமாகக் கூறுகிறது. மற்றவர்களும் கூறுகிறார்கள். தலைவரின் முதல் பிரசங்கம் முதல்தரமான பிரசங்கம். பாராட்டிப் புகழுகிறோம் அந்தப் பாதுகாவலனை. வாஸன் அவர்களின் மூலம் படக்கலைக்கு விமோசனம் ஏற்படுமென்பது நிச்சயம்.

ஸ்ரீ சுகுமார்,
பூனா.

குறை நீங்குமா?

தற்போது பட முதலாளிகளிடையே ஒரு வியாதி பரவி வருகிறது. படங்களை தயாரிக்கும்போது பல காரணங்களை முன்னிட்டு படப்பிடிப்பைத் தாமதப்படுத்துகிறார்கள். ஆனால் படம் முடிந்தவுடனே சென்ஸாரிடம் கொண்டு போகுமுன் வெளியீட்டுக்கான தேதியை நிர்ணயித்து விளம்பரப்படுத்தியும் விடுகிறார்கள். ஆனால் சென்ஸாரில், அவர்கள் பிரமாதம் என்று நினைத்து 'சுட்ட' காட்சிகள் வெட்டப்பட்டு விடுகின்றன. உடனே கதைத் தொடர்புக்கான அந்தக் காட்சிகளுக்குப் பதிலாக வேறு காட்சிகளைப் படம் பிடிக்க வேண்டியிருக்கிறது. வெளியீட்டுத் தேதியை தள்ளிப்போட விரும்பாமல் அவசர அவசரமாக எதையோ தயாரித்து விட்டு திரையிட்டு விடுகிறார்கள். படம் பார்த்து வெளியேவரும் ரசிகர்கள் "கன்டின்யூடி" இல்லையடா; 'சின்ஸ்" எல்லாம் "ஜம்ப்" பண்ணுதடா" என்று பேசிக்கொண்டே வருகின்றனர். அவ்வளவுதான், அந்தப் படம் விரைவிலேயே டப்பாவுக்குள் போய்விடும். ஆக்கப் பொறுத்தவர்கள் ஆறப் பொறுத்தால்தான் என்ன? பணத்தைக் கொட்டிக் படத்தைப் பிடித்து கடைசியில் படுத்து கொள்ளும் அளவுக்கு அவர்கள் நிலை அப்போது வராதல்லவா?

எஸ். வி. சேஷாத்ரி,
காஞ்சிபுரம்.

பத்மினி பிக்சர்ஸ்...
கல்யாணம் பண்ணியும்
பிரம்மசாரி

சிரிக்கச் சிரிக்க அழகு அதிக
மாகும் என்பார்கள். மக்களைச்
சிரிக்கச் செய்து அழகுள்ளவர்க
ளாகச் செய்ய வேண்டும் என்ற
நோக்கத்தோடுதானே என்ன
வோ பத்மினி பிக்சர்ஸார் ''கல்
யாணம் பண்ணியும் பிரம்மச்
சாரி'' என்ற அதிநீண்ட பெய
ருள்ள ஹாஸ்யப் படத்தைத்
தயாரித்திருக்கிறார்கள். அத்
துடன் அழகிகளைக் கொண்டு
சிரிக்கச்செய்து நம்மை............





.........மேலும் சிரிக்க வைக்கப போகிறார்கள். ப. நீலகண்டன் டைரக்ட் செய்திருக்கும் இப் படம் அவரது திறமைக்கு உரை கல்லாக விளங்கும். ராகினி பிரதம பாகத்தில் நடிக்க, பத்மினி, சிவாஜி கணேசன், டி. ஆர். ராமச்சந்திரன், பி. ஆர். பந்துலு எல்லோரும் அவரது வெற்றிக்கு உதவி யிருக்கிறார்கள்.

தமிழ்ப் புது வரு
ஷத்தன்று தமிழ்
நாடெங்கும் வெளி
வருகிறான் இந்த
பிரம்மச்சாரி
உரிமையாளர்:
மதராஸ் பிக்சர்ஸ்
சென்னை-14

மனோகரா

(தொடர்ச்சி)

சிறிது நிறுத்தி மீண்டும் பேசினுன்.

மனோ : முத்து விஜயனின் விலா எலும்பை நொறுக்குகிறேன். சூது செய்து பிறர் நாட்டை சுருட்டிக் கொள்பவர்கள் இப்படித்தான் சுருண்டு போவார்கள் என்பதற்கு அவனை உதாரணமாகக் காட்டுகிறேன்.

பத் : செல்வா ! சிந்தை குளிர்ந்த தடா கண்ணே! நம் பரம்பரைக் கேற்பட்ட களங்கத்தை நீதான் கழுவ வேண்டும்.

மனோ : பரம்பரைக் கேற்பட்ட களங்கம் பாண்டியன் முத்துவிஜயனுல் மட்டுமல்ல—பாதகி வசந்தசேனையாலுந்தான் ! ஏமாந்த காலத்தில் வெற்றி முரசு கொட்டிய வெறியனை மட்டுமல்ல, உங்கள் இன்ப வாழ்வில் குறுக்கிட்ட வஞ்சகியையும் விட்டு வைக்காது இந்த வாள்!

பத் : முதலில் நான் சொன்னதைச் செய்! மனோகரா! அப்பாவிடம் அனுமதி பெற்றுவா!

வசந்தசேனையுடன் உரையாடிக் கொண்டிருக்கிருர் மன்னர். போர்க் களத்திற்கு அனுமதி பெற்றுப் போக அவரிடம் வருகிருன் மனோகரன்.

மனோ : தந்தையே !......விடை கொடுங்கள் !

அர : மனோகரா ! மறக் குலத்தின் மகிமையை மாற்ருர் உணரச்செய் ! எதிரியின் மமதையை மண்ணோடு மண்ணுக்கு !

வச : வெற்றிமாலை எடுத்து வா ! என் கண்மணிக்கு நான்தான் சூட்டுவேன்...

மனோ : ராஜப்பிரியா! வெற்றி பெறுவதற்கு முன் வெற்றிமாலை சூடுவது வீரர்க்கு வழக்கமில்லை. வருகிறேன்......

அர : வெல்க! வாழ்க !

வந்தவேகத்திலேயே புயலெனத் திரும்பி தன் அன்னையிடம் வருகிருன் மனோகரன்.

மனோ : அம்மா...

பத் : செல்வா...பெற்ற தாயும் பிறந்த பொன்னுடும் மகிழ வெற்றி வீரனுக வா, மனோகரா !

மனோ : அம்மா! வெற்றி பெற்ருல் ரத்தின சிம்மாசனம் வரும் ! இல்லையேல் ரத்தம் தோய்ந்த இந்த வீரவாள் வரும், என் செய்தி கூற !

மனோகரன் விறுகொண்டு புறப்பட்டுச் செல்கிருன்.

விழிகளிலே விஷப் பார்வையைத் தேக்கி வைத்திருக்கும் வசந்தசேனை மனோகரனை ஒழித்து விட வேண்டும் என்ற வஞ்சக எண்ணத்தையும் தன் இதயத்திலே தேக்கி வைத்திருந்தாள். மனோகரன் பாண்டியனை படைக்கோலத்துடன் சந்தித்து புகழ்மாலை சூட்டிவரப் புறப்பட்டுச் சென்றதை அறிந்த சேனை, அவனை வஞ்சகமாகக் கொன்று, வாளை எடுத்து வரும்படி பௌத்தாயனனை அனுப்புகிருள்.

போரிலே பாண்டியநாடு மனோகரனுக்கு மண்டியிட்டு விடுகிறது. போரிலே தன் தந்தையை மாளச் செய்த மனோகரனைப் பழிவாங்க, பாண்டியனின் மகள் விஜயா தீர்மானிக்கிருள். ஆண் வேஷத்தில் மனோகரன் தங்கியிருக்கும் கூடாரத்திற்கு அவள் வருகிருள்.

அச்சமயமே பௌத்தாயனனும் அங்கு வருகிருன். தன் வாளை உருவி மனோகரனின் உயிரைக் குடிக்க அவன்முனையும் போது விஜயா விரிட்டுக் கத்தி விடுகிருள். மிரண்டோடுகிருன் பௌத்தாயனன்.

விழித்தெழுந்த மனோகரன் ஆண் வேஷத்திலிருக்கும் வேல் விழியாள் விஜயாவைப் பிடித்துக் கொள்கிருன்.

மனோ : யாரடா நீ?

விஜ : நீர் உண்டாக்கிய சுடுகாட்டிலே மறு உயிர் பெற்ற பேயுமல்ல, பிணமுமல்ல ! உமது பார்வையில் தட்டுப்பட்டாமல் போன பகைவர்களில் ஒருவன்—பாண்டிய நாட்டு வீரன் !

மனோ : பாண்டிய நாட்டு வீரன் ! உம்... பாதி ராத்திரியிலே பதுங்கிப் பாயும் பட்டாளப் பயிற்சிக்கு முத்து விஜயன் ஆட்சியிலே முதல் இடம் போலும்! முதுகெலும்பில்லாதவனே! கையிலே வாளும், நெஞ்சிலே கோழைத்தனமும் கொண்டவர்களில் ஒருவன் மிச்சமா? ஓடிப்போ... உயிரைக் காப்பாற்றிக் கொள்...

ராஜ : மனோகரா!... இவனை விடக்கூடாது!

மனோ : போகட்டும்! பாவம்... மன்னித்துவிட்டேன்.

விஜ ; மன்னிப்பு கேட்கும் மர பல்ல...

மனோ : மறைந்திருந்து தாக்கும் மரபு ..மாவீரன் !

ராஜ : தூங்குபவன் தலையைத் துண்டாடுபவர்களும் வீரர்கள்தான், பாண்டிய நாட்டுப் பள்ளிக்கூடத்திலே! போடா போக்கற்ற கோழையே!

விஜ : கோழை...! நானா கோழை? இதோ பார், இப்பொழுதே நேராகவே பழி தீர்த்துக் கொள்கிறேன்.

வளையல் கை வாளை உருவுகிறது. மனோகரன் அதைத் தடுக்க அவள் தலைப்பாகை கீழே விழுகிறது.

மனோ : ஆ! பெண்!

விஜ : உன் பகைவரின் பெண்; பழிவாங்க வந்தவள்.

ராஜ : இளவரசி!

மனோ : அற்புதமான காட்சி. வளையல் ஏந்தும் கைகளிலே வாள்!

விஜ : பேசாதீர்! நீர் வீரரானல் என்னை ஜெயித்த பிறகு பேசும்!

மனோ : வேல்விழி மாதர்களிடம் வீரர்கள் ஜெயித்தார்கள் என்பதற்கு சரித்திரமே கிடையாது, இளவரசி!

விஜ : கேலி தேவையில்லை... எடும் வாளை!

மனோ : என் வாள் களத்திலே தான் விளையாடும். கன்னிகளை காயப் படுத்தாது!

விஜ : துணிவிருந்தால் – வீரர் லக்ஷணத்தைப்பற்றி பேசியதெல்லாம் வாய்வீச்சாக இல்லாமல் இருந்தால் வாளை வீசும்... நல்ல தீர்ப்பு கிடைக் கட்டும்.

மனோ : நல்ல தீர்ப்பு... வாள் முனை வழங்காது! இனிமேல் வழக்கு மன்றத்திலே தான் பெறவேண்டும்! பாண்டியன் பெற்ற பைங்கொடியே! நீ இப்போது கைதி – பாதுகாப்புக் கைதி! ராஜப்ரியா! அழைத்துச் செல்!

ராஜ : அதோ கோட்டை வாசலிலே எங்கள் கொடி! ராஜகுமாரி மனோகரனின் அடிமை என்பதை அறிவிக்கும் கொடி!

விஜ : பேசாதே! அரசிளங் குமரியாக வாழ்ந்தேன். அடிமையாக வாழமாட்டேன். வானம்பாடியாகத் திரிந்தேன்–வல்லூறுகளின் கோரப் பிடியிலே சிக்கமாட்டேன். சுதந்திரத் தென்றலிலே மிதந்தேன். அடிமைச் சூருவளியிலே அகப்பட்டுக் கொள்ள மாட்டேன் – மாற்றானின் காலடியை விட மரணத்தின் மடி எவ்வளவோ மேல்.

வேதனைகள் தன் உள்ளத்திலே வெடித்துச் சிதற விஷமருந்தி தன் வாழ்க்கையை முடித்துக் கொள்ள முனைகிருள் விஜயாள். அவளது முயற்சியைத் தடுத்ததோடு, மாலையிட்டு தன் மனைவியாகவும் விஜயாவை ஏற்றுக் கொள்கிருன் மனோகரன். விஜயாவிடம் மனோகரன் பேசிக்கொண்டிருக்கிருன்.

மனோ : விஜயா! இந்த அரண்மனையிலே நீ ஒருத்திதான் அழகி என்று நினைத்தேன். உனக்குப் போட்டியாக ஒரு பொற்கொடி இருப்பது தெரியாமல் போய்விட்டது.

விஜ : யார்?

மனோ : (கண்ணாடியில் தெரியும் விஜயாவின் உருவத்தைக் காட்டி) அதோ! தங்க ரோஜாவிலே வைரப் பனித்துளிகளின் சதிராட்டம் இந்தச் சிரிப்பு!

விஜ : அதிருக்கட்டும்! எதிரியின் மகள் நான்! என்னை தங்கள் தாய்

தந்தையர்கள் ஏற்றுக் கொள்வார்களா?

மனோ: நானும் அப்படித்தான் சந்தேகித்தேன்; எதிரியாயிற்றே நான்; என்னை நீ ஏற்றுக் கொள்வாயோ என்று!

விஜ: உங்கள் வீரத்தைக் காதலித்தேன். என் தாய்நாட்டு மண் அதைத் தடுத்தது! உங்கள் வசீகரத்தில் மயங்கினேன்! அப்பாவின் பாசம் அதற்கு அணை போட்டது. முடிவில் உங்கள் நேர்மையான இருதயம் என்னை ஜெயித்து விட்டது! என்ன?

மனோ: பேசு கண்ணே... பேசு! உன் அமுதூறும் இதழ்க் கடலின் தேனலைகளை, கண்கள் எழுதிக் குவிக்கும் காதற் காவியங்களை, ரசித்துக் கொண்டேயிருக்கிறேன். இதயராணி!...இன்னும் கொஞ்சம் பேசு..

படகில் மனோகரனும் - விஜயாவும் உல்லாசமாகச் செல்கிறார்கள். மறைந்திருந்த பௌத்தாயனன் மனோகரனது போர்வாளை எடுத்துக் கொண்டு தன் கட்டாரியை அவன் மீது வீசுகிறான். இதைக் கவனித்த விஜயா மனோகரனைத் தப்புவிக்க ஆற்றில் தள்ளி விடுகிறாள்.

மனோ: என்ன! விஜயா?

விஜ: யாரோ கட்டாரியை உங்கள் மீது வீசிவிட்டு ஓடுகிறான்.... அதோ!

மனோ: ஏதோ சூழ்ச்சி நடக்கிறது...நாமும் உடனே புறப்படுவோம் வா!

*　　*　　*

வசந்தசேனையின் அந்தப்புரம். பௌத்தாயனன் மனோகரனின் போர்வாளுடன் பிரவேசிக்கிறான்.

வ. சே: பௌத்தாயனன்!

பௌத்: கொண்டு வந்தேன், போர்வாளை!

வ. சே: சபாஷ்!

பௌத்: அம்மணி! வெற்றி கண்ட மனோகரன் விஜயாளை விவாகம் வேறு செய்து கொண்டான்.

வ. சே: அப்படியானால்...

பௌத்: கேளுங்கள்! நீச்சல் விளையாட்டு நடத்தினார்கள். விஜயாளை விதவையாக்கிவிட்டு வாளோடு வந்து விட்டேன்.

வ. சே.: மனோகரன் இறந்து விட்டானா?

பௌத்: நிச்சயமாக! அம்மணி! பரிசுத் தொகை!

வ. சே: இதோ!

பௌத்தாயனன் மெய் என்னும் மெருகிட்டுக்கூறிய பொய் மொழிகளை நம்பிய வசந்தசேனை, அவனுக்கு ஒரு பொன் மூட்டையைப் பரிசளிக்கிறாள்.

வ. சே: பௌத்தாயனரே! இன்னொரு காரியம்.... ஒரே குறியில் இரண்டு வேட்டை! பத்மாவதியிடம் இந்த செய்தியைச் சொன்னால் நெஞ்சு வெடித்துச் செத்துவிடுவாள். பிறகு... நான்தான் ராணி! நீர்தான் பிரதம மந்திரி!

பௌத்: பிரதம மந்திரியா? அப்பா எது வேண்டுமானாலும் செய்கிறேன்.

போர் முடிந்தும் நாடு திரும்பாமலிருக்கும் மனோகரனைப் பற்றிச்

சிந்தித்தபடி உட்கார்ந்திருக்கிறாள் ராணி பத்மாவதி.

சூழ்ச்சியின் மறு உருவமான பௌத்தாயனன், தன் சுய உருவத்தை மறைத்துக் கொண்டு, சன்யாசியின் கோலத்தில்வருகிறான்.

பத் : வணக்கம்!

துற : வாழிய நலம் மகாராணி! முதலில் இருதயத்தை இரும்பாக்கிக் கொள்...

பத் : என்ன ?...

துற : கரும்பல்ல நான் கூறப் போகும் செய்தி! உம்... கடலில் துரும்பம்மா மனித வாழ்க்கை!

பத் : என்ன ஸ்வாமி; தொடர்பில்லாமல் பேசுகிறீர்கள்.

துற : தொடர்பற்றவன் தானே துறவி! உன் மகன் வெற்றியடைந்த சேதிகேட்டு எவ்வளவு மகிழ்ந்திருப்பாய்...?

பத் : ஆமாம் ஸ்வாமி!...

துற : சந்தோஷத்தை அணைத்துக் கொள்ளும் அதே உள்ளம், சங்கடத்தை ஏன் சந்திக்க மறுக்கிறது?

பத் : ஸ்வாமி என்ன நேர்ந்தது சொல்லுங்கள்!

துற : இதோ இந்தப் போர்வாள் சொல்லும்...

பத் : ஆ!..

துற : போய் விட்டான் உன் புதல்வன் புண்யலோகத்துக்கு!

பத் : ஆ... மனோகரா!...

பாண்டிய நாட்டிலிருந்து விரைந்தோடி வந்த மனோகரன் தோழன் ராஜப்ரியனுடன் அந்தப் புரத்துக்குள் நுழைகிறான். 'மனோகரா' என்ற தாயின் அலறலைக் கேட்ட அவன் 'அம்மா' என்றழைத்தபடி ஓடிவருகிறான்.

மனோ : வந்துவிட்டேனம்மா!

பத் : மனோகரா!

மனோ: ஏனம்மா இப்படிப் பார்க்கிறீர்கள்? என்ன நடந்தது...? யார் இந்த சாமியார் ?

பௌத்தாயனனின் கையிலுள்ள போர்வாளைப் பார்க்கிறான் மனோகரன்.

மனோ : ஆ.. என் போர்வாள்... காணமற் போனது எப்படி இங்கே வந்தது...?

பத் : மனோகரா! நீ என்னைப் பிரிந்து விட்டதாக இந்தப்பாவி சொன்னான்...

ராஜ : திருட்டுப் பயல்! வாளைத் திருடியதுமல்லாமல் வாலை வேறு நீட்டுகிறானே? தாடியைப் பார், தாடியை!

தாடியைப் பிடித்திழுக்க அது கையோடு வந்து விடுகிறது.

மனோ : பௌத்தாயனன்...!

ராஜ : சதியிலே புது அத்யாயம்—போர்வாளைத் திருடிவந்து காட்டினால் மகாராணி இறந்துவிடுவார்கள். சரியான சூழ்ச்சி...

மனோ : தேளின் கொடுக்கே!... யாருடைய திட்டமடா இது! சொல்!

பத் : மனோகரா, பாவம் அவனை விட்டுவிடு...

மனோ : விடக் கூடாதம்மா. ராஜப்ரியா இவனை சிறையிலே பூட்டி வை!

பௌத் : எல்லாவற்றுக்கும் வசந்தசேனைதான் காரணம்!

மனோ : வசந்தசேனை! இனியும் அவளை உயிரோடு விடக்கூடாது!

ரத்தம் கொதிக்க, உள்ளம் எரிமலையாக வசந்தசேனையை வெட்டிச் சாய்க்கும் வேகத்தில் உருவிய வாளுடன் விரைகிறான் மனோகரன்.

பத் : மனோகரா! நில்—எங்கே ஓடுகிறாய்?...

மனோ : அம்மா இன்னும் என்ன உங்கள் சபதத்தை நிறைவேற்றி விட்டபிறகு?...

பத் : சொல்லுகிறேன். முதலில் வாளை உறையில் போடு! மகாராஜாவுக்கோ வசந்தசேனைக்கோ—என் அனுமதியின்றி எந்த வீதமான



தீங்கும் செய்வதில்லையென்று ஆணையிடு! என்மேல் ஆணையிடு...

மனோ: அம்மா!

பத்: தாயின்மேல் ஆணையிடு!...

மனோ: அரசரை ஒன்றும் செய்வதில்லையம்மா.

பத்: கூடாது! வசந்தசேனைக்கும் சேர்த்துத்தான்!

மனோ: வசந்தசேனை வட்டமிடும் கழுகு! வாய் பிளந்து நிற்கும் ஓநாய்! நம்மை வளைத்துவிட்ட மலைப்பாம்பு! அவளுக்கு இரக்கம் .... முடியாது! கூடாது!

பத்: உன்னிஷ்டம்... ஊரார் நகைக்கட்டும், தாய் சொற் கேளாத் தனயனென்று! நாடு சிரிக்கட்டும் — அடங்காத மகனைப் பெற்ற அன்னையென்று!...

மனோ: அய்யோ அப்படியொன்றுமில்லையம்மா! இதோ ஆணையிட்டு விடுகிறேன்.

பத்மா: செல்வா!

மனதை இரும்பாக்கிக் கொண்டு, மாதாவின் ஆணையை நிறைவேற்றுகிறான் மனோகரன்.

காட்சி 3

பௌத்தாயனனின் நிலையைக் கேள்விப்பட்ட வசந்தசேனை அவனை மேலும் வாழவிட்டால் தனக்கு ஆபத்து என்று தெரிந்துகொண்டு நயவஞ்சக முறையில் கொன்றுவிடுகிறாள்.

வாகைசூடி வந்த வீரன் மனோகரனை சபையில் வரவேற்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

வசந்த சேனையை ராஜ விருதுகளுடன் சபா மண்டபத்துக்கு அழைத்து வருகிறார் மன்னர். சபையினர் இக்காட்சியைக் கண்டு மனம் புழுங்குகின்றனர். தன் அன்னையின் ஸ்தானத்தில் அணங்கின் வடிவில் வந்த பேய் வசந்த சேனையைக் கண்ட மனோகரனின் உள்ளம் உலைக்களமாகி விடுகிறது.

வச: புதல்வா, நினைவிருக்கிறதா? போரில் ஜெயித்த பிறகே வெற்றி மாலை அணிவேன் என்றாயே. இதோ என் கண்மணிக்கு நான் சூட்டும் வாகைமாலை.

மனோ: சீ! வெற்றிமாலை! உன் கையால......(வாளை உருவுகிறான்.)

சத்தியசீலர்: மனோகரா! தாயின் சொல் தட்டிவிடாதே...

ராஜ: ஆமாம்... மனோகரா!

ஆத்திரமடைந்த மனோகரன் ராஜப்ரியன் கன்னத்தில் அறைந்துவிட்டு அன்னையிடம் விரைகிறான்.

மனோ: அம்மா!

பத்: மனோகரா! என்ன நடந்தது?

மனோ: என்ன நடக்க வேண்டுமென்று எண்ணி என் கைகளைக் கட்டிப் போட்டீர்களோ அது நடந்தது. அம்மா! இப்படி பயங்கரமாக கட்டளை இடுவீர்கள் என்று முன்பே தெரிந்திருந்தால் முத்து விஜயனைக் கொன்று—படை வீரர் பலரின் உயிரைத் தந்து, அந்தப் பாதகி அமர்வதற்கு சிம்மாசனத்தைக் கொண்டு வந்திருக்க மாட்டேன். நீங்கள் அமர வேண்டிய சிம்மாசனத்தில் அவளா? அதற்காக ஒரு படையெடுப்பா?

பத் : படையெடுப்பால் வந்த பயன்தானே இந்தப்பைங்கிளி! (விஜயாவைக் காட்டுகிருள்) இதை நினைத்து அதை மறந்துவிடு மனோகரா! விஜயா! உன் கணவனை சாந்தப் படுத்து !

* * *

குகையில் சாகாத சஞ்சீவி கண்டு பிடிப்பதில் தீவிரமாக முனைந்திருக்கிருர் பெரியவர். அம் முயற்சியில் அவர் வெற்றி காணுமுன் அவரது உயிர் போய் விடுகிறது.

பெரி : இந்த அருப மருந்து தீர்வதற்குள் வெற்றி நிசசயம்.

கேச : அருப மருந்து குறைந்து விட்டதே. இன்னும் கொஞ்சம்.

பெரி : தேவையில்லை! இதோ இன்றைக்கே சாகாத சஞ்சிவி கண்டு பிடித்து விடுவேன்.

கேச : (வசந்தசேனையின் சிலையைக் காட்டி) வசந்தசேனை ! அவள் இருதயத்தை எடுத்துப் பிழிந்து இந்த சிலைக்கு சிகப்பு வர்ணம் பூச வேண்டும். அவள் கண்களை...

வெடி சப்தம் கேட்கிறது. பெரியவர் கீழே விழுகிருர். கேசரி வர்மன் பதறிப்போய் ஓடி வருகிருன்.

பெரி: கேசரிவர்மா, என் கடைசி வாழ்த்து! அவசரப்படாதே! உன் லட்சியத்திற்கு மனோகரனை துணையாக்கிக் கொள் ! நான் நான் ..

அவரது உயிர் உடலை விட்டுப் பிரிந்து விடுகிறது.

கேச : ஓய்வின்றி உழைத்தீர். உலகிற்கு ஒரு அதிசயத்தைச் சொல்ல! அருப மருந்து. அந்த முறையைக்கூட எனக்குக் காட்டவில்லையே ஸ்வாமி! புதுமையைக் கண்டுபிடித்தவர்கள் எல்லாம், மற்றவருக்கு வெளியிடாமலே மறைந்து விட்டார்கள். அந்த வழியில் நீங்களும் நடந்துவிட்டீர்கள். இந்த நாட்டுக்கே இப்படி ஒரு சாபமா ?...

* * *

நாடெங்கும் வசந்த விழா கொண்டாடப் படுகிறது. சோழ நாட்டு மக்கள் பெரும் மகிழ்ச்சியில் திளைத்திருக்கிருர்கள். மனோகரனும் விஜயாவும் விழாவில் பங்கெடுத்துக் கொள்கிருர்கள்.

விஜ : இந்த அன்பு மாறவே மாருதே!

மனோ : இது என்ன கேள்வி விஜயா !

விஜ : இல்லை! நீங்களும் மாமாவைப் போல ஒரு வசந்த சேனையின் மயக்கத்தில விழுந்து விட்டால்...

மனோ : வசந்த சேனை! அவள் பெயரையே என்னிடம் உச்சரிக்காதே! ..என் தாய் இருக்க வேண்டிய இடத்திலே அந்த நாய் ! தணலில விழுந்த புழுவாக அவளைத் தவிக்கவிட்டு என் தாயை கொலு மண்டபத்தில் அமர்த்தா விட்டால... நான் மனோகரனல்ல.

அவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருந்த மேடைக்கடியில் வசந்தன் ஒளிந்து கொண்டிருக்கிருன். விஜயா அவன் காலை மிதித்து விடுகிருள்.

வச : காலை மிதிச்சுட்டியே அண்ணி !

மனோ : ஏ, நீ இங்கேயா ஒளிந்து கொண்டிருக்கிருய் ?

வச : உம். பொம்பளைங்க எல்லாம் தண்ணியாலேயும், பூவாலேயும். தண்ணிப் பூவாலேயும் பூத்தண்ணியாலேயும். பூவாலேயும் அடிச்சா நீங்களுந்தான் ஒளியுவீங்க !

மனோ : தைர்யசாலி !

மனோகரனும் விஜயாவும் சிரிக்கிருர்கள்.

வ சே : சிரிங்க சிரிங்க

வசந்தனைத் தேடி அரசனுடன் அங்கு வருகிருள் சேன.

வ. சே : வசந்தா !...வசந்தா !

வச : நான் இங்கே இருக்கேம்மா! ஏம்மா ? அம்மா ! அண்ணனும் அண்ணியும் என்னைப் பார்த்து சிரிக்கிருங்க !

வ.சே : பாண்டியன் மகளை பாணிக்கிரகணம் செய்தது பற்றித்

தான் ஊர் உன் அண்ணனைப் பார்த்து சிரிக்கிறது. தகப்பனைக் கொன்றவனுக்கு தாரமாய் வாய்த்ததைப்பற்றித் தான் உலகமே உன் அண்ணியைப் பார்த்து சிரிக்கிறது. சிரிக்கிறார்களாம் சிரிப்பு...எல்லாம் சிரழித்து விடுகிறேன்...வாடா நீ!...

வசந் : அதெல்லாம் உன்னால் முடியாதம்மா!. உன்னை புழுமாதிரி தவிக்கவிடப் போவுது அண்ணன். ஜாக்கிரதை! இப்பத்தான் அண்ணி கிட்ட சொன்னுது. ஏன் அண்ணி!

வ. சே : உம்...வீராதி வீரர்களாலும் முடியாத காரியம் இந்த வேசி மகனால்தானா முடியப் போகிறது...?

மனோ : ஆ! என்ன சொன்னாய்? நஞ்சு கக்கிய அந்த நாவைத் துண்டாடுகிறேன் பார்!...

வாளை உருவியபடி வசந்தசேனையை நெருங்குகிறான் மனோகரன். அவனைத் தடுத்து நிறுத்துகிறார் அரசர்.

அர : மனோகரா! விடு.

மனோ : முடியாது! நீர் உம் மனைவியின் மானத்தைக் காப்பாற்றவிட்டாலும் நான் என் தாயாரின் மானத்தைக் காப்பாற்றியே தீருவேன்.

அர : மனோகரா ! விடு.

மனோ : முடியாது...உமக்கு வல்லமையிருந்தால அவளைக் காப்பாற்றும்...

சத்ய : மனோகரா!...

விஜ : அத்தான் ! அத்தைக்குச் சொன்ன வாக்குறுதி?

மனோ : சீ...

அர : வசந்தி !.. நீ வரம்பு மீறி விட்டாய்.

வ சே : ஸ்வாமி...

அர : சீ...பேசாதே !

உள்ளம் உடைந்த மனோகரன் தன் தாயிடம் கட்டளையை மாற்றிக் கொள்ளும்படி கெஞ்சுகிறான்.

மனோ : அம்மா ..அம்மா...அம்மா ...துள்ளிவரும் வேல், ஆவேசத்தை அள்ளிவரும் வாள், அவைகளை எல்லாம் தடுத்திருக்கிறேன். அவைகளை விடப் பெரியவளா என்னை நகையாடிய இந்தக் கள்ளி? ஆனால் அவளைத் தான் எதிர்க்க முடியாமல் ஓடி வந்திருக்கிறேன்.யாராலம்மா? தங்களால்—தங்கள் கட்டளையால்—சத்தியத்தால் !

பத் : மனோகரா! விஷயத்தைச் சொல்! என்ன நடந்தது ?

மனோ : தன்மானம் தரைமட்டமானது. அவமானச் சின்னம் ஆணவத்தால் ஆடியது! அம்மா! தங்கள் கட்டளையை உடனே மாற்றிக் கொள்ள வேண்டும்.

பத் : சத்தியம் செய்திருக்கிறாய் செல்வா !

மனோ : வீரன் கோழையாவதா? துடிக்கும் தோள்கள் துவண்டு போவதா? வேண்டாம் ..அந்த விபரீத சத்தியத்தை நான் காப்பாற்ற வேண்டாம்...

பத் : என்ன நடந்தது விஜயா...?

விஜ : அந்தப் பாதகி வசந்தசேனை...

விஜயாவின் மூலம் விழா சமயத்தில் நடந்த சம்பவத்தைக் கேட்ட பத்மாவதி துடிக்கிறாள்.

பத் : அப்படியா சொன்னாள்? அதை அரசர் கேட்டுக்கொண்டா நின்றார்? அப்போது சத்யசீலர் அங்கே இருந்தாரா விஜயா ?

விஜ : இருந்தார்.

பத் : மனோகரனைத்தான் தாயின் ஆணை தடுத்தது. சத்யசீலரை எது தடுத்தது...? அந்தக் கொடுமையை எதிர்த்துப் பேச முடியாமல் குரலிலே நடுக்கம் ஏற்பட்டதா? அல்லது நெஞ்சிலே கோழைத்தனம் சூடி கொண்டதா ? (தோழியிடம்) கூப்பிடடி சத்ய சீலரை...உடனே போ ..இப்போதே அழைத்துவா !

காட்சி 4

பத்மாவதி சத்யசீலரை அந்தப் புரத்திற்கு அழைத்து வரும்படி விடுத்த கட்டளையை தோழியின்

மூலம் அறிகிருள் வசந்தசேனை. தவிர இரவு நேரத்தில் ராணியின் அந்தப்புரத்திற்கு சத்யசீலர் வருவதைப்பற்றித் தவருகவும் அரசரிடம் தன் தோழி மூலம் திரித்துக் கூறிவிடுகிருள் வசந்தசேனை. விஷயத்தை நேரடியாக அறியும் ஆவலில் பத்மாவதியின் அந்தப்புரத்திற்கு விரைகிருர் மன்னர் புருஷோத்தமர். அங்கே ராணியும், சத்யசீலரும் 'வஸந்த விழா' சம்பவத்தைக் குறித்துப் பேசிக் கொண்டிருக்கிருர்கள்.

பத் : அமைச்சரே! மகாராஜாவையே கேளுங்கள், என்ன சொல்லுகிருரென்று!

சத் : மகாராஜா இதை யெல்லாம் கவனிக்கவே மாட்டார்—

பத் : மனேகரனை நினைத்தால் எனக்குப் பயமா யிருக்கிறது.

சத் : பயப்படத் தேவையில்லை. நான் பார்த்துக் கொள்கிறேன்.

வசந்தசேனையின் விஷமப் போதனை; அடியும் நுனியுமில்லாத சம்பாஷணைகள்; மன்னன் மனதிலே இவை பல விபரீதமான எண்ணங்களை எழுப்பி விடுகின்றன. பத்மாவதியின் நெறியில் தவறு கண்டு விடுகிறது அவரது மனம்.

வ. சே : மகாராஜா கவனிக்க மாட்டார். மனேகரனுக்கு பயப்படத் தேவையில்லை....

அர : களங்கம்....களங்கம்! என் பரம்பரையிலேயே இல்லாத களங்கம்! பாதகி!

வ. சே : ப்ரபு! அமைதியாக இருங்கள்...

அர : அமைதி! அவளுடைய சாவிலேதான் எனக்கு அமைதி!

வ. சே : இதைக் கேளுங்கள் மகாராஜா! மகாராணி....

அர : மகாராணி.... மறுபடியும் சொல்லாதே! மானமிழந்தவள். நாடோடி!..வேசி! வசந்தி! நீயே உத்திரவிடு! அவளைப் பாதாள சிறையில் போட வேண்டும்.

வ. சே : ராணியைச் சிறையில் போடுவதால் உங்கள் ஆத்திரம் அடங்கும். வசந்த விழாவில் தாயைக் குறை கூறினேன் என்று தாண்டி விழுந்தானே மனேகரன்! இப்போது என்ன சொல்கிருன்? மன்னிப்பு கேட்டுக்கொள்வானு என்னிடம்?

அர : கேட்கச் சொல்லுகிறேன். உன்னை எதிர்த்துப் பேசியதற்கு கொலுமண்டபத்திலேயே மன்னிப்பு கேட்கச் சொல்லுகிறேன். பத்மாவதிக்குச் சிறைச்சாலை! மனேகரன் வசந்த சேனையிடம் மன்னிப்பு கேட்க வேண்டும்!

ஆராய்ந்து அறியாத அரசனின் அவசர உத்தரவைக் கண்டு சிங்கமென சீறினுன் மனேகரன். தாய் அவன் சீற்றத்துக்குத் தடை போடுகிருள்.

மனே : மாதா சிறை செல்ல வேண்டும். மனேகரன் மன்னிப்பு கேட்க வேண்டும்!

ராஜ : அதுவும் கொலு மண்டபத்தில்; அந்த குப்பை மேட்டுக் கோட்டானிடம்!

மனே : ஆணையிடுவது தந்தை!

பத் : ஆமாம் கண்ணே! அதை மறந்துவிடாதே. உன்னைப் பெற்ற தந்தை.

ராஜ : தந்தை.. அஞ்சா நெஞ்சனை மகனைப் பெற்ருர்.. அருங் குணவதியை மனைவியாகப் பெற்ருர். அவர் பெற மறந்தது ஒன்றுண்டு தாயே! அறிவு! அறிவு! அதைத்தான் பெற மறந்தார்!

மனே : மறந்ததை நினைவூட்டு கிறேன.

பத் : உன்னுல் முடியாது என்ரு சொல்கிறேன்? தங்கமே! அவசரத்தில் அப்பா தவறி யிருக்கலாம்... எதற்கும் நீ போய் காரணம் கேள்!

மனே ; காரணம் கேட்பதா?

விஜ : அத்தே! வேண்டாம்... அவரை அனுப்பாதீர்கள்... வேண்டாம் அத்தே! அத்தான் நீங்கள் போக வேண்டாம்.

பத் : வீரமகனே போய்வா...

விஜ : வேண்டாம் அத்தே!

பத் : விஜயா!

மனே : போய் வருகிறேன. (பத்மாவதியைக் கைது செய்ய வந்திருக்கும் சிப்பாய்களை நோக்கி) ஜாக்ரதை! நான் திரும்பும் வரையில் நெருங்கக் கூடாது, என் அன்னையிடம்...

விஜ : பார்த்துக் கொள்... வருகிறேன.

கொதித்தெழுந்து வரும் மனேகரனின் கோபத்தை எடுத்துக்கூறி அவர் கட்டளையை மாற்றும்படி அரசரைக் கேட்கிருன் ராஜப்ரியன்.

ராஜ : புயல் வீசப் போகிறது மன்னவரே! புழுதி மேடாகப் போகிறது இந்த அரண்மனை!

அர : ராஜப்பிரியா!

ராஜ : அரசர் விடுத்த அவசர ஆணை கேட்டு அடலேறுபோல வந்து கொண்டிருக்கிருன் மனேகரன்!

அர : ஆ!

ராஜ : அமைதியாகத்தான் வருகிருன். ஆனல் எரிமலை குமுறுவதற்குமுன் எச்சரிக்கை செய்வதில்லை. மகாராணிக்கு சிறைச்சாலை. மனேகரன் மன்னிப்புக்கேட்கவேண்டும்!வேந்தே! வேங்கையிடம் வீஷமம் காட்டலாமா? வீரன் சினந்தால் விபரீதம் ஏற்படுமே! திரும்பப் பெறுங்கள் உத்திரவை! இல்லையேல் தீப்பொறி கிளம்பும்! தீப்பொறி கிளம்பும்!

சேனு நடுங்குகிருள்.

அர : பயப்படாதே! பார்க்கிறேன் அந்தத் தீப்பொறியை! உம். அவனை இரும்புச் சங்கிலியால் பிணைத்து அழைத்து வாருங்கள்.

* * *

சிப்பாய் : (மனேகரனிடம்) மன்னரின் ஆணை... இந்தச் சங்கிலியால் பிணைத்து தங்களை சபைக்கு அழைத்து வர வேண்டும்.

மனே : விலங்கா?

பத் : விலங்கா! விபரீதம்தான். (தோழியிடம்) எடு என் மேலங்கியை!

சத் : மனேகரா! நீ சபைக்குச் செல்வது காரணம் கேட்க. அதற்கு எப்படிச் சென்ருல் என்ன? விலங்கு கைகளுக்கே தவிர வாய்க்கு அல்லவே!

* * *

விலங்குகள் உடலை அணைக்க, காவலுக்காக வீரர்கள் சூழ, விழிகளிலே – உள்ளத்திலே எழுந்த கோபம் கனலாகத் தெறிக்க, உடலிலே உதிரம் கொதிக்க கொலுமண்டபத்திற்கு கோபாவேசத்துடன் வருகிருன் மனேகரன்.

அர : மனேகரா! உன்னை எதற்காக அழைத்திருக்கிறேன் தெரியுமா?

மனே : திருத்திக் கொள்ளுங்கள் தயவு செய்து. அழைத்து வரவில்லை. இழுத்துவரச் செய்திருக்கிறீர்கள்.

அர : என் கட்டளையைத் தெரிந்து கொண்டிருப்பாய் நீ.

மனே : கட்டளையா இது? கரைகாண முடியாத ஆசை! பொன்னும், மணியும், மின்னும் வைரமும் பூட்டி மகிழ்ந்து, கண்ணே! முத்தே! என்றெல்லாம் குலவிக் கொஞ்சி, தந்தத்தால் ஆன கட்டிலிலே, சந்தனத் தொட்டிலே, வீரனே என் விழி நிறைத்தவனே! தீரர் வழி வந்தவனே! என்று யாரைச் சீராட்டி பாராட்டினீர்களோ அவனை—அந்த மனேகரனை சங்கிலியால் பிணைத்து சபை நடுவே நிறுத்தி சந்தோஷம் கொண்டாட வேண்டும் என்ற தங்கள் தணியாத ஆசைக்குப் பெயர் கட்டளையா தந்தையே?

சபையோர் : த்ச...த்ச...

அர : நீ நீதியின் முன்னே நிற்கும் குற்றவாளி! தந்தையின் முன் தனயனல்ல இப்போது!

மனே : குற்றவாளி! ஹும் யாருக்கு என்ன தீங்கிழைத்தேன்? என்னுல் பாதிக்கப்பட்டவர்கள் யார்? அரசே! தந்தையின் முன் தனயனுக அல்ல, பிரஜைகளில் ஒருவனுகவே கேட்கிறேன். கொலை செய்தேனு? கொள்ளையடித்தேனு? நாட்டைக் கவிழ்க்கும் குள்ளநரி வேலைதான் செய்தேனு? குற்றம் என்ன செய்

தேன் கொற்றவனே, குற்றம் என்ன செய்தேன்? கூறமாட்டீர்களா? நீங்கள் கூறவேண்டாம். இதோ அறங்கூறும், அமைச்சர்கள் இருக்கிறார்கள். மறவர் குடிப்பிறந்த மா வீரர்கள் இருக்கிறார்கள்! மக்களின் பிரதிநிதிகள்—இந்த நாட்டின் குரல்கள் இருக்கிறார்கள். அவர்கள் கூறட்டும்.... என்ன குற்றம் செய்தேன்?

சபையோர்: குற்றத்தை மகாராஜா கூறத்தான் வேண்டும்.

அர: இது உங்களுக்கு சம்பந்தம் இல்லாதது.

மனோ: சம்பந்தம் இல்லாதது சபைக்கு வருவானேன்? குடும்ப தகராறு கொலு மண்டபத்துக்கு வரும் விசித்திரத்தை சரித்திரம் இன்றுதான் முதன் முதலாகச் சந்திக்கிறது மகாராஜா!

அர: போதும் நிறுத்து.... வசந்த விழாவில் நீ செய்த தவறுக்காக வசந்தசேனையிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்.

மனோ: அதற்குத்தான் காரணம் கேட்கிறேன்!

அர: எதிர்த்துப் பேசுபவர்களுக்கு ராஜ சபையில் என்ன தண்டனை தெரியுமா?

மனோ: முறைப்படி மணந்த ராணிக்கு சிறைத்தண்டனை அளித்துவிட்டு, மூலையில் கிடந்ததற்கு முடிசூட்டியவர்களுக்கு அளிக்கப்படும் தண்டனையைவிடக் குறைவானதுதான்.

அர: ஆத்திரத்தைக் கிளப்பாதே! நிறைவேற்று. அரசன் உத்திரவு.

மனோ: அரசன் உத்திரவென்ன? ஆண்டவனின் உத்திரவுக்கே காரணம் கேட்க ஆரம்பித்து விட்டார்கள், அரசே! சிறைச்சாலைக்குச் செல்ல வேண்டும் தாய் என்று கேள்விப் பட்டபின்னும் அடங்கிக் கிடப்பவன் ஆமை!

அர: தாய்க்கும் தந்தைக்கும் வேற்றுமை அறியா மூடனே! தந்தையின் ஆணைகேட்டு தாயாரின் தலையை வெட்டி எறிந்த பரசுராமனைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறாயா நீ?

மனோ: பரசுராமன்—அவதாரம். மனோகரன்—மனிதன்!

அர: என் உத்தரவை நிறைவேற்றப் போகிறாயா இல்லையா?

மனோ: நிறைவேற்றுகிறேன் — மன்னிப்பு கேட்க வேண்டும் மனோகரன்.

அர: ஆமாம்; அதுவும் அரை நொடியில்!

மனோ: அரை கொடியென்ன? அதற்குள்ளாகவே! ஆனால் யாரிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் தெரியுமா? கோமளவல்லி – கோமேதகச் சிலை—கூவும் குயில் – குதிக்கும் மான் என்றெல்லாம் உம்மால புகழப்படும் இந்தக் கோணல் புத்திக்காரியின் கொள்ளிக் கண்களை – கொடிய நாக்கை என் கூர்வாளுக்கு இரையாகத் தந்துவிட்டு, அதை எதிர்த்தால் உம்மையும், உமக்குப் பக்க துணை வந்தால் அந்தப் பட்டாளத்தையும் பிணமாக்கிவிட்டு, சூன்யக்காரிக்கு ஆலவட்டம் சுற்றியவர்களை சுடுகாட்டுக்கனுப்பி விட்டேன் என்று சுழலும் வாளுடன் சூழும் புகழுடன் என் அன்னையிடம் ஓடி மன்னிப்புக் கேட்க வேண்டும். நிறைவேற்றட்டுமா—அந்த உத்திரவை? தயார்தானா...? தயார்தானா?...

ஏன் நடுங்க வேண்டும்? ஹ..ஹ ஹ. புருஷோத்தமர் போரிலே புலி! வாள் எடுத்தால் வையம் கலங்கும். அவரா இப்படி பயப்படுகிறார்? பாவம், வேலின் கூர்மையை சோதித்த விரல்கள் வஞ்சகியின் விரலை அல்லவா ரசித்துக் கொண்டிருக்கின்றன! பாசறையைப் பார்வையிட்ட கண்கள் இந்தப் பாம்பாட்டத்தின் பாவத்தில் அல்லவா லயித்துக் கிடக்கின்றன! கோட்டை கொத்தளங்களை நினைத்துக் கிடந்த நெஞ்சம், இந்தக் குட்டிச்சுவரின் நிழலில் அல்லவா குளிர்ச்சி காணுகிறது!...

அர: பேசாதே!

மனோ: ஊர் பேசுகிறது, உலகம் பேசுகிறது!

அர: ஆமாம், நீ வேசி மகன் என்று

மனோ: ஆ!

அர : ஏன்? கேட்பதற்கு தித்திக்கிறதோ? ஆயிரம் தடவை சொல்வேன். நீ வேசி மகன்!

மனோ : ஹா...அம்மா! போதும் உம் பேச்சு, இதோ! அந்த வாயை சுக்கு நூறுகக் கிழிக்கிறேன்.

'வேசி மகன்' என்ற சொல் மனோகரனின் உள்ளத்திலே ஆயிரமாயிரம் வேதனைகளை எழுப்பி விடுகிறது. கற்பின் சிகரமான தன் தாயை 'வேசி' என்று கூறிய தன் தந்தையைத் தாக்க கொதித்தெழுகிருன் மனோகரன். தன்னைப் பிணைத்திருந்த சங்கிலிகளை அறுத்தெறிந்து அரசனைத் தாக்க ஓடுகிருன் அவன்.

சத். சில : மனோகரா!

மனோ : யாரும் குறுக்கிடாதீர்கள். மனோகரனின் ஆத்திரம் நல்லவர் கெட்டவர் என்றுகூடப் பார்க்காது. விடும் என்னை. எடும் கையை.

மனோ : புருஷோத்தமரே! புரட்டுக்காரியின் உருட்டும் விழியில் உலகத்தைக் காண்பவரே! மானமொன்றே நல்வாழ்வெனக் கொண்டு வாழ்ந்த மறவேந்தர் பரம்பரையில் மாசாக வந்தவரே! மயிலுக்கும் மந்திக்கும் வித்தியாசம தெரியாத மதிவாணரே! குளிர் நிலவைக் கொள்ளிக் கட்டையெனக் கூறிய குருடரே: என் தாய் அன்பின் பிறப்பிடம்—அறநெறியின் இருப்பிடம் கருணை வடிவம்—கற்பின் திருவுருவம் மாசற்ற மாணிக்கம்-மாற்றுக் குறையாத் தங்கம்-அவர்களை அவதூறு கூறிய உமது அங்கங்களை பிளந்தெறிவேன்! இந்த துரோகப் பேச்சுக்கு உம்மைத்தூண்டிவிட்ட தூர்த்தையின் உடலைத் துண்டாடுவேன். துணிவிருந்தால்-தோளிலே வலுவிருந்தால் எடுத்துக் கொள்ளும் உமது வாளை! தடுத்துக் கொள்ளும் உமது சாவை! தைரிய மில்லாவிட்டால் - தளுக்குக்காரியின் குலுக்குச் சிரிப்பிலே நீர் கோழையாகி விட்டிருந்தால் ஓடிவிடும் இதைவிட்டு! புறமுதுகு காட்டி ஓடும்! புறநானூற்றின் பெருமையை மூடவந்த புழுதிக்காற்றே! புறமுதுகு காட்டி ஓடும்! கலிங்கத்துப் பரணியை மறைக்க வந்த காரிருளே! கால் பிடரியில் இடிபட ஓடும். ஓடும்... ஓடும்! ஓலமிட்டு ஓடும்! ஓங்காரக் கூச்சலிட்டு ஓடும். ஏன் அவமானமா யிருக்கிறதா?

என் அன்னையைத் தூஷித்த சின்னஞ்சிறு புழுவே...ஏன் சிலையாக மாறி விட்டீர்? ஏ. ராஜவிக்ரகமே! பழிவாங்கும் பக்தன் பூஜைசெய்ய வந்திருக்கிருன்! அப்படியே நில்லும்! அசையாமல நில்லும்! இந்த சித்து வேலைக்காரியின் ரத்தத்தை கொண்டு உமக்கு அபிஷேகம் செய்விக்கிறேன். இந்த நாசக்காரியின் நரம்புகளால் உமக்கு மாலை சூட்டுகிறேன். முல்லைச் சிரிப்பென புகழ்வீரே. மோக போதையில்; அந்தப் பல்லையெடுத்து உம்மை அர்ச்சனை செய்கிறேன்! பாவி.. பார்! பத்தினியை இகழ்ந்த படுபாவி பார்! நீயும் உன் பஞ்சணை ராணியும் படும் பாட்டைப் பார்!

பத்மாவதி விரைந்தோடிவந்து அவனைத் தடுக்கிருள்.

மனோ : யார் நீ?.. (திகைத்தபடி) அம்மா! அம்மா! அம்மா! நீங்கள் எங்கே அம்மா வந்தீர்கள்? கயமைத்தனம் ஆட்சி புரியும் இந்த இடத்திலே! உங்கள் தூய்மையான காலடிகள் படக்கூடாதே, அம்மா!

பத் : மனோகரா!

மனோ : சற்று பொறுங்கள் தாயே! (அரசரைப் பார்த்து) எங்கே ஓடப் பார்க்கிறீர்கள்? நில்லுங்கள்!

பத் : மனோகரா! உன்னையும் மறந்துவிடாதே!

மனோ : அம்மா! சற்றுமுன் இந்தக் கொலு மண்டபத்திலே தங்களைப் பற்றி ஒலித்த கொடிய வார்த்தைகளை தாங்கள் கேட்டிருந்தால் இப்படிச் சொல்லமாட்டீர்கள். இருங்கள் வருகிறேன்.

பொங்கி வந்த கோபத்தை தணிய வைக்க முடியாத மனோகரன் தன்னையும் மறந்து தாயின் கட்டளையையும் மீறி வாளை உருவுகிருன். பத்மாவதி அதைத் தடுக்க, அவள் கை அறுபட்டுவிடுகிறது.

மனோ : அம்மா! பாதகமில்லை. உங்கள் புனிதப் பொற்கரத்திலிருந்து சொட்டும் ஒவ்வொரு துளி இரத்தத்

நிற்கும், இந்தப் பொல்லாதவர்கள் பதில் சொல்லியே ஆகவேண்டும்.

பத் : மனோகரா! என்னைத் தானே இகழ்ந்தார்கள்?

மனோ : விடுங்கள்! தாயை இகழ்ந்தவனை என் தாய் தடுத்தாலும் விடேன்.

பத் : மனோகரா! நீ என் மகன் என்பது உண்மையானால் சொல்வதைக் கேள்!

மனோ : அம்மா!....

பத் : முதலில் நீ வளர்ந்த இந்த வயிற்றிலே வாளைப் பாய்ச்சிவிட்டு பிறகு மகாராஜாவிடம் போ! தாயின் பிணத்தின் மேல் நின்று கொண்டு, தந்தையிடம் போரிடு. உம் இதோ உன் தாய்... கொல் என்னை. பிறகு உன் கொள்கைப்படி நட. ஏன் நிற்கிறாய்?

மனோ : அம்மா!

பத் : இனி நான் பேசிக் கொண்டிருக்கப் போவதில்லை. யாரை நானாக வந்து பார்க்கமாட்டேன் என்று சத்தியம் செய்திருந்தேனோ, அவரை உன்னால் பார்க்க நேர்ந்ததும், சபையில் இப்படி பெற்ற மகனிடம் பிச்சைக் கேட்பதும் சகிக்க முடியாத அவமானம்!

மனோ : இப்போது என்னம்மா செய்யச் சொல்கிறீர்கள்?

பத் : வாளை இப்படிக் கொடு!

மனோ : மன்னிப்பும் கேட்கட்டுமா?

பத் : மனோகரா! என் மாணிக்கமே! உன் மாதா கோழையின் குடும்பத்தில் பிறக்கவும் இல்லை. கோழையின் மனைவியாக ஆகவும் இல்லை. கோழை மகனைப் பெறவும் இல்லையடா கண்ணே! மன்னிப்புக் கேட்பதைவிட மரணமடைவதே மேல்.

அர : ஆமாம்: அதுதான் என் முடிவும். இந்தக் கொடியவனை உயிரோடுவிடக் கூடாது. மனோகரனுக்கு மரண தண்டனை!

மனோ : ஹா! அம்மா! இப்போதாவது அனுமதி கொடுங்களம்மா. இந்த நீசர்களைக் கசக்கி எறிந்து விடுகிறேன். இன்னுமா அம்மா பொறுமை?

பத் : இப்போதுதான் பொறுமை!

மனோ: அப்படியானால் நான் ...?

பத் : சாகத்தான் வேண்டும்!

மனோ : நானா சாக வேண்டும்? உங்கள் மகன் மனோகரனா சாக வேண்டும்?

பத் : ஆமாம்! யாருக்கும் கிடைக்க முடியாத பாக்கியம்; தந்தையே மகனைக் கொல்வது! அதற்கு தாயாரும் தலையசைப்பது, தங்கமே, இந்த தரணியிலே யாருக்கடா கிடைக்கும் இந்த ராஜபாக்கியம்! போ, மகனே சாகப்போ!

மனோ: அம்மா! நீங்களா இப்படிச் சொல்கிறீர்கள்?

பத்: ஆம்! உன்னை ஈன்ற தாய், நானே சொல்கிறேன்! இறந்துவிடு!

மனோ : அம்மா உங்களை பிரிந்தா?

பத் : நானே உன்னைப் பிரியத் துணிந்து விட்டேன்.

மனோ : அம்மா! அம்மா!

தாயின் திட்டமான முடிவை கேட்டு மாவீரன் மனோகரன் தன் நிலைதவறி, மயங்கி, கீழே விழுந்து பூமிதேவியைத் தழுவுகிறான்.

சபையோர் : இளவரசனை விடுதலை செய்யுங்கள். அநீதியான தீர்ப்பு! அநீதியான தீர்ப்பு!

பத் : அமைதியாயிருங்கள்! சத்தியசீலரே! மனோகரனைத் தூக்கிக் கொண்டு போக ஏற்பாடு செய்யுங்கள்—கொலைக்களத்திற்கு!

சபை: கூடாது! தீர்ப்பு அக்ரமம்...அக்ரமம்!

பத் : யாரும் போசாதீர்கள்! என் மகன்—அவனை என் இஷ்டப்படி நடத்துவேன்! மரண தண்டனை நிறைவேறிய பிறகு சவ அடக்கம்கூட இந்த சாம்ராஜ்யத்திற்கு வெளியில் தான் நடைபெற வேண்டும்!

கரைந்துருகும் தாய்மைப் பற்றைக் கல்லாக்கிக் கொண்டு பத்மா

வதி சத்யசீலருக்குக் கட்டளையிட்டு வேகமாக வெளியேற முயற்சிக்கிறாள். ஆனால் புத்திரபாசம் அவளை இழுக்கிறது. மனோகரனிடம் ஓடோடியும் வந்து அவன் கைகளை எடுத்து முத்தமிடுகிறாள்.

பத் : *செல்வா! இதுவே என் கடைசி முத்தமாயிருந்தால் அடுத்த படி நம் கல்லறைகள் சந்திக்கட்டும்!*

நெஞ்சிலே வேதனைசூழ வெளியேறுகிறாள் பத்மாவதி.

தன் வாழ்க்கையின் மணி விளக்கான மனோகரனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதறிந்த விஜயா, தண்டனையை மாற்றி தனக்கு மாங்கல்யப் பிச்சையளிக்கும்படி மன்னரிடம் மன்றாடுகிறாள்.

விஜ: *மாமா! மலர்ந்திருந்த ரோஜாவின் இதழ்களை ஏன் மாமா பிய்த்தெறிந்தீர்கள்? படர்ந்திருந்த மல்லிகையின் பச்சைக் கிளையை ஏன் மாமா வெட்டிவிட்டீர்கள்? தொடர்ந்து வந்தேன், தூய நற்காதலால். துன்ப அலைகளிலே ஏன் மாமா தள்ளி விட்டீர்கள்? சொல்லுங்கள் மாமா, இனி என் வாழ்வு பாலைவனந்தானா? என் இருதயம் இருட்டறைதானா? விமோசனமே கிடையாதா மாமா?...*

அர: *தீர்ந்துபோன விஷயம், திரும்பக் கிளறுவதில் பயனில்லை.*

விஜ : *எது மாமா தீர்ந்துபோன விஷயம்? தந்தை மகன் என்ற பந்தமா? கணவன் மனைவி என்ற சொந்தமா? தங்களைப் பொறுத்த வரையில் இரண்டுமே தீர்ந்து விட்டாலும், என் நிலையிலே யிருந்து நினைத்துப் பாருங்கள். நான் உங்கள் பகைவரின் மகள். என் உள்ளத்தைக் கவர்ந்த உத்தமர் உங்கள் மகன், எதிரியையும் இழுக்கக்கூடிய இதயம் படைத்தவரை இத்தகைய கொடுமைக்கு ஆளாக்குவது, அதுவும் தந்தையே செய்வது விந்தையல்லவா மாமா? பாண்டிய நாட்டு ராஜகுமாரி சோழ நாட்டு அரண்மனைக்கு ஏன் வந்தாள்? சோகப் பதுமையாக மாறவா....? சுகத்தை இழக்கவா? சொல்லுங்கள் மாமா.*

உள்ளத்திலே கள்ளமும், உடலிலே களங்கமும் கொண்ட நஞ்சினும் கொடிய வசந்தசேனை அன்ன நடைபோட்டு அங்கு வருகிறாள்.

வ. சே : *மாமியார் பாடம் அப்படியே மருமகளுக்கு!*

விஜ : *என் மாமாவோடு பேசுகிறேன்...*

வ. சே: *மாமா...உனக்குமகாராஜா மாமா! அந்த சந்தேகத்தில் வந்தது தாண்டி இவ்வளவு சங்கடமும்!*

விஜ : *சீ...பேசாதே, வேசி!...*

வ. சே : *என்ன சொன்னாய்? வேசி மகனுக்கு மனைவியாக வாய்ந்த நீ வேசி என்றா சொன்னாய்?*

விஜ : *ஆ...வசந்த சேனை......*

ஆத்திரம் தாளாத விஜயா தன் கட்டாரியை எடுத்து வசந்தசேனையின்மீது வீசுகிறாள். குறி தவறி விடுகிறது.

வ.சே : *கற்புக்கரசிகளை கட்டாரி மட்டுமில்லை, கடவுளே கூட நெருங்க முடியாது!*

அர : *வசந்தி!..... (விஜயாவிடம்) பாபி! என் ஆசைகளை அரை நொடியில் அழித்துவிடப் பார்த்தாயே*

வ.சே : *சதி நடக்கிறது மகாராஜா என்னை சாய்க்க!..*

அர : *பயப்படாதே! சதிக்கு முடிவு கட்டுகிறேன். யாரங்கே? பத்மாவதியுடன், விஜயாவையும்—பாதாள சிறையிலே அடையுங்கள் உம் நடக்கட்டும்...*

விஜ : *மாமா...*

மன்னனின் மரணதண்டனையை நிறைவேற்ற கீழே மயங்கி விழுந்து கிடந்த மனோகரனை, மந்திரி சத்யசீலரும், ராஜப்ரியனும்கொலைக்களத்திற்கு எடுத்துச் செல்கிறார்கள். இதை அறிந்த கேசரிவர்மன் அருபவடிவமாக வந்து, உடன் வந்த வீரர்களை அடித்து விரட்டி, மனோகரன், சத்யசீலர்-ராஜப்ரியன் ஆகியோரை தன் குகைக்கு அழைத்துச் செல்கிறான். குகையில் கிடந்த மனோகரன் சில நாழிகை நேரம்

கழிந்த பின் சுய உணர்வுக்கு வருகிறான்.

மனோ : முடியாதம்மா..முடியாது. (சுற்றிலும் பார்த்தபடி) என்ன இது? கொல்லப்பட்ட நான் உயிரோடு...

கேச : இளவரசே!

மனோ : யார் நீ .. நீ யார்... சத்ய சீலரே. யார் இவன்?

சத் : விவரம் பிறகு சொல்கிறேன்! அவன்தான் உன்னைக் காப்பாற்றியவன்.

மனோ : என்னைக் காப்பாற்றுவது ... மனோகரனைக் காப்பாற்றுவது.... மன்னன் ஆசை, மாதாவின் அன்புக் கட்டளை, இவைகளை உடன் நிறைவேற்றுங்கள் கொல்லுங்கள். . என்னைக் கொல்லுங்கள்! கொல்லுங்கள்! ராஜப்ரியா! என் அன்புத் தோழா ... என் அன்னையின் கட்டளையை நீயாவது நிறைவேற்று.

சத் : பொறு மனோகரா!

ராஜப் : மனோகரா! தாய்சொல் தவறக்கூடாது என்பதற்காக சிறைவாசத்திலிருக்கும் தாயை அனாதையாகச் சாகவிடுவதா?

மனோ : ஆ! அம்மா சிறையில்.....

ராஜப் : அம்மா மட்டுமல்ல. விஜயாகூட...

மனோ : ஆ...

ராஜப் : இப்போதாவது தெரிந்து கொள்...நீ வாழ வேண்டிய அவசியத்தை.

மனோகரன் மறைந்து விட்டான்; ராணியும், இளவரசியும் சிறையில் வாடித்தவிக்கின்றனர். நாட்டின் எதிர்கால வாழ்வைத் நிர்மானிக்க கண்ணியமும், பொறுப்பும் நிறைந்தவர் இல்லை. இந்தச் சந்தர்ப்பத்தை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள விரும்பிய வசந்தசேனை தன் அசட்டு மகன் வசந்தனை இளவரசனகப் பட்டம் சூட்டும்படி புருஷோத்தமரிடம் கேட்கிருள். அவளது பசப்பு வார்த்தைகளைக் கேட்டு புருஷோத்தமர், பெட்டிப் பாம்பாவதற்குப் பதில் புயலென வெகுண்டெழுகிருர்.

வ.சே: வந்துவிட்டீர்களா ஸ்வாமி. நான் சோலைப் பாதையில் காத்துக் கிடந்தேன். தாங்கள் மாளிகை வழியே வந்திருக்கிறீர்கள்.

அர : வழி எதுவானுல் என்ன...? உன் மொழியிலே. தேன் விழியிலே ஒளி மாறி விடுகிறதா வசந்தி!

வ.சே : எப்படி மாறும்? இந்திரனுக்காகப் படைக்கப்பட்ட அகல்யா—சந்திரனுக்காகப் படைக்கப்பட்ட தாரை—புருஷோத்தமருக்காகப் படைக்கப்பட்ட வசந்தா—

அர : வசந்தி! கண்ணே! உன்னேடு என்ன பேசுவதென்றே தெரியவில்லை!

வ.சே : ஊமையாகவே இருங்கள்! அந்தஒய்யாரத்தை நான் ரசிக்கிறேன்!

அர : இப்போது நீ எது கேட்டாலும் கொடுப்பேன்....

வச : வந்தது ஆபத்து! நான் கேட்பதாக நினைத்ததைக் கூட இப்போது கேட்கப் போவதில்லை.

அர : ஏன் வசந்தி?

வ.சே : சமயம் பார்த்துகேட்கிருள் சாகசக்காரி என்பீர்கள்! நானென்ன தசரதனை ஏமாற்றிய கைகேயியா? .. வேண்டாம் வேண்டாம்!

அர : என்ன வசந்தி. கேள் !

வ.சே : வேண்டாம் ஹூம் !

அர : சரி நான் போகிறேன்.

வ.சே : அய்யோ ! என் உயிர் போய்விடும். உட்காருங்கள்!

அர : பிறகு சொல்லேன்!

வ.சே : மனோகரன் நாட்டை விட்டுப் போய் விட்டான்!

அர : அதையேன் கிளறுகிருய்?

வ.சே : இல்லை, இளவரசன் இல்லாத நாடு எழிலில்லாத ஓவியம் போலத்தானே !

அர : அதற்கென்ன செய்வது ?

வ.சே : ஏன், நம் வசந்தனை இளவரசனுக்கி விட்டால்?

அர : பைத்யம் ! வசந்தனைவிட நீ பெரிய பைத்யம் !

வ.சே : ஸ்வாமி!

அர : அவனை இளவரசனுக்கக் கூடாது! பைத்யக்காரர்களுக்குத் தலைவனாக பட்டம் கட்ட வேண்டும். அவனுக்கு முடி சூட்டினால் முதலில் நீ பைத்யம். பிறகு நான் பைத்யம். அப்புறம் இந்த நாடே பைத்யம்...

வ.சே : போதும்... போதும்! வர்ணிக்காதீர்கள்: வசந்தசேனைக்கு இதுவும் வேண்டும். இன்னமும் வேண்டும்.

அர : உன்னை...அறிவாளி என்று நினைத்தேன் (கோபமாக) நீ ஒரு ஞான சூன்யம்!

வ.சே : (தந்திரமாக) முட்டாள் என்று மூவாயிரம் முறை சொல்லுங்கள், சநதோஷம்! ஆனால் உங்கள் வசந்தி வஞ்சகி என்று மாத்திரம் நினைக்காதீர்கள் ஸ்வாமி! ஒரு யோசனை தான் உங்களைக்கேட்டேன், என் மகன் மட்டு மல்லவே அவன். தங்கள் மகனுந்தான். தங்களைவிட எனக்கென்ன ஆசை வந்து இடக்கிறது! என் லட்சியம் தங்கள் சுகம்; சுயநலமல்ல...

அர : எனக்குத் தெரியாதா கண்ணே? ஆனால் வசந்தன்!

வ சே: அந்தப்பேச்சு வேண்டாம்! விபரீதப் பேச்சு! பைத்யத்துக்கு பட்டம் சூட்டினால் என்ன ஆகுமென்று எனக்கும் தெரியும். உங்களை கிண்டல் செய்தேன். நீங்கள் அதற்குள்...!

அர : வசந்தி !...

வ.சே : ப்ரபூ! நிலாமுற்றம் தேடுகிறது. வாருங்கள் (மனதிற்குள்) இனி புருஷோத்தமனை நம்பி புண்யமில்லை. புதிய திட்டம் போடவேண்டும் நன்றிகெட்ட இந்த ராஜனை காடு கடத்தவேண்டும். மனோகரனைக் கொல்ல வேண்டும். வசந்தனுக்கு பட்டம் கட்டவேண்டும். இதற்கெல்லாம் உதவி செய்யக் கூடியவன் என் பழைய காதலன் உக்ரசேனன் தான்.

காட்சி 5

புருஷோத்தமனை நம்பிப் பயனில்லை என்ற முடிவுக்கு வந்த வசந்தசேனை 'நாட்டைக் கைப்பற்றிக் கொண்டு, தன்னை ஏற்றுக் கொள்ளும்படி' உக்ரசேனனுக்கு ஓலையெழுதி அனுப்புகிறாள். கேசரிவர்மன் இவ்விஷயத்தை மனோகரன் முதலியோரிடம் தெரிவிக்கிறான்.

கேச : பழிகாரி. ஓலை தயாரித்து விட்டாள். அவள் காரியத்தை வெற்றிகரமாக்க கடைசி ஓலை! கொஞ்சம் ஏமாந்தால் அதுவே நமக்கு சாவோலை ஆகிவிடும்!

சத்ய: விஷயத்தைச் சொல் வர்மா!

கேச : வசந்தனுக்கு முடிசூட்ட முயன்றாள் வஞ்சகி! மன்னர் மறுத்தார். ஆகவே இந்த மாநிலத்தை வசப்படுத்தி மகனை அரசனாக்க மாற்றான் உக்ரசேனனுக்கு மடல் அனுப்பியிருக்கிறாள்.

மனோ : உக்ரசேனன்! இமயபுரி வேந்தன்!

ராஜப் : ஆம்! நம் சாம்ராஜ்யத்தில் நுழைய சமயம் பார்த்திருப்பவன்.

கேச : உக்ரசேனனிடமிருந்து பதில் கொண்டு வருபவன் இந்த வழியேதான் வந்தாக வேண்டும். வாருங்கள் பார்ப்போம்.

உக்ரசேனனிடமிருந்து வசந்தசேனைக்கு ஓலை கொண்டு வருபவனை வழியில் மடக்கி, அவனைக் கட்டிப் போட்டுவிட்டு, அவனிடமிருந்த ஓலையைக் கைப்பற்றுகிறார்கள் மனோகரன் கோஷ்டியினர்.

"அன்புள்ள வசந்தசேனைக்கு! அக்ஷயனை துணைக்கு வைத்துக் கொண்டு அரண்மனைக்குள் ஆகவேண்டியதைக் கவனி. படைகளும் நானும் புறப்படுகிறோம். புருஷோத்தமனை தொலைப்போம் புது வாழ்வு தொடங்குவோம். உக்ரசேனன்." என்று எழுதப்பட்டிருந்த ஓலையைப் படித்த மனோகரன் வசந்தசேனையின் மோசடியை எண்ணி மனம் துடிக்கிறான், அவளைத் துண்டாக்க.

ராஜ: துரோகம்,... விடக்கூடாது இதை!

மனோ: இப்போதே புறப்படுவோம். அந்த வக்ரபுத்திக்காரியை கூண்டோடு அழிக்கவேண்டும்.

கேச: அழித்து விட்டால் உங்கள் விரம் வெளிப்படும். அந்த வேசியின் வேஷம் வெளிப்படாது. இளவரசே! அரைநொடியில் சாகடிக்க அல்ல நான் இப்படியெல்லாம் இவ்வளவு காலம் ஏங்கித் திரிவது? என்றும் முடியும், எப்போதோ செய்திருப்பேன்.

மனோ: ஏன் செய்யவில்லை?

கேச: விவேகம் இளவரசே! விவேகம். அப்போது கொன்றிருந்தால் அந்தக்கள்ளிக்காக கண்ணை இழந்த அரசர் கண்ணீர் வடித்திருப்பார். அவள் சூழ்ச்சிகள் அம்பலமாயிருக்காது: சூதுகளை உலகம் தெரிந்து கொண்டிருக்க முடியாது. அவளை சாகடிப்பதில் இல்லை நம் சாமர்த்தியம். அவள் சதிகளை அம்பலப்படுத்துவதில்தான் இருக்கிறது.

மனோ: அதற்கு வழி?

கேச: முள்ளை முள் கொண்டு எடுப்பது போல சூழ்ச்சியை சூழ்ச்சியால் தான் வெலல வேணடும். சொல்லுகிறேன் வாருங்கள்.

மனோகரனே அக்ஷயனாக நடிப்பது என்று தீர்மானிக்கப்படுகிறது. போலி அக்ஷயன் வேஷத்தில் மனோகரன் அரண்மனை செல்கிருன்.

காவலாள்: மகாராஜா......பைத்யத்திற்கு வைத்தியம் பார்ப்பதில் மகா கெட்டிக்காரனும் ஒருவன்...

அர: அப்படியா! வசந்தியிடம் அவனை அழைத்துப் போ!

காவ: உத்திரவு!

மாறுவேடத்தில் மறைந்திருக்கும் மனோகரனை மாதர் குலத்தின் மாசான வேசி சேனுவிடம் அழைத்து வருகிருன் காவலாள்.

காவ: அம்மா! இவரை மகாராஜா தங்களிடம் அனுப்பினர். பெரிய வைத்தியராம்.

வ. சே: யார்?

போலி அக்ஷயன்: நான்- ஓர் வைத்தியன். என் பெயர் உக்ரசேனத் தூதன்.

வ. சே: நீளமான பெயர்.

மனோகரன் ஓலையை வசந்தியிடம் நீட்டுகிருன்.

வ. சே: உமது பெயர்?

போ. அ: அக்ஷயன்!

வ. சே: அரசனை சரியானபடி ஏமாற்றியிருக்கிறீர்.

போ. அ: ஆமாம் — என்னை யாரென்று யாராலும் கண்டு பிடிக்க முடியாது.

வச: சரி, நீர் வைத்தியரைப் போலவே நடித்துக் கொண்டிரும். மற்றவைகளை நான் கவனிக்கிறேன்.

போ. அ: நடிப்பதா பிரமாதம்? ஓ!...

சன்யாசிகள் கோலத்தில் அரண்மனைக்குள் பிரவேசிப்பதாக உக்ரசேனன் ஓலை மூலம் தெரிவிக்கிருன். விஷயத்தை சேனு போலி அக்ஷயனை மனோகரனிடம் மகிழ்ச்சி பொங்கக் கூறுகிருள்.

வ. சே: உக்ரசேனர் வந்துவிட்டாராம். சாது வேடத்தில் வருகிறுர்களாம், எல்லோரும்...

போ. அ.: சாதுக்கள் வேடம்?

வ. சே: என்ன அக்ஷயா?

போ. அ: ஒன்றுமில்லை. சாது வேஷத்தில்தானம்மா பல சாம்ராஜ்யங்களைக் கவிழ்த்திருக்கிருர்கள்..

வ. சே: ஓகோ! ஆமாம், அவர்களை எப்படி அரண்மனைக்குள் அழைப்பது?

போ. அ: ஆலோசிக்க வேண்டியதுதான்.

வ. சே: ஆலோசனை யென்ன? அரை நொடியில் ஏற்பாடு செய்கிறேன்.

உக்ரசேனன் கோஷ்டியாரின் வெளி வேஷத்தை உண்மையென

நம்பிய புருஷோத்தமன் அவர்களை ராஜோபசாரத்துடன் வரவேற்கிறான்.

அர: வரவேண்டும்... வரவேண்டும், பாக்யவானானேன்.

உக்: பகவானின் பேரருள் சித்திக்கட்டும்.. புருஷோத்தம ராஜன்... நாடகமே உலகம், நாளை நடப்பதை யாரறிவார்!......

அர: உண்மை உண்மை!......

உக்: இதுதான் ராணியோ?... ... மகாலக்ஷ்மி!.. கலிகால நளாயினி... ராணி! மனம்போல் வாழ்வாய்!... எண்ணங்கள் நிறைவேறும்......

உக்: வாழ்க! வாழ்க! ஏ ராஜன் நல்ல சமயத்தில்தான் நான் வந்திருக்கிறேன். உனக்கு ஒரு பெரிய ஆபத்து காத்திருக்கிறது.

அர: ஸ்வாமி!...

உக்: அந்த ஆபத்திலிருந்து தப்ப வேண்டுமானால் நீயும் உன் ராணியும் இந்த க்ஷணம் முதல் நாளை காலை வரையில் பிரிந்திருக்க வேண்டும்.

அர: அப்படியா?

உக்: இல்லாவிட்டால் மரணம் சம்பவிக்கும்.

வ. சே: மகாராஜாவைப் பிரிந்திருப்பதா?

அர: நாளை காலை வரையில்தானே வசந்தி!

உக்: உம்—பிரியுங்கள்....பிரியுங்கள்...

உக்: எல்லாம் கடவுள் செயல்! ராஜன்! இந்த சடலம் சிறிது களைப்பாற வேண்டும்.

அர: இதோ ஏற்பாடு செய்கிறேன்.

* * *

போலி வேஷத்தில் அந்நியப் படையினர் அரண்மனையில் நிறம்பி விட்டதை மனோகரன் சத்யசீலர் முதலியோரிடம் கூறுகிறான்.

மனோ: காஷாய உடை! அதற்குள்ளே கட்க மேந்திய படை, மடை திறந்தாற்போல் நுழைந்து விட்டார்கள். தடை எதுவுமின்றி தபோதனர் வேடத்தில்! இனி அரைக்கணம் தாமதித்தால் சோழ மண்டலம் அடிமையாகிவிடும். உடன் புறப்படுங்கள்.

ராஜப்.: ஆமாம், அதுதான் சரி! விடக்கூடாது. உடனே புறப்படுங்கள்.

சத்: பொறுங்கள்! மன வலிமை இருக்கிறது நமக்கு தாயகத்தை விடுவிக்க! அதே நேரத்தில் மாற்றாரின் படை வலிமையைப் பற்றியும் கொஞ்சம் யோசிக்கவேண்டும். இதோ ராஜப்பிரியனை உடனே பாண்டிய நாட்டுக்கு அனுப்புவோம். பாண்டிய நாட்டுப் படைகள் வந்து விட்டால் நமது போராட்டத்தைத் துவக்குவோம்!

கேச: நல்ல யோசனை! இளவரசே! நீங்கள் உடனே அரண்மனைக்குச் செல்லுங்கள். அப்போது தான் அன்னை, தந்தை, மனைவி ஆகியோருக்கு எந்தவித ஆபத்தும் அணுகாமல் கண்காணித்துக் கொள்ள முடியும். மற்றவைகளை நாங்கள் கவனித்துக் கொள்கிறோம்!

சத்: மனோகரா! நீ உடனே புறப்படு!

89679

தனியறையில் தன் எதிர்காலச் சிந்தனையிலிருக்கும் உக்ரசேனனைக் காணவருகிறாள் வசந்தசேனை.

உக்: யாரது? ஓ! ராணி வசந்தா தேவியா?

வ. சே: ஸ்வாமிகளுக்கு ஆண்டவன் நினைவோ?

உக்: ஆண்டவனைப் பற்றியல்ல. ஆண்டு கொண்டிருப்பவனைப் பற்றி. உட்கார், உல்லாசி!

வ. சே.: பழரசம் அருந்துங்களேன்.

உக்: முதலில் உன் பார்வை ரசம் அருந்துகிறேன் கண்ணே!

வ. சே: உங்களைப் பார்த்து எவ்வளவு நாட்களாகின்றன!

உக்: (கூந்தலைக் கோதியபடி)

ஆகா! முகிற்கூட்டம். (பல்லைக்காட்டி) முல்லைத் தோட்டம். (கன்னத்தைத் தடவி) ரோஜாக் கொல்லை!

வ. சே : ஸ்வாமி !

உக் : மொத்தத்தில் இன்பத்தின் எல்லை !

வ. சே : ஆமாம். திட்டங்கள் எல்லாம் எப்படி திட்டியிருக்கிறீர்கள் ?

உக் ; திவ்யமாக ! அரண்மனையின் முக்கிய பகுதிகள் எல்லாம் நமது ஆண்டி வேடந்தரித்த வீரர்கள் ஆக்ரமித்துக் கொண்டிருக்கிறார்கள். நாம் ஆணையிட்டால் போதும். போர் ! புருஷோத்தமன் கைது !

வ. சே : போர்கூடத் தேவைப்படாது. புருஷோத்தமனின் படை வீரர்களை என் கைக்குள் போட்டு வைத்திருக்கிறேன்.

உக் : சபாஷ் ! போர் வந்தால் தான் என்ன ? எதிரிப் படைகள் அரண்மனைக்குள் வந்த பிறகு யாரால்தான் எதிர்த்து ஜெயிக்க முடியும் ?

வ. சே : எதிரிப்படை அரண்மனைக்குள் மட்டுமா வந்திருக்கிறது?

உக் . அந்தப்புரத்திற்கே வந்து விட்டது என்கிறாயா? இது சண்டையிட அல்ல. சரணாகதி அடைய.

வ. சே : இரவு வருகிறேன்.

பாதாளச் சிறையில் பாண்டிய நாட்டு இளவரசி ஒரு ஆண் மகவைப் பெறுகிறாள்.

பத் : (குழந்தையிடம் குனிந்தபடி) என் செல்வத்துட் செல்வமே ! தாதியர் ஆயிரம் பேர் தமிழிசை பாட வைரமணித் தொட்டிலிலே உறங்க வேண்டிய நீ, இப்படி வைக்கோல் நிறம்பிய கொட்டிலிலே உருண்டு கொண்டிருப்பாய் என்று நினைக்கக்கூட இல்லையே !

விஜ : அத்தே !

பத் : கண்ணே ! பாண்டிய ராஜன் பெண்ணே ! நீ இப்படி கஷ்டப் படவா என் மருமகளாக வந்தாய்?

விஜ : நான் வந்த பிறகுதான் அத்தை உங்களுக்கும் உங்கள் அன்பு மகனுக்கும் இத்தனை வேதனைகள் ! எல்லாம் இந்தப் பாவி அடியெடுத்து வைத்த பிறகுதான்.

பத் : விஜயா ! இல்லையம்மா உன் மலரடி பட்டால் மண்ணும் பொன்னாகும். பொன் மாடத்தை தூசி மேடாக்கியவள் நீயல்ல. அவள் வாழ்கிறாள் ஆனந்தத்தோடு.

தன் கள்ளக் காதலனுடன் காதல் நாடகம் நடத்துகிறாள் சேனா. மறைவிலிருந்த மனோகரன் இதைப் பார்த்து விடுகிறான். வசந்தனையும் அழைத்துக் காட்டுகிறான்.

வ. சே : திராட்சை எப்படி இருக்கிறது?

உக் : உன் விரல்பட்ட இடமெல்லாம் இனிக்கிறது.

வ. சே : என் இதழின் சுவையை விட மட்டந்தானே இந்தக் கொய்யா?

உக் : அதில் என்ன பொய்யா?

வ. சே : அன்பா! எத்தனை நாட்களாகின்றன இந்த ஆனந்தம் அனுபவித்து ?

உக் : மீண்டும் உன்னைப் பார்க்கப் போகிறேனா என்று ஏங்கித் தவித்தேன் ஏந்திழையே !

சேனா : சுவாமி !

உக் : வசந்தி !

சேனா : பிரபோ ! இப்போது நாம் எங்கிருக்கிறோம் ?

உக் : சொர்க்க லோகத்துக்குப் போய்க் கொண்டிருக்கிறோம், கண்ணே.

வசந்தன் தன் தந்தையை அழைத்து அக்காட்சியைக் காண்பிக்கிறான்.

வச : அப்பா ! அப்பா !

அர : என்னடா இது ?

வச : அம்மாவும், சாமியாரும் சொர்க்கலோகத்துக்குப் போகிறாங்களாம் !

அர : ஆ.....!

வச : வாப்பா...வா...

உக் : இத்தனை விளக்குகள் ஏன் வசந்தி ?

சேனு : ஏன் ஒரு விளக்கு போதுமா ?

உக் : அதுகூடத் தேவை இல்லை. அணையா விளக்கு நீ அருகே இருக்கும்போது !

வசந்தசேனையின் உண்மை உருவத்தை – வஞ்சக வடிவத்தை கண்ணெதிரே கண்ட புருஷோத்தமன் அவளை வெட்டிச் சாய்க்கும் வேகத்தில் வாளுடன் விரைகிறார். மாறு வேஷத்தில் வந்த தன் காதலனை மறைத்து விட்டு அரசனிடம் வருகிறாள் சேனு.

வ. சே. : வேண்டாம் ! காரியம் கெட்டுவிடும். நான் பார்த்துக் கொள்ளுகிறேன். இப்படி வாருங்கள் (அறைக்குள் அனுப்பி கதவை மூடுகிறாள்; கதவு உடைபடுகிறது) யாரது ?

அர : யாரா ?...பாதகி !

வ. சே : ஆ ! பிரபு ! அடியாளைப் பார்க்கக் கூடாதே தாங்கள் ? ஆண்டவன் கட்டளையாயிற்றே !

அர : எதடி ஆண்டவன் கட்டளை? எது ? அர்த்த ராத்திரியிலே, ஹம்ஸ தூளிகா மஞ்சத்தில் அந்த ஆண்டிப் பயலோடு நீ ஆனந்தக் கேளிக்கை நடத்தவேண்டு மென்பதா ஆண்டவன் கட்டளை ?

வ.சே : ஆ ! கண்ணால் கண்டதும் பொய் ! காதால் கேட்டதும் பொய் ! திர விசாரிப்பதுதான் மெய். மஹாராஜா !

அர : சீ! நாடகமாடாதே! எங்கே அந்த ஆண்டி ?

வ.சே : அவர் தியான லோகத்தில் இருக்கிறார்

அர : உத்யான லோகத்திலா ? ஊர் கெடுக்கும் பதரே ! இனியும் நீ புருஷோத்தமனை ஏமாற்ற முடியாது.

தோழி : மஹாராஜா ! அமைதியாக ஆலோசனை செய்யுங்கள். அம்மாவை பழி கூறுகிறீர்கள். அவர்கள் உத்தமி !

அர : உத்தமிக்கு லக்ஷணம் உரைக்க வந்தவளே, உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்யும் துரோக வடிவமே ! உன்னால் வந்ததுதானடி இவ்வளவும். உயிர்விடப் போகிறாள்; உடனே வந்து காப்பாற்றுங்கள் என்று அலறினாய் ! உத்தமர் சத்திய சீலருக்கும், பத்தினி பத்மாவதிக்கும் களங்கம் கற்பித்தாய். அப்போதெல்லாம் தெரியாதடி நீ இந்தத் திருடியின் கன்னக்கோலென்று !

தோழி : மகாராஜா !

அர : உண்மையைச் சொல், நீயும் இந்த நாசக்காரியும் என்னை ஏமாற்றி வாழ்ந்தது உண்மைதானே ? சொல்லடி ! சொல் !

வ.சே : அவளை ஒன்றும் செய்யாதீர்கள். எல்லாம் நானே சொல்லுகிறேன். கணவனுக்கு விஷம் கொடுத்துக் கொன்றேன். களங்கமற்ற பத்மாவதி கற்பிழந்தாள் என்று கதை கட்டினேன்.

அர : ஆ !

வ.சே : என்னடா ! உண்மையெல்லாம் சொல்லுகிறாளே என்று யோசிக்கிறீரா? இதையெல்லாம சொல்லுவது உம்மிடம் மன்னிப்பு பெற அல்ல. இனி உம்மால் என்னை ஒன்றும் செய்யமுடியாது என்ற மனோ தைரியத்தில் !

அர : மோசக்காரி !

வ.சே: மோசக்காரி! நானா மோசக்காரி? பல ஆண்டுகளாக என்னை பள்ளியறைப் பதுமையாக மாத்திரம் வைத்துக் கொண்டு என் பாலகனுக்கு பட்டாபிஷேகம் செய்ய வேண்டும என்ற என் ஒரே தணியாத ஆசையைக்கூட தரைமட்டமாக ஆக்கி விட்ட நீரல்லவா மோசக்காரர்?

அர : உன் பாலகனுக்கு பட்டாபிஷேகம், மறந்துவிடு அதை! இந்த பூமியை புருஷோத்தமன் சந்ததியிடமிருந்து யாராலும் பறிக்க முடியாது.

வ.சே : கனவு காணாதீர்! வாழ்ந்துப் பத்திரம் தயார் செய்து வையும்–

வசந்தனின் மகுடாபிஷேகத்திற்கு! கேசரிவர்மனின் புதல்வன் வசந்தனின் மகுடாபிஷேகத்திற்கு—

அர: நிறுத்தடி! நிறுத்து வேசி!

வ.சே: பாவம், இப்போதுதான் தெரிந்ததோ?

அர: பாவி! பரத்தை உன்னை உயிரோடு வைத்திருந்தால் உளறிக் கொண்டே இருப்பாய். யாரங்கே? ஓடி வாருங்கள்! இவளைப் பிடியுங்கள்.

சேனனின் கைப்பொம்மைகளான அச்சேவகர்கள் சிலையென நிற்கின்றனர். அதே சமயம் போலி வேஷத்திலிருக்கும் மனோகரன் அங்கு வருகிறான்.

வ.சே: நடக்காது, அஸ்தமித்து விட்டது உமது அதிகாரம். இவர்கள் என் வீரர்கள்! அக்ஷயா, இவனைக் கைது செய்!

அர: ஆ என்னையா கைது செய்யச் சொல்லுகிறாய்?

வ.சே: ஆம்; உன்னைத்தான் கைது செய்யச் சொல்லுகிறேன். அதுவும் இந்த கடைசி ராஜ உடையுடன்! அக்ஷயா! ஏன் நிற்கிறாய் அக்ஷயா? உம்...நடக்கட்டும்...

தன் தந்தையை, தன் தாயை வேசி என்றழைத்த தாசி வசந்தசேனையின் கட்டளைக்காகச் சிறைப்படுத்துவதா? வெந்த புண்ணிலே வேலைப் பாய்ச்சுவதுபோன்ற நிலையில், உள்ளத்தில் வேதனை சூழ வாடிய முகத்துடன் நிற்கிறான் மனோகரன். அவனால் சேனனின் கட்டளையை அப்போதைக்கு மீற முடிவதில்லை. தந்தையைக் கைதாக்கிப் பாதாளச் சிறையில் தள்ளுகிறான். மன்னன் மனம் புழுங்குகிறான்.

மனோ: சிரமசைத்தால் சிற்றரசர்கள் கப்பமுடன் வணங்குவர்; சேனைத் தளபதிகள் சீறி எழுவர். அந்த செங்கோல் சிங்கத்தின் ராஜரீகம் இன்று சிறைக்கம்பிகளுக்குள் அடங்கி விட்டது.

அர: அட கோழைகளே! ராஜ விசுவாசமுள்ள வீரன் ஒருவன்கூட இங்கே கிடையாதா?

மனோ: இருக்கிறார்கள் அத்தனை பேரும் சிறைச்சாலையில்; ரத்தச் செலவே இல்லாமல்கத்தி முழக்கம் கேட்காமல் வெற்றி முரசு கொட்டியிருக்கிறார் எங்கள் வேநதர்.

அர: வேந்தன்! வேல் பிடிக்கத் தெரியாமல், கமண்டலமேந்தி களம் புகுந்த கபோதிக்குப் பெயர் வேந்தன்!

மனோ: அப்படியல்ல! உக்ரசேனன் புத்திசாலி! கட்டிலறையிலே இருக்கும் புருஷோத்தமரை எதிர்க்க, கணைகளோ, கேடயங்களோ தேவைப் படாதென தெரிந்திருக்கிறார். ஆகவே காவி, கமண்டலங்களே போதுமெனத் தீர்மானித்திருக்கிறார்.

அர: போதுமடா நிறுத்து! வேசி வீசிய வலையிலே விழுந்தவிட்ட காரணத்தால் என் வீரம் விலைபோய்விடவில்லை!

மனோ: யார் வேசி? வசந்தசேனை பத்தினி! பத்தரை மாற்றுத் தங்கம்.

அர: இல்லை. என் பத்தரை மாற்றுத் தங்கத்தைத்தான் பாதாளச் சிறையிலே போட்டேனே பாவி! பத்மாவதி! நீதான் பத்தரை மாற்றுத் தங்கம். உன்னைப் பழிகூறிய பாதகனுக்கு சரியான பரிசு கிடைத்து விட்டது, பத்மாவதி!

மனோ: வருந்திப் பயனில்லை. நாளை காலையிலே வசந்தனுக்குப் பட்டாபிஷேகம்.

அர: வசந்தன்! அந்த வஞ்சகியின் மகன் — வக்ர மூளைக்காரன். வளமார் எமது பூமியின் வருங்காலக் காவலன்! ஐயகோ! மனோகரா! ஆளப் பிறந்த என் செல்வமே! உன்னை சாகத்துரத்திய சண்டாளனுக்கு சரியான தண்டனை கிடைத்து விட்டது. மனோகரா! உனக்கும் உன் மாதாவுக்கும் கண்மணி விஜயாவுக்கும் எத்தனை இடையூறுகள் செய்தேன! அதற்கெல்லாம் யாரிடம் மன்னிப்பு கேட்பேன்? நீ எங்கிருக்கிறாய் மனோகரா! ஆயிரம் குற்றங்கள் செய்திருந்தாலும் தந்தைக்கு ஆபத்து என்றால் தலைகொடுக்க ஓடிவருவாயே! உன்னிடம் யார் இந்தச் செய்தியைச் சொல்வார்கள் மனோகரா!

மனோகரா! நீ எங்கிருக்கிறாய் மனோகரா?

காட்சி 6

விஜயாளுக்கு குழந்தை பிறந்திருப்பதை மனோகரனிடம் தெரிவிக்கிறாள் சேனு. சிறையிலே பிறந்த அச்சிசுவைப் பலி வாங்கவேண்டும் என்று மனோகரனுக்குக் கட்டளையிடுகிறாள் சேனு.

வ. சே: அக்ஷயா! பாதாளச் சிறையில் கிடக்கும் விஜயா குழந்தை பெற்றிருக்கிறாளாம்.

போ. அ: ஆ!

வ. சே: என்ன அக்ஷயா?

போ. அ: ஒன்றுமில்லை... ஒன்றுமில்லை. அழியப்போகும் நேரத்தில் அரும்பு முளைத்திருக்கிறது!

வ. சே: ஆமாம், அதைத்தான் கிள்ளி எறிய வேண்டும் நீ!

போ. அ: ஆ! என்ன, நானா?

வ. சே: உன்னைவிட யார் இருக்கிறார்கள் – இந்தக் காரியத்தைச் செய்ய! இந்தா! இப்பொழுதே போ!

மோசக்காரி தன் முத்திரைமோதிரத்தை அவனிடம் கொடுக்கிறாள்.

போ. அ: (மனதிற்குள்) என் செல்வத்தை நான் கொல்ல வேண்டும். இல்லை.. இவளை...

வாளை உருவுகிறான்.

மனக்குரல்: மனோகரா நில்! ஆத்திரப்படாதே. அவசரத்திற்கு அடிமையாகாதே! அரண்மனை முழுதும் எதிரிகள். அன்னையோ சிறையில் –தந்தையோ தவிக்கிறார். வாள் நீட்டிப் பாய்கிறாயே...உன் வாடாமலர்களை யார் காப்பாற்றுவது?

சிறைச்சாலைக்குச் சென்று, விஜயாவையும் பத்மாவதியையும் தந்திரமாக வெளியேற்றி விட வேண்டும் என்ற முடிவோடு அங்கு விரைகிறான் மனோகரன்.

போ. அ: அம்மா!

பத்: நீ யார்?

போ. அ: மனோகரன் என்னை அனுப்பினான்!

பத்: மனோகரன்...என் கண்மணி சுகமாக இருக்கிறானா?

விஜ: அத்தே! அவர் எங்கிருக்கிறாராம்?

போ. அ: சதா உங்கள் இருதயத்திலே இருக்கும் அவர் வேறு எங்கு இருப்பார்?

பத்: யாரப்பா நீ?

போ. அ: அதைப் பிறகு சொல்லுகிறேன். இப்போது நீங்கள் இருவரும் இதைவிட்டு தப்பிவிட வேண்டும்.

பத்: என்ன?

போ. அ: ஆமாம்! மனோகரனின் ரகசிய ஏற்பாடு. இதோ முத்திரை மோதிரம்! பயமின்றி யாருடைய தடையுமின்றி வெளியேறலாம். புறப்படுங்கள்.

பத்: தந்திரமாகத் தப்பிவிடுவது கூடாது. முடியாது. மகாராஜாவின் உத்திரவை மீற முடியாது. மனோகரனிடம் சொல்லிவிடு.

விஜ: அத்தே!

பத்: தம்பி, மனோகரனிடம் சொல் எனக்கு ஒரு செல்வப்பேரன் பிறந்திருக்கிறான், சிறைச்சாலையில் என்று.

போ. அ: இந்தப் பேரனுக்கு வரும் பேராபத்தை நீக்கத்தான் நீங்கள் வெளியேற வேண்டும் என்கிறேன்.

பத்: அரசன் கட்டளையை அரசியே மீறுவதா? முறையல்ல.

போ. அ: அப்படியானால்... ராஜகுமாரி! அந்தக் குழந்தையையாவது கொடுங்கள். நான் கொண்டுபோய் விடுகிறேன்.

விஜ: ஆ! குழந்தையா?

போ. அ: குழந்தையின் உயிரைக் காப்பாற்ற வேண்டுமானால்...?

விஜ: அத்தே இவனை நம்பாதீர்கள்! குழந்தையைக் கொல்லுவதற்கு ஏதோ சூழ்ச்சி நடக்கிறது.

போ. அ: இல்லை! இல்லை!...

விஜ: முடியாது முடியாது... நீ போய்விடு.

குகையில் மனேகரன் முதலியோரால் கட்டிப் போடப்பட்ட அக்ஷயன் தன் கட்டுகளை அறுத்துக் கொண்டு உக்கிரசேனனிடம் வருகிருன்.

சிப்பாய்: மகாராஜா! அக்ஷயன் வந்திருக்கிருர். பார்க்க வேண்டுமாம்.

வ. சே: வந்துவிட்டாஞ? இங்கே வரச்சொல். வெற்றிச் செய்தியோடு வந்திருப்பான். விஜயாவின் குழந்தையைக் கொன்றுவிட்டு வந்திருப்பான். அவனுக்காக இந்தப் பரிசு. உங்கள் தளபதி மிகவும் தந்திரசாலி.

உக்: அதில் சந்தேக மென்ன? ஓ. வா அக்ஷயா வா! என்ன அக்ஷயா?

வ. சே: யார் இவஞ அக்ஷயன்?

உக்: ஆமாம்.

வ. சே: ஆ! இல்லை.

அக்ஷ: நான் தான் உண்மையான அக்ஷயன். உங்களை இதுவரை ஏமாற்றியது போலி அக்ஷயன் அம்மணி! ஆமாம்.. மகாராஜா! என்னைக் கட்டிப் போட்டார்கள். இப்போது தான் தப்பி வந்தேன்.

உக்: கட்டிப் போட்டார்களா? யார்?

அக்ஷ: மனேகரன்!

வ. சே; ஆ! மனேகரன்! அப்படியாஞல் இங்கு இருக்கிற அக்ஷயன்?

அக்ஷ: மனேகரன்!

உக்: எங்கே அவன் இருக்கிருன்?

வ. சே: சிறைச்சாலைக்குத் தான் போயிருக்கிருன்.

உக்: அவனை விடக்கூடாது!

உக்ரசேனனுடன் சிறைச்சாலைக்கு விரைகிருள் சேனு. வஞ்சக வேஷதாரிகளால் வீரத்தின் உருவமான மனேகரன் அங்கே சிறைப்படுத்தப்படுகிருன்.

வ. சே: ஆ!

பத்: மனேகரா!..

மனே: நாசமாகி விட்டது! எல்லாம் நாசமாகிவிட்டதம்மா!

வ. சே: நாசமா! அதற்கும் நாள் குறித்திருக்கிறேன் மனேகரா! அந்த மகத்தான சம்பவம் நாளைக் காலையில், ராஜமாளிகையில்! உன் குழந்தைக்கு மரணுபிஷேகம்!

விஜ: அத்தே! அத்தே!

பத்: விஜயா!

மனே: அம்மா, அப்பா சிறையிலே பூட்டப்பட்டு விட்டார். தங்கள் ஆணையை மீற முடியாத நான் இந்தப் பாதகியின் உத்திரவுகளுக்குப் பணிந்தேன். இந்தப் பாவியின் கரங்களால் பாதாளச் சிறையில் பூட்டினேன்.

வ. சே: இழுத்துச் செல்லுங்கள்!

மனே: அம்மா உண்மையை உணர்ந்துகொண்ட தந்தை உங்களையும் என்னையும் காணத் துடிக்கிருர். இறந்துபோன கொடுமைகளை எண்ணி எண்ணிக் கண்ணீர் வடிக்கிருர். கலங்கித் தவிக்கிருர். கலங்கித் தவிக்கிருர் அம்மா! அம்மா! அம்மா!

பத்: மகாராஜா உண்மையை உணர்ந்து கொண்டார்! என் மகுடபதி உண்மையை உணர்ந்து கொண்டார். உண்மையை உணர்ந்து கொண்டார்!

விஜ: அத்தே! என்ன அத்தே!

பத்: இருள் நீங்கி விட்டது. இன்பம் உதயமாகிறது!

விஜ: இன்பம்! நமக்கா? இந்த நிலையிலா?

பத்: மகாராஜா உணர்ந்து விட்டார்! என் மகுடபதி உண்மையை உணர்ந்து விட்டார்.

மனேகரனை மாபெரும் தூண் ஒன்றில் சங்கிலியால் பிணைத்து சவுக்கால் அடிக்கிருன் உக்கிரசேனன். அவனெதிரிலேயே அவனது குழந்தையும் கொல்லப்பட வேண்டும் என்று உத்தரவிடுகிருள் சேனு.

வ. சே : மனோகரா! உன் உடலைத் தான் எங்களால கட்டிப்போட முடிந்தது. உயிரைக் கட்ட முடியவில்லை. அது வெகு சீக்கிரத்தில விடுதலை பெற்று வேறு உலகத்திற்கு போய் விடும்!

மனோ : அம்மா!

உக்ர : ஹூம் ஐயோ பாவம்! இந்த மழலைக் குழந்தை மாதாவை அழைக்கிறது.

மனோ : அம்மா!

உக்ர : பரிதாபத்துக்குரியவனே! வாய் வலிக்க தாயை ஏன் அழைக்கிறாய்? கொஞ்சம் காத்திரு! உன் பாட்டி இருக்கும் பரலோகத்திற்கே உன்னை அனுப்பி வைக்கிறேன்.

வ. சே : வேண்டாம். முதலில் குழந்தை! பிறகு மனோகரன்! அவன கண்ணுக்கு நேராகவே அவன் கண் மணியைக் கொல்லவேண்டும். அக்ஷயா! போ! குழந்தையைக் கொண்டுவா!

சிறையிலிருக்கும் மனோகரனின் குழந்தையைக் கொண்டு செல்ல வருகிறான் ஒரு காவலாள்.

காவ : குழந்தையைக் கொண்டு வரும்படி உத்திரவு.

விஜ : ஆ! அத்தே!

காவ : உம் கொடுங்கள்!

பத் : இந்த சின்னஞ் சிறு சிசு என்னப்பா குற்றஞ் செய்தது? ஒரு குற்றமும் செய்யவில்லையே இந்தக் குழந்தை! கொடியவர் உலவும் உலகில ஜனித்ததைத் தவிர வேறொரு குற்றமும் செய்யவில்லையே!

காவ: அதெல்லாம் எங்களுக்குத் தெரியாது. மகாராணி உத்திரவு!

விஜ : யாரடா மகாராணி? போ வெளியே...என் குழந்தையைக் கேட்க நீங்கள் யார்? அந்தப் பாதகியிடம் சொல்—பாண்டிய நாட்டு ராஜகுமாரிதான் பெற்ற பைங்கொடியைத் தர மறுக்கிறாள் என்று. துணிவிருந்தால் நேருக்கு நேர் போரிட்டுப் பெற்றுக் கொள்ளச் சொல்!

பத்: விஜயா, பொறுமையாய் இரு!

விஜ : அத்தே! என் குழந்தையைக் கொடுத்துவிடச் சொலலுகிறீர்களா அத்தே, அந்தக் கொலைகாரியிடம். குஞ்சுகளைக் கொல்ல வட்டமிடும்பருந்தைக்கூடகோழிகள்எதிர்த்துப் போராடுமே! அத்தே! அவைகளைவிடத் தாய்மை உணர்ச்சி அற்றவளா நான்?·என்னைக்கொன்றுவிடச் சொல்லுங்கள்! என் உயிர் போன பிறகு என் ஜீவ ஓவியத்தை எடுத்துக் கொண்டு போகட்டும.

காவலாள் குழந்தையைப் பலாத்காரமாகப் பறித்துச் செல்கிறான்.

பத்மாவதி அலறியபடி அவர்களைப் பின் தொடருகிறாள்.

காட்சி 7

மனோகரனின் மைந்தனை வாங்கிக் கொண்ட உக்ரசேனன் மனோகரனிடம் வருகிறான்.

உக் : ஆகா! இதுபோன்ற ஒரு பலி கொடுத்த பிறகு வசந்தனின் பட்டாபிஷேகம் நடைபெறுவது சாஸ்திரப்படி, சாலச் சிறந்த காரியமாகும!

வ. சே : ஆமாம். அந்த வாய்ப்பு நமக்கு வலுவிலே கிடைத்திருக்கிறது. வசந்தன் அதிர்ஷ்டக்காரன்.

உக் : சோழ சாம்ராஜ்யத்தின் இளந்தென்றல்! பாவம் பச்சிளங் குழந்தை. அப்பன் செய்த பாவத்திற்காக இந்த அரும்பு கசங்கப் போகிறது. மனோகரா! உன் அழகான குழந்தையின் திருமுகத்தை ஒரு முறை பார்த்துக்கொள். நீ அடக்கி வைத்திருக்கும் ஆவலையெல்லாம் உதட்டிலே தேக்கி உன் குழந்தையின் இளங் கன்னத்திலே கடைசியாக ஒரு முத்தம் கொடு.

குழந்தையை மனோகரனிடம் நீட்டுகிறான், அவன் முத்தமிட வருகையில் பின்னுக்கிழுத்து ஏமாற்றுகிறான்.

உக் : உம் கண்ணீரால் குளிப்பாட்டு உன் பிள்ளைக் கனியமுதை!

உக் : உம் சிரிக்கிறாய்—நன்றாகச் சிரி. அழுதுகொண்டு பிறந்த நீ, சிரித்துக்கொண்டு சாகிறாய். பாண்டிய ரத்தமும் சோழ ரத்தமும் அல்.

லவா உன் உடம்பில் பாய்ந்து ஓடு கிறது! அதனால் மகிழ்ச்சியோடுதான் மரணத்தின் தொட்டிலில் தூங்கு வாய்!

வ.சே: சீக்கிரம்! (உக்ரசேனன் குழந்தையை வெட்ட வாளை உருவு கிறான். பொறுமையின் பிறப்பிட மான பத்மாவதி, ஓடி வருகிறாள் கதறிக் கொண்டு.)

பத்: சேனா! கொலை வாளை முத லில் என் மீது வீசுங்கள்!

வ. சே: அதுதான் முடியாது! மரணதேவதையின் கொடியவாயிலே இந்தக் குழந்தை விழுவதை நீ கண் குளிரப் பார்க்க வேண்டும். இதற்குப் பிறகுதான் சோழ பரம்பரை சுக்கு நூறாகத் தெறித்துத் தூள் தூளாக ஆவதை நான் பார்த்துப் பரவச மடையப் போகிறேன்.

பத்: நிறுத்து வசந்தி, நிறுத்து! பல ஆண்டு காலம் என் பர்த்தாவை உன்னுடையவராக்கிக் கொண்டு என் வாழ்வை நிலவில்லா வானமாக் கினாய்: பொறுத்துக் கொண்டேன். சபா மண்டபத்திலே சக்ரவர்த்திக் குப் பக்கத்திலே சாம்ராஜ்ய மகா ராணி போல் அமர்ந்து கொண்டாய்; அதையும் பொறுத்துக் கொண்டேன். பொல்லாத மொழிபேசி கொல்லாமல் கொன்று போட்டாய்; அதையுங்கூட பொறுத்துக் கொண்டேன். புலியென என் புதல்வன் சீறி எழுந்த போதெல் லாம், உறைவீட்டுக் கிளம்பிய வாளை உடனே தடுத்து உன் உயிரைக் காப் பாற்றி யிருக்கிறேன். காரணம் என்ன? கத்தி முனையிலே சோழ நாட்டின் சொர்ண விக்ரகத்தை நிறுத்தியிருக்கும் புத்திகெட்டவளே! உன்னைத்தான் கேட்கிறேன். நான் பொறுமையாய் இருந்ததற்கு கார ணம் என்ன?

வ. சே: அது உன் பூர்வஜன்ம வினை.

பத்: இல்லை, புருஷன்மீது வைத்த அன்பு. அவருடைய பொருள் நீ. அந்தப் பொருளுக்குத் தீங்கு செய்து கணவருக்குக் கவலை உண்டாக்கக் கூடாதென்று கருதினேன். ஆனால் இன்று நீ என் கணவரையே காராக் கிரகத்தில் அடைத்து விட்டாய். வசந்தசேனை! இன்றுவரை காட்டிய பொறுமையின் பேரால் கேட்கிறேன். உனக்கு நாடுதானே வேண்டும்? எடுத்துக்கொள். நடத்து உன் ராஜ் யத்தை! எங்களுக்கு காடு போதும். எங்கள் எல்லோரையும் விட்டுவிடு.

வ. சே: ஆ! உங்களை விட்டு விடுவதா? கனவு காணாதே! சோழ சாம்ராஜ்யத்தின் சாம்பல்மேடு இன் னும் அரை நொடியில் என் காலடியில் குவியப் போகிறது.

பத்: வசந்தசேனா! உண்மையின் சொரூபம், புயலாக உருவெடுத்தால் அந்த சாம்பல் மேட்டில் நீ அமிழ்ந்து விடுவாய் ஜாக்கிரதை!

வச: என்னையா பயமுறுத்து கிறாய்?

பத்: ஆமாம், உன்னைத்தான்! வான் பெய்யா நாடு! மான் துள்ளும் காடு! தேன பொழியும் வீடு எங்கள் சோழ மண்டலம். அங்கே காதல் கமண்டலம் ஏந்தி வந்தவளே! சூழ்ச்சி பல வகுத்து சுந்தர வாழ்வை சூறை யிட்டவளே! வந்தவளை வரவேற்று இத்தனை நாள் இன்பமாக வாழ இட மளித்தேன். இன்றோ ஆள்வதற்கு நீ: மாள்வதற்கு நாங்கள் என்று ஆணவம் பேசுகிறாய், இல்லை! உன் னுடைய அழிவுக்கு நீயே ஆரத்தி எடுக்கிறாய். வீணே அழிந்து போகாதே!

வ. சே: என்ன சொன்னாய்? (கன்னத்தில் அறைகிறாள்.)

மனோ: அம்மா!

பத்: மனோகரா! என் மங்காத புகழ்விளக்கே! மன்னித்துவிடடா என்னை! சோழ சாம்ராஜ்யத்தின் மேன்மையை காப்பாற்றுவதற்காக நீ வீறு கொண்டு எழுந்து வீர காவியம் தீட்டும் போதெல்லாம் எழுத்தா ணியை மறைத்து வைத்தும், ஏடுகளை ஒளித்து வைத்தும், தடுத்து நின்ற பழிகாரி நான்தான்! தாயின் ஆணை யைத் தலைமேல் கொண்ட என் தங்கமே! அநீதியை அழித்துவிடு என்று உன் அன்னையே இப்போது உத்தரவிட்டாலும் அசைய முடியாத நிலை பெற்றுவிட்டாய்! என் செல் வமே! அழிந்தது! எல்லாம் அழிந்தது!

மனோ : இல்லையம்மா! இல்லை! அநீதியை அழித்துவிடு என்று என் அன்னையே. இப்போதாவது கட்டளை இடுங்கள்! கடைசி நேரம்! கடைசி வேண்டுகோள்! என் தமிழ்த் தாயே! இன்பச் சோலையினை இடையே தோன்றிய கணவாயின் வழியாக இந்தப் பூமியிலே குடியேறி நிலைபெற்றுவிட்ட குள்ளநரி, இன்று ஆட்சிபீடம் ஏறுவதற்கு அச்சாரம் போட்டுவிட்ட அக்ரமத்தைக் கண்ட பிறகாவது அனுமதி தருவீர்களா? வாள் வேண்டாம் தாயே—வாய் மொழி ஒன்றுபோதும். படை வேண்டாம் தாயே! தாயின் தடை நீங்கினால் போதும்! கட்கம் தர வேண்டாம் தாயே! ஒரு கண் ஜாடை போதும்! உங்களுக்கும், எனக்கும் எல்லோருக்கும் விடுதலை. எங்கே தாயே உத்திரவு? உத்திரவு கொடுங்கள்! உருத்தெரியாமல் *ஆக்குகிறேன் இவர்களை.

பத் : என் அருமைச் செல்வமே! உன் தந்தையின் நன்மைக்காகத் தான் உன் வீரக் கரங்களைக் கட்டிப் போட்டேன். இந்த விஷமக்காரியின் முன்னே சிரம் தாழ்த்தி நின்றேன். யாருக்காக பொறுமை பொறுமை என்று சொல்லி வந்தேனோ அவரையே சிறையில் பூட்டி விட்ட பிறகு பொறுமைக்கு எங்கே இருக்கிறது பெருமை? மனோகரா! பொருத்தது போதும். பொங்கியெழு!

மனோ : அம்மா!

பத் : தாயின் ஆணை கிடைத்து விட்டது. புறப்படு! மனோகரா! மனோகரா!! மனோகரா!!!

மாதர் குலத்தின் மணி விளக்கும் மாவீரன் மனோகரனது மாதாவுமான பத்மாவதி, அரசசபையில் நடு நாயகமான இடத்தில் வைக்கப் பட்டிருக்கும் அரசனின் சிலைமுன் நின்று கதறிக் கண்ணீர் உகுக்கிறாள்.

பத் : மகாராஜா! நம்முடைய செல்வக் குடும்பம் எப்படி சிதறுகிறது பார்த்தீர்களா? கட்டுண்டு துடிக்கும் மனோகரனைப் பாருங்கள்! மனோகரனைப் பாருங்கள் மகாராஜா! மகாராஜா!! மகாராஜா!!!

எரிமலையெனக் குமுறிக் கொந்தளிக்கும் பத்மாவதியைப் பார்த்து காமக்கள்ளியும்—அவள் கைப் பொம்மையான உக்ரசேனனும் எள்ளி நகையாடுகிறார்கள்.

பத் : ஏன் சிரிக்கிறீர்கள்? செவ்வாழைத் தோட்டத்திலே குதித்தாடும் குரங்குகளே! மங்கை உருவில், மகான் உருவில், இந்த மண்ணை வளைக்க வந்த மகா பாதகர்களே! இப்படிச் சிரித்தவர் வாழ்ந்ததில்லை அழுதவர் கெட்டதில்லை என்று ஜெகம் சொல்லும் சரித்திரத்தை மறந்தவர்களே! செப்படி வித்தையால் செழுந் தமிழர் செங்கோலை முறிக்க வந்த சிறு நரிக் கூட்டமே! சிரிக்காதே! கண்ணீரின் வலிமையை உணர முடியாத கயவரின் கும்பலே! கண்ணீர் துளிகள் சாதித்ததை கத்தி முனையும் சாதித்ததில்லை என்பதை மறந்து விட்டு சிரிக்காதே! நொந்து போனவர் மத்தியிலே சந்து முனை சிந்து பாடும் துரோகிகளே! சிரிக்காதிர்கள், சிரிக்காதிர்கள்!! தாயகத்து மண்ணே! உன் வீடகத்து திருவிளக்கு மனோகரனைப் பார்! சோழ மாதா! உன் சுந்தரத் தோளிலே வெற்றி மாலை சூட்டிய வீராதி வீரன் துடிதுடிக்கும் கொடுமையைப் பார்! அன்னியப் பகைவரின் ரத்தத்தால் உன் அழகு நெற்றிக்கு திலகமிட்ட மைந்தன் ... அய்யகோ! அடிமைத் தளையால் கட்டுண்டு தவிக்கும் காட்சியைப் பார்! சோழ குடும்பத்தின் கொலு மண்டபமே! என் வெற்றியின் உருவத்தை இந்த வீணர்கள் மத்தியிலே எவ்வளவு நேரம் தலை குனிய வைக்கப் போகிறாய்? பச்சிளங் குழந்தை—பட்டத்திளவரசன்—பாராளும் மன்னன்—அத்தனை பேரையும் பழிவாங்கத் துடிக்கும் பாதகியைத் தாங்கி நிற்கும் பூமி மாதா! நீ நன்றியுள்ளவள் என்பது உண்மையானால்—மறக்குடியிலே பிறந்த மாதாக்களின் கண்ணீருக்கு சக்தி உண்டென்பது உண்மையானால்—மாற்றானுக்கு மண்டியிட்டறியாத மாவீரன் மனோகரன் என் மகன் என்பது உண்மையானால்—இந்த சங்கிலி பொடிப் பொடியாகட்டும்! அக்ரமக்காரர்களின் சிரிப்பு அடங்கட்டும்! இந்த மண்டபமே இடிந்து தூள் தூளாகட்டும்! தூள் தூளாகட்டும்!! தூள் தூளாகட்டும்!!!

உள்ளத்திலே உறம்—நெஞ்சிலே 'தஞ்சமென்பது கிடையாது என்ற வீரம்'-வாளைச் சுழற்றியும், வேலை வீசியும் உடலிலே உண்டான வலிமை-எல்லாவற்றுக்கும் மேலாக தன் தாயை வேசி என்றழைத்த வசந்தசேனையை தன் வாளுக்கிரையாக்கி உள்ளத்தில் ஆவலை நிறைவேற்ற வேண்டும் என்ற துடி துடிப்பு-இத்தனையுமாகச் சேர்ந்து மனோகரனுக்கு மதயானையின் வலிமையை உண்டாக்கி விடுகின்றன. தன்னைப் பிணைத்திருந்த சங்கிலியை அறுத்து, தூணை தூள் படுத்திவிட்டு உக்ரசேனன் மீது பாய்கிறான் அவன்.

உக் : *பிடியுங்கள் அவனை! கைது செய்யுங்கள்!*

வ. சே : *குத்துங்கள்! கொல்லுங்கள்!*

உக்ரசேனன் மனோகரனால் கொல்லப்படுகிறான். பாண்டியன் படையும் உதவிக்கு வருகிறது. கமண்டல மேந்தி, காஷாய உடையுடன் கள்ளத்தனமாக நுழைந்த கயவர்களை பாண்டிய வீரர்கள் தங்கள் வாட்களின் கூர்மையைப் பரிசோதிக்க உபயோகிக்கிறார்கள். குழந்தை கேசரிவர்மனால் காப்பாற்றப்படுகிறது.

வசந்தி மனோகரன் மீது வீசிய கட்டாரி வசந்தன் மீது பாய்கிறது.

வ. சே : *வசந்தா!*

வச : *அண்ணா!*

மனோ : *வசந்தா..! வசந்தா...! வசந்தா...!*

வச : *அண்ணா! அண்ணா! என்னை ஒருமுறை 'தம்பி' என்று அழைக்கக் கூடாதா! சொல்லு அண்ணா 'தம்பி'ன்னு!*

மனோ : *தம்பி!*

வச : *அண்ணா இந்தப் பாவி வீசிய கட்டாரி உன் மீது பட்டிருந்தால் நீ எவ்வளவு வலியோடு கஷ்டப்படுவாய் என்பதை நான் உணருகிறேன். நீ வாழ வேண்டும். அண்ணா! அண்ணா!! நீதான் நாட்டை ஆளவேண்டும்! நான் சாக வேண்டும்!*

களங்கமற்ற உள்ளத்தைக் கொண்ட வசந்தன் சேனாவின் வாள் வீச்சுக்குப் பலியாகி விடுகிறான். மனோகரன் உருவிய வாளுடன் சேனாவிடம் நெருங்குகிறான்.

கேசரி : *வேண்டாம் இளவரசே! அவளை என்னிடம் விட்டு விடுங்கள். அந்த நல்ல காரியத்திற்காக நான் பல நாட்களாகக் காத்திருக்கிறேன். ஒரே வீச்சில் அவள் சாகக்கூடாது. இறுதி மூச்சுவரையில் கொஞ்சம் கொஞ்சமாகக் கொல்ல வேணடும்.*

தனக்கு வஞ்சமிழைத்து – சோழ வம்சத்தைச் சீரழித்து - செல்வங்கொழிக்கும் நாட்டை சின்னா பின்னமாக்கி சிதற அடிக்க முயன்ற சேனாவை சித்ரவதை செய்து கொல்லுகிறான் வர்மன்.

அர : *அம்மா, விஜயா! பத்மா, என் இதயராணி! என்னை மன்னித்து விடு.*

பத் : *வா, மனோகரா!*

அர : *மனோகரா!*

மனோ : *அப்பா!*

அர : *மைந்தனே! என்னை மன்னிக்க முடியாத குற்றத்தை நான் உனக்குச் செய்திருக்கிறேன்......*

மனோ : *அப்படியெல்லாம் சொல்லாதீர்கள். அதையெல்லாம் மறந்து விடுங்கள்.*

ராஜப் : *கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, கடைசியில் வெற்றி பெற்றே தீரும்! மன்னர் மன்னன வாழ்க!*

புருஷோத்தமன் பத்மாவதியுடனும் மனோகரன் விஜயாவுடனும் இன்ப வாழ்வை மீண்டும் துவக்குகின்றனர். ★

அந்தக் கோமாளி அந்த அழகியின் ஆட்டத்தை ரஸிக்கிருரா, சேஷ்டையை ரஸிக்கிருரா என்பதை அருணுவின் 'தூக்குத் தூக்கி' விளக்கிவிடும்!

—லலிதா-பாலய்யா.



ஆர். ஆர். பிக்சர்ஸின் 'கூண்டுக் கிளி'யில் அழகு, நடிப்பு, ஹாஸ்யம் எல்லாம் இருக்குமென்பது படங்களைப் பார்த்தால் தெரியவில்லையா! —சிவாஜி கணேசன், சாரங்கபாணி, குசலகுமாரி நடிக்கும் காட்சிகள்.

கட்டாயம் வெற்றி!

வித்யாவதி

சினிமா பார்க்கிறது இருக்கிறதே அது சாப்பாடு சாப்பிடுவதைப்போல. வாழ்க்கையின் அவசியத் தேவைகளில் சினிமா பார்ப்பதும் ஒன்றாகி விட்டது. நமக்கு எப்போதாவது நல்ல விருந்து கிடைக்கிறது. அதைப போல எப்போதாவது நல்ல படங்களைப் பார்க்க முடிகிறது. எப்போதாவது நல்ல விருந்து கிடைக்கிறது என்பதற்காகத் தினசரி சாப்பாட்டைச் சாப்பிடாமலிருக்க முடியுமா? அதே போல எப்போதாவது நல்ல படம் பார்க்க முடிகிறதென்பதற்காக மற்ற படங்களை வெறுத்துத் தள்ளிவிட முடிவதில்லை. இப்படிச் சாப்பாடும் படமும் ஐக்கியமாகிவிட்டன, மனிதனின் தேவைகளில.

சினிமா பார்ப்பவர்களுக்கு மட்டும் தான இது பொருந்தும் என்று நினைத்து விடாதிர்கள்! நடிகர்களுக்கும்கூட மிகவும் பொருந்தும் தமக்குத் தெரிந்த வரை நல்ல படமாக இருக்கும் என்று நினைக்கும் படங்களில் மட்டும் நடிக்கவேண்டும் என்று கலைஞர்கள் திர்மானித்து விட முடியாது. திர்மானித்தால் சாப்பாட்டுக்கு தாளம் போடவேண்டியது தான் !

கதை பற்றிய பூராவிவரமும் வசனமும் எல்லா கலைஞர்களிடமும் கொடுக்கப்படுவதில்லை. அவர்கள் சம்பந்தப்பட்ட வசனமும் எதிரே பேசுபவரின் ஆரம்ப...முடிவு வசனங்களும் கொடுக்கப்படும். காட்சியின் விவரங்களை செட்டில்தான் அந்தக் கலைஞரால் புரிந்துகொள்ள முடியும். அந்தப் படத்தின் கதை புரிந்து விட்டாலும் கூட—அது நன்றாகப் படமாக்கப்படவில்லை என்பதை அறிந்தாலும்கூட, அதில் நடிக்க முடியாது என்று கூறிவிட முடியுமா? தனக்குக் கிடைக்கும் பாத்திரம கூடியவரை பிரதானம் நிறைந்ததா இல்லையா என்பதே கலைஞர் யோசனை செய்ய வேண்டிய-செய்கிற – விஷயமாகும்.

கதை தனக்குப் பிடித்ததாகவும், தனக்களிக்கப்படும் பாத்திரம் தனக்கு சௌகரியமானதாகவும் இருந்தால்தான் நடிக்க முடியும் என்று கலைஞர்கள் சொல்ல முடியாது. முதலில் ஒப்பந்தமாகும்போது கதை. பாத்திரத்தின் குணவிசேஷம் எல்லாவற்றையும் எல்லா முதலாளிகளும் எல்லா கலைஞர்களிடமும் கூறுவதில்லை, கிடைத்த சந்தர்ப்பத்தை விடக்கூடாது என்றே கலைஞர் நினைப்பர். இன்ன பாத்திரத்திற்கு இன்ன

ரைத்தான் போடவேண்டும் என்று பட முதலாளிகள் கருதுவதில்லை.

பல படங்கள் வெற்றியடைவதில்லை ஆனால் அதற்குக் காரணம் நடிக நடிகையரல்ல. படங்களின் வெற்றிக்குக் கலைஞர்கள் மட்டும் முழுதும் காரணமல்ல. ஒரு படம் வெற்றியடைவதற்குப் பல காரணங்கள் உண்டு. சில சமயம் காரணமே சொல்ல முடியாதபடி படங்களுக்கு திடீர் மார்க்கெட் ஏறபடுவதுண்டு.

சாப்பிடுவதுபோல...

ஒரு சில கலைஞர்கள் சில குறிப்பிட்ட பாத்திரங்களுக்காகவே ஒதுக்கப்பட்டு விடுகிறார்கள். அவர்கள் வெவ்வேறு குணவிசேஷமுள்ள பாத்திரங்களில் திறமையாக நடித்தாலும் கூட ரஸிகர்கள் ஒப்புக் கொண்டு விடுவதில்லை. கதாநாயகன் கதாநாயகனாகவேதான் இருக்க வேண்டும். வில்லன எப்போதும் வில்லனாகவே இருந்தாக வேண்டும். காமெடியன் காமெடியனாகவே இருக்க வேண்டும். அதாவது அந்தந்தப் பாகத்தில் புகழ்பெற்றவர்களால் மற்ற பாத்திரங்களில் வேறு உணர்ச்சிகளோடு நடிக்க முடியாது என்பது ரஸிகர்களின் தீர்மானம்.

வில்லன் பாலய்யா இருக்கிறாரே. அவர் பிரசன்னாவில் கதாநாயகனாக நடித்தார், ஆனால் ரஸிகர்கள் அவருக்குப் போதிய வரவேற்பளிக்கவிலலை. செண்பகவல்லியில் கதாநாயகனாக நடித்தார். அதைப் பாராட்டவில்லை. சித்ராவில் கதாநாயகனாகச் சிறப்பாக நடித்தார். அதையும் விரும்பவில்லை இந்த ரஸிகர்கள். பாலய்யா ஒரு திறமை மிக்க நடிகர் அல்ல எனறு யாராவது சொல்ல முடியுமா? ஆனால் அவர் ஏன் வில்லனாகவே நடிக்க வேண்டி யிருக்கிறது? வில்லன் வேஷத்தில் அதியற்புதமாக நடித்து விட்டார் ஆரம்பத்தில். (இப்போதும் கூடத்தான் என்பதை நான் வேறு சொல்ல வேண்டுமா?) அதுவே தொத்து வியாதியாகி விட்டது முதலாளிகளிடையே. மற்ற பாத்திரங்களில் பிரமாதமாகச் சோபிக்கக் கூடியவரானாலும்கூட வில்லன் பாத்திரத்திற்கு மட்டுமே அவரை ஏற்பாடு செய்வது என்று தீர்மானித்து விட்டார்கள். அதன பலன்தான் அவர் இன்று "வில்லன் பாலய்யா"வாகி விட்டார்.

காமெடியன் டி.ஆர். ராமச்சந்திரன் சமீபமாக வெளிவந்த ஜெமினியின் "ராஜி என் கண்மணி"யில் கதாநாயகனாக நடித்தார். ஹாஸ்ய கட்டங்களில ரஸிகர்கள் வயிறு வெடிக்கச் சிரித்தார்கள். சோக கட்டங்களிலும் சிரித்தார்கள்! அதுதான் ஆச்சரியம். இதே போல என். எஸ். கிருஷ்ணன் நல்லதம்பி, பணம், மணமகள் ஆகிய படங்களில் சோக கட்டங்களில் நடித்த போது ரஸிகர்கள் சிரித்தார்கள். அவர்கள ஹாஸ்ய நடிகர்கள் சோக கட்டங்களில் நடிப்பதை விரும்பாதவர்கள். அதனால் தான் ஹாஸ்ய நடிகர்கள் சோக கட்டங்களில் நடிக்கும்போது ரஸிகர்களுக்கு அதே பாவம் ஏற்படுஇல்லை. "என்னதான் இருந்தாலும் அவர் காமெடியன் வேஷத்திலேதான் சோபிப்பாரு. அழுவறதுக்கு லாயக் இல்லே" என்று கூறி விடுகிறார்கள் ரஸிகர்களிஸ் பலர்.

நல்ல பெண், கதாநாயகி, வில்லி மூன்று பாத்திரங்களில் வரும் நக்ஷத்திரங்களின் கதியும் இதுதான். நல்லவளாக வருபவள் வில்லியாக வந்தால் ரஸிகர்களுக்குப் பிடிக்காது! வில்லி கதாநாயகியாகத் தோன்றினால் 'சுகப்படவில்லை' என்று கூறி விடுவார்கள். கதாநாயகி தோட்டத்தில் கதாநாயகனுடன் கொஞ்சினால்தான் ரஸிகர்களுக்குப் பிடிக்கும!

ரஸிகர்கள் என்று நான் குறிப்பிடும் இவர்கள் தரை மகா ஜனங்கள் முதல் பதினைந்தணா வகுப்புவரை உள்ளவர்கள் — பட உலகின் ஜீவநாடிகள். இவர்கள் நமது பட உலக நீதிபதிகள். இந்த மேல் வகுப்பு (இங்கே குறிப்பிடுவது டிக்கட வாஙகுவதில்தான்) ரஸிகர்கள் இருக்கிறார்களே. அவர்

கள் கூறுவதைக் கேளுங்கள். 'நம்ம 'ஸ்டார்ஸ்' இருக்கிறார்களே அவர்கள் ஒரே 'டைப்' பாத்தான் ஆக்ட் பண்ணுகிறார்கள். எல்லாப 'போர்ஷன்ஸ'லேயும் ஆக்ட் பண்ண அவர்களாலே முடியாது. அழற நடிகர் அழுதுண்டே யிருப்பார். சிரிக்கிறவர் சிரிச்சுண்டே இருப்பார். எல்லாம் ஒரே டைப்தான்! பாரின் கன்டிரீஸில் (வெளி நாடுகளில்) எல்லாம் ஒரே ஆக்டர் எல்லா போர்ஷன்ஸிலேயும் பியூட்டிபுல்லா ஆக்ட் பண்ணுகிறார்கள். சே...சே... நம்ம ஸ்டார்ஸ் யூஸ்லெஸ்...யூஸ்லெஸ்...'' என்று கூறிய படி காரிலேறி வீடு திரும்பிவிடுவார்கள். இத்தகைய ரஸிகர்கள். இவர்களில் பர்திப்பேருககுமேல் 'ஒசி'ப் பேர்வழிகளாக இருப்பார்கள் என்பதை நான் குறிப்பிட(!)விரும்பவில்லை!

ஆக இப்படிப்பட்ட அபிப்பிராயங்களால் கலைஞர்கள் ஒரே நிலையில் நசுக்கப்படுவதைப் பற்றி வருந்தாமலிருக்க முடியாது.

அப்படியானால் படங்கள் தோல்வியடைவதற்குக் காரணம் நடிகர்கள் நசுக்கப்படுவதா. கதையா? எது? இதற்கு யாரைக் குறைகூற முடியும்? இநதக் கேள்விகள் பட உலகம் ஆரம்பமானது முதல் கேட்கப்பட்டு வருகின்றன. அவைகளுக்கு என்ன பதில் கூறப்பட்டிருக்கிறது? பதில் கூற முடியுமா? நடிகர்கள் அல்ல என்றுதான் நான் அழுத்தமாகக் கூறுவேன். தனித் தனியாக யார் மீதும் குறை கூற முடியவும் முடியாது.

சகலரது ஒத்துழைப்பும் இருந்தால் தான் இந்தத் தொழில் வெற்றியடைய முடியும். சிலர் ஒத்துழைக்கா விட்டாலுங் கூட இந்தத்தொழில் படுத்து விடும் என்று கூறக் கூடிய ஒரு

அழுவறதுக்கு லாயக்கில்லே...

நீதிபதிகள்...

தொழில் உலகில் உண்டு என்றால் அது படத்தொழில்தான்.

பிரதி வருஷமும் தென்னிந்தியாவில் மட்டும் சுமார் நூறுபடங்கள் தயாராகின்றன. அவற்றுள் சுமார் தொண்ணூற்றைந்து படங்கள் படுத்துக் கொள்ளுகின்றன. அப்படியானால் அத்தனை படங்களில் வேலை செய்தவர்களுக்கும் திறமை இல்லை என்று அர்த்தமா? அவர்கள் அந்தப் படம் தோல்வியடைய வேண்டும் என்ற தீர்மானத்தோடுதான் அதில் ஈடுபட்டு பணம், காலம் இவற்றை வீணாக்குகிறார்களா? அல்லது ரஸிகர்கள் வேண்டுமென்றே படங்களுக்குப் போவதில்லை என்று தீர்மானித்து விட்டார்களா? இல்லை, அப்படியெல்லாம் இல்லை. ஆசையோடு லாபத்தை எதிர்பார்த்துத்தான் தயாரிப்புத் தொழிலில் இறங்குகிறார்கள். படத்தில் எல்லா அம்சமும் நிறைந்திருப்பதில்லை. ஏதாவது குறைகள் இருக்கத்தான் செய்கின்றன. குணம் அதிகமிருந்து குறை மறையக்கூடியதானாலும் பரவாயில்லை. குடம் பாலில் சொட்டு விஷம்போல குறை அமைந்து விடுகிறது. படம் படுத்து விடுகிறது, அவ்வளவுதான்.

கதை, வசனம், பாடல், நடிப்பு, டைரக்ஷன், நடனம், ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு, மேக்-அப் மற்றும் பட சம்பந்தப்பட்ட சகல பிரிவுகளும் திறமையுடனும் கட்டுப்பாட்டுடன் ஒற்றுமையுடனும் செய்யப்பட வேண்டும். இதில் யாராவது ஒருவர் கடமையில் அசிரத்தை காட்டினாலும் அந்த ஒரு பிரிவின் காரணமாகவே படம் படுத்துவிட இடமுண்டு. இக்குறை தெரியாதபடி மற்ற அம்சங்கள்

அமோகமாக அமைந்து விட்டால் படம் வெற்றியடையலாம்.

ஆனால் அப்படி எல்லாப் படங்களும் அமைந்து விடுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது!

படங்கள் தோல்வியுறுவதற்கு நடிக நடிகையரைக் குறைகூற முடியாது என்று குறிப்பிட்டேன். தனிப்பட்ட ஒருவரை என்று குறிப்பிடுவது மிகவும் பொருந்தும். அப்படியானால் படங்கள் தோல்வியடையாமலிருக்க என்ன செய்ய வேண்டும்? அதற்குச் சில நியதிகள் உண்டு. அவைகளைக் கடுமையான அளவிலே கடைப்பிடித்தால்—பீஷ்மன், பகிரதன் போன்றவர்களின் கடுமையான விரதத்தைப் போல் நாமும் கைக்கொண்டால்—படங்கள் வெற்றியடைந்தே திரும்.

முதலில் என்ன செய்யவேண்டும்? நல்ல கதைகளை—சமூகத்துக்கும் கருத்துக்கும் உகந்த கதைகளை. சிக்கலில்லாமல் எளிதாகப் புரியவைக்கும் சம்பவங்களோடு வசனம் படத்திற்கேற்றவாறு அமைக்கவேண்டும். முதல் காட்சியிலிருந்து கடைசி காட்சிவரை திட்டமாக்கப்பட வேண்டியவற்றை காகிதத்திலேயே படம் பிடித்துவிட வேண்டும். இதற்கு பல மாதங்கள்—ஏன் வருஷங்கள்கூட ஆகலாம். அதனால் சேதமில்லை. எழுத்து வேலை மட்டும்முழுக் கவனத்துடன் செய்யப்பட்டால் அதுவே படத்தின் வெற்றிக்குப் பெரிதும் காரணமாகிவிடும்.

நல்லவள்...

பெருவாரியாகப் பணம் செலவழித்து ஸெட்டுகள் போட்டு விட்டால் மட்டும் போதாது. அதை வீணாக்காமல்—அந்த ஸெட்டிலே விவாதங்கள் வைத்துக் கொள்ளாமல்—படப்பிடிப்பை ஆரம்பித்துவிட வேண்டும். அதற்கு 'பேப்பர் ஒர்க்' தான் மிகமிக அவசியமானது. அது சரியாக இருந்தால் எல்லாம் சரியாகிவிடும். இதன் பின் தகுதியான ஆட்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இதுவரை சரியாக அமைந்து விட்டால் பாதி வேலை முடிந்துவிட்டது.

பிறகு ஸெட்டிலே போய் வேலைகளைத் துரிதமாகச் செய்ய வேண்டும். ஸ்டுடியோவில் ஸெட் தயாரானதும் தொடர்ந்து படப்பிடிப்பை நடத்தும் அளவிலே வேலைகளைப் பிரித்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் ஒவ்வொரு பொறுப்பை ஏற்றுச செய்யவேண்டும். சக்தியைச் சிதறவிடக்கூடாது. டைரக்ஷன், சங்கீத டைரக்ஷன், காமிரா, நடிப்பு என்று பல பிரிவுகளின் பொறுப்பையும் ஒருவரே ஏற்றால் அவர் திறமை ஏதாவது ஒன்றில்கூடச் சோபிக்காமல் போய் விடுவதை நாம் பார்க்கிறோம். அவரவர் பொறுப்பை அவரவர் தனியாக மட்டுமே கவனிக்க வேண்டும்.

89679

வில்லி...

இப்படித் தயாராகும் ஒரு படம் வெற்றியடையத்தான் செய்யும். நிறைய பணம் கொடுக்கா விட்டாலும் நல்ல படம் என்ற பாராட்டைப் பெறும்; நஷ்டத்தையும் உண்டு பண்ணாது. ஏனெனில், செலவுதான் அதிகம் செய்யப் போவதில்லையே! ★

இதுவரையில் யாரும் சினிமாவிலோ நாடகத்திலோ
நடத்தாததும், எங்களைத் தவிர யாரும் நடத்த உரிமை
இல்லாததும் ஏராளப்பொருட் செலவில்
தயாரித்ததுமான நாடகம்

சாமியே சரணம்



ஐயப்பா

தேனம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில்

நவாப் T. S. ராஜமாணிக்கம் கம்பெனியாரின்

சபரிமலை

ஸ்ரீ ஐயப்பன் நாடகம்

தினசரி மாலை 6–30 மணிக்கு நாடகம் நடைபெறும்.
ஸ்பெஷல் பஸ் வசதிகள் செய்யப்பட்டுள்ளது

அமைப்பாளர் : **The Stage**

ஏப்ரல் 13-ம் தேதி முதல் தமிழ் நாடெங்கும்
புத்மினி பிக்சர்ஸ்
கல்யாணம் பண்ணியும் பிரம்மசாரி
டைரக்ஷன்:
ப. நீலகண்டன்
மதராஸ் பிக்சர்ஸ் வெளியீடு
PSR